padippakam

# அகதி

இதழ் 10: ஒக்டோபர் 1996

# NMRO VS SLMC



○ வடக்கு முஸ்லிம் அகதிகளுக்கான மீள் குடியேற்றம் பலவந்தமானதா?

○ இலங்கை அரசும் வடக்கு முஸ்லிம் அகதிகளும் :

விலை ரூபா பத்து

எம்முடைய தாயகமும் வடக்கே

படிப்பகம்

padippakam

# ஒன்று படுவோம்

ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்கு உடன் பிறந்த சகோதராவார். அவருக்கு துரோகம் செய்யமாட்டார். அவருக்கு உதவி செய்யத் தயங்கமாட்டார். ஒரு முஸ்லிமின் உடமை, உயிர், மானம் ஆகியவை இன்னொரு முஸ்லிமின் மீது ஹராமாகும். இறையச்சம் என்பது இங்கேதான் (இதயத்தில்) உள்ளது. ஒருவர் தனது சகோதர முஸ்லிமை இழிவாகக் கருதுவது அவருக்குத் தீமை சேர்க்கப் போதுமாகும்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்கள்: முஸ்லிம், திர்மிதி

ஒரு முஸ்லிமுக்கு ஏற்பட்ட இவ்வுலக துன்பம் ஒன்றை இன்னொரு முஸ்லிம் நீக்கினால் மறுமை நாளின் துன்பங்களில் ஒன்றை அல்லாஹ் அவரை விட்டும் நீக்குகிறான். இவ்வுலகில் சிரமப்படுபவருக்கு உதவினால் இவ்வுலகிலும் மறுமையிலும் அவருக்கு ஏற்படும் சிரமத்தின் போது அல்லாஹ் உதவுவான். இவ்வுலகில் ஒரு முஸ்லிமின் குறையை மறைத்தால் அவரது குறையை இவ்வுலகிலும் மறுமையிலும் அல்லாஹ் மறைப்பான். ஒருவர் இன்னொரு அடியானுக்கு உதவி செய்யும் போதெல்லாம் அவருக்கு அல்லாஹ் உதவி செய்கிறான்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்கள்: முஸ்லிம், அபூதாவூத், நஸயீ, திர்மிதி, இப்னு மாஜா

நீங்கள் உங்களிடையே உறவை முறித்துக் கொள்ளாதீர்கள்! ஒருவரை ஒருவர் புறக்கணிக்காதீர்கள். ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ளாதீர்கள். ஒருவர் மீது ஒருவர் பொறாமை கொள்ளாதீர்கள் அல்லாஹ்வின் அடியார்களாகவும் உடன் பிறந்த சகோதரர்களாகவும் ஆகிவிடுங்கள். எந்த முஸ்லிமும் தனது சகோதரனை மூன்று நாட்களுக்கு மேல் வெறுப்பது கூடாது.

அறிவிப்பவர்: அனஸ் (ரலி)
நூல்கள்: புகாரி, முஸ்லிம்

ஒரு முஸ்லிம் தனது சகோதரனை மூன்று நாட்களுக்கு மேல் வெறுக்கலாகாது. இருவரும் சந்திக்கும் போது அவர் இவரைப் புறக்கணிக்க வேண்டாம். அவ்விருவர்களில் யார் ஸலாமைக் கொண்டு முந்துகிறாரோ அவரே அவ்விருவரில் சிறந்தவர்.

அறிவிப்பவர்: அபூ அய்யூப் (ரலி)
நூல்கள்: புகாரி, முஸ்லிம்

ஒரு பகுதி இன்னொரு பகுதியை வலுப்படுத்திக் கொண்டிருக்கும் ஒரே கட்டிடம் போல் ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமிடம் இருக்க வேண்டும்.

அறிவிப்பவர்: அபூமூஸா (ரலி)
நூல்கள்: புகாரி, முஸ்லிம், திர்மிதி

ஒவ்வொரு வியாழன், திங்களில் மக்களின் நல்லறங்கள் சமர்பிக்கப்படுகின்றன. அல்லாஹ்வுக்கு எதனையும் இணைவைக்காத ஒவ்வொருவரையும் அல்லாஹ் மன்னிக்கிறான். ஒரு மனிதருக்கும் அவரது சகோதரருக்கும் இடையே பகை இருந்தால் அவனை மன்னிக்காமல் இவ்விருவரும் சமாதானமாகும் வரை இவ்விருவரையும் விட்டு விடுங்கள் என்று கூறிவிடுவான்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: முஸ்லிம்

படிப்பகம்

padippakam



بسم الله الرحمن الرحيم

# அகதி

# அகதி

இதழ் 10: ஒக்டோபர் 1996

தொடர்புகள்

வடக்கு முஸ்லிம்களின்
உரிமைக்கான அமைப்பு
15 A, ரோஹினி வீதி,
கொழும்பு 6
ஸ்ரீ-லங்கா
தொலை பேசி: 593523
பெக்ஸ் 586660

"AHATHI"

Published by
NORTHERN MUSLIMS'
RIGHTS ORGANIZATION
15A, Rohini Road
Colombo - 6
Sri Lanka

இச்சஞ்சிகையில் வெளியாகும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவரே பொறுப்புடையவர்கள்.

## NMRO VS SLMC

1996 ஒக்டோபர்! ஆம் இது வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் ஆயுத முனையில் புலிகளால் வெளியேற்றப்பட்டு ஆறுவருடங்கள் பூர்த்தியடைந்து விட்டதை நினைவுபடுத்துகிறது.

முஸ்லிம்கள் வடக்கில் நீண்ட காலம் பாரம்பரிய வரலாற்றை தன்னகத்தே கொண்டிருந்தனர். அங்கிருந்த அனைத்து சமூக மக்களுடன் சகல துறைகளிலும் ஒன்டறக்கலந்து ஐக்கியத்துடனும் ஒற்றுமையுடனும் வாழ்ந்து வந்த முஸ்லிம்களை உடைமைகள் அனைத்தையும் பறித்து வெறுங்கையுடன் குறுகியகால அவகாசத்தில் கொட்டும் மழையில் விரட்டப்பட்டதை அவர்கள் எங்ஙனம் மறக்க முடியும்?

இலங்கையில் வாழும் தமிழர்களது உரிமைகள் பேரினவாதிகளால் மறுக்கப் படுவதாகவும் அதனை வென்றெடுப்பதற்கு ஜனநாயக வழிமுறைகளினால் மேற்கொள்ளப் பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்ததால்தான் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைக்க வேண்டி ஏற்பட்டதாக ஆயுதப் போராட்டத்தை நடத்தி வரும் புலிகள் உட்பட அப்போராட்டத்தில் நம்பிக்கை வைத்துள்ள சக்திகள் யாவும் நியாயப்படுத்தி கூறி வருகின்றனர்.

தாம் எந்த உரிமைகளுக்காக போராடுகிறார்களோ, அதே உரிமைகளை தமது சிறுபான்மையான முஸ்லிம் சமூகத்துக்கு வழங்க மறுத்த புலிகள் இயக்கத்தினரின்



படிப்பகம்

padippakam



போராட்டத்தின் நியாயங்கள் புரியாத புதிராகவே உள்ளன.

தமிழர்களின் உரிமைக்கான போராட்டங்களில் காலாகாலமாக வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் தமிழர்களுடன் இணைந்து போராடி வந்துள்ளார்கள். ஆயுதப் போராட்டத்தில் தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்த பொழுதுகூட அதிலும் முஸ்லிம் இளைஞர்களும் இணைந்து போராடி மடிந்திருக்கிறார்கள். முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பொழுது அவர்களுடன் இணைந்திருந்த சில முஸ்லிம் இளைஞர்களை புலிகள் இன்றும் கூட தடுத்தே வைத்திருக்கின்றனர். இவ்வாறாக சகல போராட்டங்களிலும் ஒன்றிணைந்து பங்கு பற்றிய முஸ்லிம்களைத்தான் புலிகள் அநியாயமாக போலிக் காரணங்களைக் கூறி அன்று 1990 ஒக்டோபரில் வெளியேற்றினார்கள்.

இன்று இந்த முஸ்லிம்கள் வடக்குக்கு வெளியே இரண்டாம் தரப் பிரஜைகளாக உரிமைகள் மறுக்கப்பட்ட சிதறடிக்கப்பட்ட சமூகமாக வாழ்ந்து வருகின்றனர். இந் நிலையில் எங்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு எங்களது பிரச்சினைகளை வெளியுலகத்துக்கு எடுத்துச் சொல்வதற்கு யார் இருக்கிறார்கள்?

எனவே நாங்களே எங்களுக்காக குரல் கொடுக்கும் பொழுது ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் எங்கள் மீது கோபம் கொள்கிறது. ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் முஸ்லிம்களின் உரிமைக் குரலாக இருக்கிறது என்றும், தாங்கள் இம்முஸ்லிம்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருவதாகவும், தங்களால் இம்முஸ்லிம்கள் பல பயன்களையும் நன்மைகளையும் பெற்றிருப்பதாகவும் இருந்தும் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு (NMRO) தங்களைக் குறை கூறுவதாகவும் வடக்கு முஸ்லிம் அகதிகளின் குரலான 'அகதி' தங்களைப் பற்றி விமர்சிப்பதாகவும் கட்சியின் தலைவர் உட்பட முக்கிய அதன் பிரமுகர்கள் பல பொது இடங்களில் பேசி வருகிறார்கள்.

வடக்கு முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரஸுக்கோ அதன் நியாயமான போராட்டங்களுக்கோ எதிரானவர்கள் அல்ல என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் இன்று ஆட்சியில் பங்காளியாக இருக்கவும் அமைச்சர் அஷ்ரப் தனித்துவத் தலைவராக மாறவும் காரணம் வடமாகாண முஸ்லிம்கள் வழங்கிய இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களே என்பதை ஒரு போதும் மறக்கலாகாது. தேர்தல் காலத்திலும் அதன் பின் பதவிக்கு வந்த வேளையிலும் அளித்த வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிடக் கூடாது. வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினையை வெளிக்கொண்டு வருவதற்காகவும் அவர்கள் இழந்து நிற்கும் உரிமைகளை மீட்டெடுப்பதற்காகவும் முஸ்லிம் காங்கிரஸ் கடந்த இரண்டு ஆண்டுகளாக எடுத்த நடவடிக்கைகள் தான் என்ன?

ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் தன்னை தேசிய அமைப்பாக இனங்காட்டிக் கொண்ட போதிலும் அதனது முழுக் கவனமும் கிழக்கை நோக்கியே இருக்கிறது. புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக அதன் தலைவர் பதவியேற்றதன் பின்னர் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏதேனும் எடுக்கப்பட்டதா? சந்திரிகா, அஷ்ரப் ஒப்பந்தம் வடக்கு முஸ்லிம்களுக்காகச் செய்யப்பட்டதாக மு.காங்கிரஸ் கூறுகிறது. அவ்வாறாயின் இதுவரையிலும் முழுமையாகப் பகிரங்கப்படுத்தாமல் வைத்திருக்கும் அந்த ஒப்பந்தத்தை, இனிமேலாவது இம்மக்களுக்காக தலைவர் பகிரங்கமாக வெளியிட வேண்டும். கிழக்கோடு ஒப்பீட்டளவில் நோக்கும் பொழுது "ஆயிரத்தில் ஒன்று" கூட, நஷ்டஈடு, வேலை வாய்ப்பு, மற்றும் ஏனைய துறைகளில் இம்மக்களுக்கு இல்லையென்பது வடக்கு முஸ்லிம்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. இன்று ஆட்சியின் பங்காளியாக இருந்து கொள்வதற்கும், வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்களின் வாக்குகள் தான் காரணம் என்பதை ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் தலைவரோ, கட்சியினரோ மறுத்துரைக்க முடியுமா? அவ்வாறான நிலையில் இம்மக்கள் ஏன் புறக்கணிக்கப்பட வேண்டும்?



படிப்பகம்

padippakam



அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் வடகிழக்கு முஸ்லிம்களுக்குரியவர் அல்ல இந்நாட்டு மக்களுக்குரியவர் என்று அவர்கள் கூறி வருவதும் நாம் அறிந்ததே. இந்நாட்டில் இனப்பிரச்சினைத் தோற்றத்தின் பின்பே அதுவும் 1987க்கு பின்னரே புனர்வாழ்வு அமைச்சு என்ற ஒன்று உருவாக்கப்பட்டது. இலங்கையின் இனப் பிரச்சினை வரலாற்றில் எந்த ஒரு சமூகமும் சந்திக்காத மிக மோச மான அனுபவத்தை வடக்கில் அவர்களது **தாயக உரிமை** மறுக்கப்பட்டு வெளியேற் றப்பட்டதன் மூலம் வடக்கு முஸ்லிம்கள் பெற்றிருந்தார்கள். எனவே அனைத்து மக்களையும் விட புனர்வாழ்வு நடவடிக்கை களில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய வர்கள் இம்மக்களே என்பதை நியாயப் பூர்வமான உணர்வு உள்ளவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். இவ்வாறு இருக்கும் பொழுது புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரான எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களை இம்மக்களுக்குச் செய்த பணிகளை கிழக்குக்குச் செய்த பணியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் படி வேண்டுகின்றோம்.

கிழக்கில் வாழும் மக்களுக்கு அவர் செய்யும் பணிகளுக்கு நாம் எதிரானவர்களல்ல. தாராளமாக மேலும் மேலும் செய்யட்டும் நாங்கள் அதை வரவேற்கிறோம். அதே நேரத்தில் வடக்கு மக்களுக்கு அவர்களது உண்மையான அபிலாஷைகளைப் புரிந்து அவர்களுடன் கலந்துரையாடி அவர்களது தேவைகளை நிறைவு செய்வதுடன் அவர்க ளுக்காக குரல் எழுப்பக் கூடியதாக கட்சியின் தலைமையும் கட்சியும் இருக்க வேண்டும் என்றே இம்முஸ்லிம்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் அவ்வாறு எதுவுமே நடைபெறவில்லை.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தங்களது உரிமைகள் மறுக்கப் படுகிறது, புறக்கணிக்கப்படுகிறது என்கிற உண்மையை அனுபவரீதியாக நன்கு உணர் ந்ததன் பின்னர்தான் அவர்கள் ஒன்றி ணைந்து தங்களது பிரச்சினைகளைப் பற்றி கொழும்பில் 26.7.92ல் நடைபெற்ற மாநாட்டில் கதைத்தனர். அம் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் உதயமானது தான் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு (NMRO) ஆகும்.

வடக்கு முஸ்லிம் மக்களின் வாக்கு களைப் பயன்படுத்தி மு.காங்கிரஸ் ஆட்சியின் பங்காளியாக வந்ததன் பின்னர் எமது மக்களின் விருப்பத்திற்கு இணங்க NMRO-SLMC தலைமைத்துவத்தைச் சந்தித்து இம்மக்களுடைய பிரச்சினை சம்பந்தமாக நீண்ட நேரம் கலந்துரையாடியது. நாம் எமது மக்களின் அபிலாஷைகளை மு.காங்கிரஸின் கவனத்துக்கு கொண்டுவந்ததன் காரணம் ஆட்சியில் பங்காளியான அவர்கள் வடக்கு முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுத்துத் தருவார்கள் என்பதாகவே இருந்தது.

ஆனால் நடந்தது என்ன? உரிமைகளை வென்றெடுத்துத் தருவதாக அமைச்சர் அஷ்ரப் தந்த வாக்குறுதிகளை இன்றுவரை நிறை வேற்றினாரா? நாம் இதுவிடயமாக, கட்சியின் பொதுச் செயலாளருக்கு பதிவுத் தபால்களில் அனுப்பிய நினைவூட்டும் கடிதங்களுக்கு பதில் கூட எமக்கு சரியாகத் தரப்படவில்லை. ஒரு தடவை வந்த பதிலில் பொதுச் செயலாளரின் செயலாளர்தான் இது பொதுச் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக பதில் தந்திருந்தார்.

உரிமைகள் இல்லாதபோது சலுகை களும் வசதிகளும் ஒரு மனிதனுக்குத் தன்மானத்தையும் கௌரவத்தையும் எவ்வளவு காலத்திற்குக் கொடுக்கப்போகிறது? குடி யிருப்பு மாதிரிக் கிராமங்கள் தொடர்பாக சீரான ஓர் ஆலோசனையை மக்கள் அபிப்பிராயத்தோடு NMRO புனர் வாழ்வு அமச்சருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் இவ்வருடம் ஜனவரியில் வழங்கியிருந்தும் அது கிடைத்ததற்கான ஒரு பதில் கூட NMRO விற்கு தரப்பட்டதா? அல்லது அவ் ஆலோசனைகளை புனர்வாழ்வு அமைச்சால் கவனத்திற்கு எடுக்கப்பட்டதா?

இந்நிலையில் வடக்கு முஸ்லிம் களிடத்தில் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் பற்றிய செயல்பாடு எமக்கு கேள்வியை எழுப்புகிறது.



படிப்பகம்

padippakam



வெறுமனே கட்சியின் வளர்ச்சிக்காக கிளைகளையும் அதற்கான குழுவையும் வடக்கு முஸ்லிம் அகதிகள் மத்தியில் ஏற்படுத்தி வருவதோடு அது திருப்தி காண்கிறதா? ஏனெனில் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் தீர்வு ஆலோசனை கமிட்டிக்கு ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் கட்சியினால் நியமிக்கப்பட்டு பத்திரிகையில் வெளியிடப்பட்ட கமிட்டியில் வடக்கைச் சேர்ந்த ஒரு பிரமுகரும் இல்லாதிருப்பதும், வடக்கின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு பொருப்பாக வடக்கைப் பிறப்பிடமாக கொண்டவர்களுக்கு முக்கியத் துவம் அளிக்காதிருப்பதும், SLMC வடக்கு முஸ்லிம்களின் விடயங்களில் எவ்வாறு நடந்து கொள்கிறது என்பதை நிரூபிக்கும்.

இவ்வாறான ஒரு நிலையில்தான் இம்மக்களின் உரிமைப் போராட்டத்தில் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் என்ற கட்சியும் அதன் தலைமைத்துவமும் இழுக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிறது. இதையிட்டு NMRO உண்மையில் கவலை கொள்கிறது. இது தவிர ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் மீது வேறு எவ்விதமான தனிப்பட்ட குரோதமோ, அல்லது வேறு கட்சிகளின் மீது சார்ந்த, அல்லது ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் தலைமைத் துவம் கூறுவது போன்று வேறு தீய சக்திகளின் ஏஜண்டாகவோ NMRO செயற்பட வில்லை. மாறாக "அல்லாஹ்வின் திருப்தி" ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இழந்த உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் போராடி வருகிறோம். இதனால் "அல்லாஹ்வின் உதவி எமக்குக் கிடைக்கிறது என்பதை இவ்விடத்தில் உறுதியாகக் கூறிக் கொள்கிறோம். வேறு சக்திகளின் ஏஜண்டாக நாங்கள் செயல்படுவதாக ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் தலைமைத்துவம் கூறுவது உண்மையானால் அதனை அவர்களால் ஆதாரத்துடன் நிரூபிக்க முடியுமா? ஆறாவது வருடம் பூர்த்தியடைந் திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இழந்த உரிமை களில் முதன்மையானது **'தாயக உரிமை'** யாகும். அதைத் தொட்டு கல்வி, வேலை வாய்ப்பு, என்று ஒவ்வொரு துறைகளிலும் உரிமை களை இழந்திருக்கும் வடக்கு முஸ்லிம்கள் தங்களது நிலையைப் பற்றி இவ்விடத்தில் சிந்திப்பது பொருத்தமானதாகும்.

தொடர்ந்தும் மற்றவர்களால் ஏமாற்றப் படும் சமுதாயமாக நாங்கள் வாழ விரும்புகின்றோமா? அல்லது எங்களது உரிமைப் போராட்டத்தை அல்லாஹ்வின் மீது உறுதியான அசைக்க முடியாத நம்பிக்கை வைத்தவர்களாக வடக்கு அகதிகள் எல்லோரும் ஒன்றுபட்ட சக்தியாக எங்களை ஒரு **"அமுக்க குழு"** வாக ஆக்குவதால் எங்களது இழந்த உரிமைகளை ஒரே குரலாக எந்த கட்சிச் சார்புமின்றி ஒரே அமைப்பாக முன்னெடுக்க விரும்புகின்றோமா? இது நாங்கள் தீர்மானிக்க வேண்டிய முக்கிய விடயமாக இருக்கிறது.

எமது மக்கள் இவ்வாறான ஓர் முடிவை எடுத்தால் இச் சந்தர்ப்பத்திலாவது ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் இம்மக்களது இந்த ஜனநாயக உரிமை போராட்டத்தை மதித்து அதற்கு இடமளிப்பதோடு எங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாங்கள் நடத்தும் இப்போராட்டத்துக்கு கட்சி நலன் பாராது ஆதரவளிப்பார்களேயானால் இதுவே அவர்கள் வடக்கு முஸ்லிம்களுக்கு செய்த பேருதவியாக இருக்கும்.

## பனையும் தென்னையும்

தென்னை மரமொன்று
பனைமரத்தின் மீது
சரிந்து விழுந்தது
பனை மரத்தின் கழுத்து
முறிந்தது
"நான் அவனுடைய கழுத்தை
முறித்து விட்டேன்"
ஆணவமாகப் பேசி
திரும்பிப் பார்த்த பொழுது
தான் பூமியிலிருந்து
பிடுங்கப்பட்டிருப்பது
தென்னை மரத்துக்கு
தெரிந்தது.



படிப்பகம்

padippakam



# எண்ணக் குமுறல்கள்

அகதி வெளியீடு வட இலங்கை முஸ்லிம்களின் நிலைமையை வெளிப்படுத்தும் யதார்த்தமான தோர் பிரசுரமாக அமைந்துள்ளது. NMRO ஆய்வுகளும் முன் வைப்புக்களும் காலத்தாலும், கருத்தாலும் ஜீரணிக்கப்பட வேண்டியவை. ஆய்வுகளும் கருத்துக்களும் எம் போன்ற தென்பகுதி மக்களுக்கு – முஸ்லிம் சிந்தனைக்குரிய முன்னறிவிப்பாக அமைய வேண்டும்.

நியாஸ் பாச்சா
தௌபீக் அலி
பிரதான வீதி
மாத்தறை

வடக்கிலிருந்து இடம் பெயர்ந்தோர்கள் மத்தியில் சேவை செய்வதில் ஆழமாக வேரூன்றி விட்டதும் மக்கள் குறிப்பாக இளைஞர் ஆதரவைப் பெற்றதுமான உறுதிப்பாடான நோக்கங்கள் கொள்கைகள் செயற்பாடுகளுடன் ஓர் இலட்சியத்திலேயே கண்ணுங்கருத்துமாகச் செயற்படும் இரு அமைப்புக்களாக சி.ல. முஸ்லிம் காங்கிரசையும், வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பையும் இனங் காண்கின்றோம் என்று தொடர்ந்த சகோ. எ.எஸ். ஸாஹிர் அவர்களின் கடிதத்தைப் பார்த்தேன். அவருக்கு உண்மை தெரியாதா? அல்லது மன உறுதியுடன் நோக்கங்கள் கொள்கைகள் செயற்பாடுகளுடன் ஓர் இலட்சியத்திலேயே செயற்படும் அமைப்பாக வ.மு.உ அமைப்பை சொல்லலாம். ஏன் முஸ்லிம் காங்கிரசைக் கூறினாரோ தெரியவில்லை. மற்றும் நாங்கள் இலட்சியத்துக்காக முஸ்லிம்களின் உரிமைக்காக போராடுவதை நீங்கள் அறிய வில்லையா? மு.காங்கிரைஸ நீங்கள் இப்படி கூறுவது தவறு. மு.கா. எங்களுக்கு செய்த கொடுமை, உரிமை மீறல்களை சொல்வதற்கு எழுதுவதற்கு பல பக்கங்களைக் கொண்ட புத்தகங்கள் வேண்டும்.

ஆஷிக் முஹமட் அமீன்
பிரதி தலைவர்
வடமாகாண யாழ் அமைப்பாளர்
முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி.

'அகதி' என்ற சஞ்சிகையின் 8 ஆம் இதழினை பார்வையிட்ட பொழுது, புலிகளால் முஸ்லிம்கள் என்ற காரணத்திற்காக, வடக்கிலிருந்து பலவந்தமாக விரட்டப்பட்ட எமது முஸ்லிம் சகோதரர்களின் எண்ணக் குமுறல்களை பார்த்து கவலையடைந்தேன். அல்லாஹ் அவர்களுக்கு மிக விரைவில் தமது சொந்த மண்ணுக்கு திரும்புவதற்குரிய உதவிகளைச் செய்வானாக!

எம். அஸ்வர் ஹஸன்
கொழும்பு – 14

தங்களின் அகதி சஞ்சிகை தொடர்ந்தும் வெளிவருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஏனெனில் இன்று காலத்திற்குக் காலம் தோன்றும் சஞ்சிகைகளைப் போன்று காலத்தால் அழிந்து விடவில்லை. தங்களது பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

ஏ.பி. சாஜஹான்
செயலாளர்
கல்கதா இஸ்லாமிய நூலகம்
ஜும்ஆ பள்ளிவாசல்
வாழைச்சேனை

தங்களது அமைப்பினால் வெளியிடப்படும் 'அகதி' எனும் சஞ்சிகையை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அதேவேளை தங்களது அமைப்பின் சில செயற்பாடுகளையும் பத்திரிகையின் மூலம் அறிகின்றேன். மிகவும் வரவேற்கத்தக்க நடவடிக்கைகளாக இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாறான ஓர் முஸ்லிம் அமைப்பு வடக்கு முஸ்லிம்களின் துயர்துடைக்க எடுத்து வரும் நடவடிக்கையானது எமது முலிம்களின் எதிர்கால சுபீட்சத்துக்கு ஓர் ஊன்றுகோலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

எம்.எஸ்.உதுமா லெப்பை J.P
மாவடிச் சேனை
வாழைச்சேனை



படிப்பகம்

padippakam



# இலங்கை அரசும் வடக்கு முஸ்லிம் அகதிகளும்

கலாநிதி. எஸ். எச்.ஹஸ்புல்லாஹ்

1990 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இறுதி வாரத்தில் வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் ஏறக்குறைய 75 க்கும் மேற்பட்ட குடியிருப்புகளில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் ஆயுத முனையில் பலவந்தமாக தமிழ் ஆயுதக் குழு ஒன்றினால் வெளியேற்றப்பட்டு அகதியாக்கப்பட்டார்கள். உயிராபத்துக்கு அஞ்சி தமது பாரம்பரியப் பிரதேசங்களை விட்டு அவசர அவசரமாக வெறுங்கையோடு வெளியேறிய முஸ்லிம்கள் வட மாகாணத்திற்கு வெளியே புத்தளம், அநுராதபுரம், குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கும் அபயம் தேடி வந்தார்கள். கடந்த 6வருடங்களாக அகதி முகாம்களில் மட்டுப்படுத்தப்பட்ட நிவாரண, வாழ்விட வசதிகளோடு வாழ்ந்து வருகின்றார்கள்.

> அரசாங்கத்தின் புனர்நிர்மான, புனர்வாழ்வு அமைச்சின் வார்த்தையிலே கூறுவதாக இருந்தால் அகதிகள் நீண்ட காலம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்ததன் விளைவு இம்மக்களின் உளவியல், ஒழுக்கவியல் அத்துடன் ஆத்மீக பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது
> (கொள்கை விளக்கம், 1996)

இம்மக்கள் கடந்த 6 வருடங்களாக அகதிகளாக வாழக் காரணம் என்ன? இதுவரையில் நடை முறைப்படுத்தப்பட்ட அரசின் அகதிக் கொள்கைகள் எந்த அளவு இவ்வகதிகளின் பிரச்சினையைத் தீர்க்கக் கூடியதாக இருந்தது? இலங்கை அரசும், ஏனைய பல அரசசார்பற்ற நிறுவனங்களும் இம்மக்களுக்கு இதுவரையில் அளித்த பாதுகாப்பு, நிவாரணங்களின் பிரதி விளைவுகள் என்ன? ஏன் இன்றுவரை இவ்வகதிகள் அகதி வாழ்க்கையிலிருந்து தம்மை மீட்க முடியாதவர்களாகக் காணப்படுகின்றார்கள்? என்ற அம்சங்கள் இக்கட்டுரையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## அரசின் கடந்த கால அகதிக் கொள்கை

இலங்கை அரசால் இந்நாட்டின் பல இலட்சக்கணக்கான அகதிகளில் ஒரு சாராராக வடக்கு முஸ்லிம் அகதிகள் கருதப்பட்டார்கள். இந்த அடிப்படையில் தற்காலிக வாழ்விட, நிவாரண வசதிகள் இவ்வகதிகளுக்கு அளிக்கப்பட்டு வந்தன. இம்மக்கள் அகதியாக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரையான கடந்த 6 வருடங்களில் நாட்டின் இனப்பிரச்சினை நாளை முடிந்து விடும், "அப்போது இம்மக்கள் சுயமாகத் தமது பூர்வீக இடங்களுக்கு மீண்டும் செல்வார்கள்" என்ற கண்ணோட்டத்தில் அவ்வப் போதைக்குத் தேவையான நிவாரண வசதிகளும் முகாம் இருப்பிட வசதிகளும் இம்மக்களுக்கு அரசால் வழங்கப்பட்டு வந்தன. மறு வார்த்தையில் வடக்கு முஸ்லிம் அகதிகள் தற்காலிக அகதிகள் என்றும் அதனால் தற்காலிக வாழ்விடம் அத்துடன் ஏனைய வசதிகள் பொருத்தமானது என்பதுவும் கடந்தகால அரசின் கொள்கையாகக் காணப்பட்டது.

அதே நேரத்தில் வட மாகாணத்தில் அரசினால் ஆயுதப்பல ரீதியாக மீட்கப்பட்ட மன்னார் தீவுப் பிரதேசத்திற்கும், வவுனியா தெற்குப் பிரதேசத்திற்கும் வடக்கு முஸ்லிம் அகதிகள் சுயமாக மீண்டும் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறு மீண்டும் செல்வதற்கு பொருத்தமான உதவிகளும் அரசால் அவ்வக்காலங்களில் வழங்கப்பட்டன. இந்த விடயத்தில் அரசின் ஆயுத பலத்தால்



படிப்பகம்

padippakam



முஸ்லிம்களின் அகதிப் பிரச்சினை தீர்க்கப் படக்கூடியது என்றும் கருதப்பட்டது. ஆகவே அரசின் ஆயுத வல்லமையால் தீவிரவாத தமிழ்க் குழுக்களின் வல்லமை பலவீனப்படுத்தப்படும் வரை வடக்கு முஸ்லிம்களின் தாயகம் மீளல் பிற்போடப்படலாம் என்பதுவும் அன்றைய அரசின் கொள்கையாக இருந்தது.

### அரசின் அகதிக் கொள்கையின் பலவீனம்

அரசின் மேற்குறித்த அகதிகளுக்கான நிவாரணக் கொள்கையும், மீட்டெடுக்கப்பட்ட இடங்களில் முஸ்லிம் அகதிகளை மீள் குடியேற்றும் கொள்கையும் இறுதியில் தோல்வியாக முடிந்தது. இதில் நிவாரணக் கொள்கையை எடுத்துக் கொண்டால் கடந்த 6 வருடங்களில் ஒரு தூரதிருஷ்டியற்ற அடிப்படையில் தற்காலிக நோக்கத்தில் செய்யப்பட்டு வந்த வாழ்விட வசதிகள், உணவு, கல்வி மருத்துவ ரீதியான வசதிகள் ஒருமுழுமையான தோல்வியாகி விட்டது. இதனை தற்போதைய அரசு தனது அண்மைக் கால கொள்கை விளக்கங்களில் தெட்டத் தெளிவாக குறிப்பிட்டு இருக்கின்றது. தூர திருஷ்டியற்ற இவ்வகதிக் கொள்கை இக்குறித்த அகதி மக்களின் வாழ்க்கையை சின்னா பின்னமாக்கி விட்டது. அரசாங்கத்தின் புனர் நிர்மான, புனர்வாழ்வு அமைச்சின் வார்த்தை யிலே கூறுவதாக இருந்தால் அகதிகள் நீண்ட காலம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந் ததன் விளைவு இம்மக்களின் உளவியல், ஒழுக்க வியல் அத்துடன் ஆத்மீக பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது" (கொள்கை விளக்கம், 1996) என்று குறிப்பிடலாம். ஆனால் உண்மையில் தற்காலிக நிவாரணத்தின் பின் விளைவுகள் அரசின் கொள்கை விளக்கத்தில் குறிப்பிடப் பட்டதை விடப் பாரதூரமானவையாகும். இம் மக்கள் வாழும் அகதி முகாம் சூழலுக்குச் சென்று வருகின்ற ஒரு சராசரி மனிதனால் இதன் பாரதூரமான விளைவுகளை இலகுவாக அவதானிக்கக் கூடியதாகக் காணப்படுகின்றது.

**இன்றைய அரசின் அகதிக் கொள்கை முன்னைய அரசின் கொள்கையை விட மொத்த கொடுப்பனவு ரீதியாக முன்னேற்றகரமானதாக இருந்தாலும் கூட உள்நாட்டில் இடம் பெயர்ந்த அகதிகளின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அதற்குப் பொருத்தமான தீர்வுகளை முன் வைக்கும் தீர்வு ஒன்றாக இல்லை.**

கடந்த 6 வருடங்களில் இவ்வகதி மக்களின் உடல் ஆரோக்கியம், கல்வி, ஒழுக்கம், கலாச் சாரம், உளவியல் நிலை மிகப்பாரதூரமான பாதிக்ப்புக்குட்படுத்தப்பட்டன. இப்பாதிப்புகள் ஏற்படுவதற்கு காரணமாக இருந்தவர்கள் யார்? அபயம் தேடி வந்த அகதிகளுக்கு உரிய பாதுகாப்பையும் வாழ்க்கை வசதிகளையும் அளிக்க வேண்டியது தேசிய சர்வதேச சமூகங் களின் பொறுப்பாகும். உள்நாட்டில் அகதியாக் கப்பட்ட இம்மக்களுக்கான எல்லா வகையான பாதுகாப்புகளுக்கும் பொறுப்பாக இருக்கின்ற இலங்கை அரசு பின்பற்றிய கொள்கைகளின் பிரதிபலன்கள் இவ் அப்பாவி அகதி மக்களின் வாழ்க்கையைச் சின்னா பின்மாக்கி விட்டது.

அரசின் மீட்கப்பட்ட பிரதேசத்திற்கான (Cleared area) மீள் குடியேற்றம் என்ற அன்றைய அரசின் கொள்கையும் இறுதியில் முழுத்தோல்வி யில் முடிந்தது. அரசின் கட்டுப்பாட்டிற் குட்பட்டிருக்கும் மன்னார் தீவிற்கு அதன் மொத்த முஸ்லிம் சனத்தொகையில் 10 வீதமானவர்கள் கூட மீளக் குடியேற முற்படவில்லை. வவுனியா தெற்கில் இராணுவ அரண்களுக்குள் தங்களை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் மீளக்குடி யேறிய முஸ்லிம்கள் நித்தமும் தமது பாது காப்பைப் பற்றி வினா எழுப்புபவர்களாகக் காணப்படுகின்றார்கள். அது போல அண்மை யில் யாழ்ப்பாண நகரமும் ஆயுதப்படைகளினால் மீட்கப்பட்ட போது பல ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகள் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேற விரும்பினர். அவ்விருப்பம் நிறைவேறுவது அவர்களுக்கு சாத்தியமானதாக இருந்தது. ஆனால் இம் மன ஆர்வம் யாழ்ப்பாண நகரைச் சேர்ந்த முஸ்லிம் அகதிகள் மத்தியில் ஏன் எற்படவில்லை? இவ்வம்சம் வடக்கு "முஸ்லிம் களின் மீள்குடியேற்றம்' என்ற அடிப்படையில் மிகக்கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

உண்மையில் வடக்கு முஸ்லிம்களின்



படிப்பகம்

padippakam



பலவந்த வெளியேற்றத்தினால் ஏற்பட்ட அகதி வாழ்க்கை ஏனைய மக்கள் அகதியாக்கப்பட்ட சூழலிலிருந்து வித்தியாசமானது என்பதனை இது காட்டுகின்றது. அரசின் ஆயுத ரீதியான வெற்றிக்கும் வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கும் இடையில் தொடர்பில்லை என்பதனை இது காட்டுகின்றது. வடக்கு முஸ்லிம் அகதிகள் தாயகம் மீள்வதற்கு வேறுவகையான தீர்வு அணுகு முறைகள் தேவைப்படுகின்றன என்பதை இது சுட்டிக்காட்டுகின்றது. இம் மக்கள் அகதியாக்கப்பட்டதன் அடிப்படைப் பிரச்சினை அறியப்பட்டு அதன் அடிப்படையில் முன் வைக்கப்படாத மேற்குறித்த மீள் குடியேற்றத் தீர்வானது தோல்வியில் முடிந்தது ஆச்சரியத்துக்குரிய ஒரு அம்சமல்ல. அந்த அடிப்படையில் கடந்தகால அரசின் வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் பற்றிய கொள்கைகளும் இறுதியில் தோல்வியில் முடிந்தன.

## அரசின் இன்றைய கொள்கை

இன்று இலங்கையில் ஆட்சியில் இருக்கும் அரசு கடந்தகால அகதிக் கொள்கைகளில் இருந்த பலவீனங்களை அறிந்த முறையில் ஒரு புதிய திருந்திய கொள்கையினை முன் வைத்திருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்புதிய கொள்கையில் அகதிகளுக்கான நிவாரணங்களும், வசதிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. தற்போதைய அரசு இப் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இக் கொள்கையில் வடக்கு முஸ்லிம் அகதிகளோடு தொடர்புடைய அம்சம் பின்வருமாறு. அரசின் கருத்துப்படி வடக்கு-கிழக்கின் யுத்த நிலைமைகளுக்கு விரைவில் தீர்வு வரக் கூடிய சூழ்நிலை இல்லை. அதனால் அகதிகள் தமது பூர்வீக இடங்களுக்கு மீளக்குடியேறுவது உடனடி சாத்தியமற்றது. அதனால் இவர்களை அகதிகளாக வாழும் சூழலில் இரண்டற இணைத்து விடுவது பொருத்தமானது என்பதாகும்.

இன்றைய அரசின் அகதிக் கொள்கை முன்னைய அரசின் கொள்கையை விட மொத்தக் கொடுப்பனவு ரீதியாக முன்னேற்ற கரமானதாக இருந்தாலும் கூட உள்நாட்டில் இடம் பெயர்ந்த அகதிகளின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அதற்குப் பொருத்தமான தீர்வுகளை முன் வைக்கும் தீர்வொன்றாக இல்லை.

முன்னைய அரசின் திட்டங்களைப் போல் உணவு நிவாரணம் வழங்குவதும் தற்காலிக இருப்பிட வசதிகளை ஏற்படுத்தலுமே இவ்வரசின் அடிப்படைக் கொள்கையாகக் காணப்படுகின்றது. அகதிகள் பிரச்சினையின் தாற்பரியத்தை முழுமையாக இவ்வரசின் அகதிக் கொள்கை நோக்கவில்லை. அகதிப் பிரச்சினை இனப் பிரச்சினையின் ஓர் அங்கம் என்று இக் கொள்கை கருதவில்லை. அதைவிட முக்கியமாக அகதிகள் தனித்துவமான இனப்பிரச்சினை சூழ்நிலையால் தோற்றுவிக்கப்பட்டார்கள் என்பது பற்றியும் அதனால் அவர்களுக்கு தனித்துவமான தீர்வு அணுகு முறைகள் அவசியமானவை என்பதுவும் கருத்திற்கு எடுக்கப்படவில்லை. இக்கண்ணோட்டம் அகதி நிலையை தொடரவும், அகதிப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கவும் காரணமாயிற்று.

## வடக்கு முஸ்லிம் அகதிகள்

இக்குறித்த அகதிகளைப் பொறுத்த வரையில் அரசின் இன்றைய கொள்கைகளில் முக்கியமானது இவ்வகதிகளை இவர்கள் வாழும் சூழலில் மாற்று வாழ்க்கைத்திட்டத்திற்கு உதவுவதாகும். இத்திட்டம் “மீள்குடியேற்றம்” என்று பொதுவாக அழைக்கப்படுகின்றது. இதனை சற்று விளக்கமாகக் கூறுவதாக இருந்தால் இக்குறித்த அகதிகள் வாழ்கின்ற பிரதேசங்களான புத்தளம், அநுராதபுரம், குருநாகல்

அகதிகளுடன் தொடர்புடைய அடிப்படையில் "மீள் குடியேற்றம்" என்ற பதம் வழமையில் பின்வரும் பொருளைக் கொள்ளும், அதாவது இனப்பிரச்சினையால் பாதிப்புக்குட்பட்டு அகதியாக்கப்பட்ட மக்கள் தமது பூர்வீக இடங்களுக்கு மீளச்செல்லும் போது அவர்கள் தமது வாழ்க்கையை பூர்வீக இடங்களில் மீண்டும் உருவாக்கிக் கொள்வதற்கு அரசினாலும், அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் அளிக்கப்படுகின்ற பண ரீதியான, பொருள் ரீதியான, ஏனைய புனர்வாழ்வு ரீதியான திட்டங்களைக் குறிக்கும். இந்நாட்டில் இது வரையில் நிறைவேற்றப்பட்ட மீள் குடியேற்றத்திட்டங்கள் பூர்வீக இடங்களில் அகதிகளை மீள் குடியேற்றுவதை அடிப்படையாகக் கொண்டதாகும்.



படிப்பகம்

padippakam



**ஏனென்றால் நிச்சயமாக வடக்கு முஸ்லிம் அகதிகள் தமது பூர்வீக இடத்திற்கு மீளச் செல்ல முடியாது என்ற அம்சம் நிரூபிக்கப்படாத வரையில் இம்மக்கள் "அகதி அந்தஸ்தில்" இருந்து குறைக்கப்பட முடியாத பண்புகளைக் கொண்டவர்களாக காணப்படுகிறார்கள், என்பதை கருத்திற் கொள்ள வேண்டும். அவ்வாறாயின் தேசிய சர்வதேச மட்டத்தில் இவ்வகதிகளின் பிரச்சினை தனித்துவமாக நோக்கப்பட்டு அதற்கான பொருத்தமான தீர்வு முன் வைக்கப்பட வேண்டும்.**

போன்ற இடங்களில் இவ்வகதிகள் சொந்தக் காணிகளுக்கு உரிமையாக இருந்தால் அவர்களுக்கு மீள் குடியேற்றத்திற்கான கொடுப்பனவுகளை அரசு வழங்குவதன் மூலம் இம்மக்களின் நீடித்த அகதிப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதாகும்.

அகதிகளுடன் தொடர்புடைய அடிப்படையில் "மீள் குடியேற்றம்" என்ற பதம் வழமையில் பின்வரும் பொருளைக் கொள்ளும், அதாவது இனப்பிரச்சினையால் பாதிப்புக்குட்பட்டு அகதியாக்கப்பட்ட மக்கள் தமது பூர்வீக இடங்களுக்கு மீளச்செல்லும் போது அவர்கள் தமது வாழ்க்கையை பூர்வீக இடங்களில் மீண்டும் உருவாக்கிக் கொள்வதற்கு அரசினாலும், அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் அளிக்கப்படுகின்ற பண ரீதியான, பொருள் ரீதியான, ஏனைய புனர்வாழ்வு ரீதியான திட்டங்களைக் குறிக்கும். இந்நாட்டில் இது வரையில் நிறைவேற்றப்பட்ட மீள் குடி யேற்றத்திட்டங்கள் பூர்வீக இடங்களில் அகதிகளை மீள் குடியேற்றுவதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

வடக்கு முஸ்லிம் அகதிகளைப் பொறுத்த வரையில் தமது பூர்வீக இடங்களில் உடனடியாக மீளக் குடியேறுவதற்கு பொருத்தமான சூழல் இன்று இல்லாத தன்மையினால் இம்மக்கள் அகதிகளாக வாழுகின்ற பிரதேசங்களில் இம் மீள் குடியேற்றத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றது என்ற விளக்கம் அரச அதிகாரிகளால் இம்மக்கள் மத்தியில் பரவலாகக் கூறப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் பலத்தினையும், பலவீனத்தினையும் பல்வேறு கண்ணோக்குகளில் ஆராய முடியும். ஆனால் அகதிகளின் அடிப்படைப் பிரச்சினைகளை இம் மீள் குடியேற்றத்திட்டம் தீர்க்குமா? என்ற வினாவுக்கு விடை காண்பது அவசரமாகச் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். காரணம் இவ்வட மாகாண முஸ்லிம் அகதிகளின் அடிப்படைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மாற்று ஒழுங்குகள் அரசியல் ரீதியாக (பேச்சு வார்த்தை ரீதியாக) செய்யப்படாத சூழ்நிலையில் அகதிகளாக வாழ்கின்ற பிரதேசத்தின் மீள் குடியேற்றத்திட்டம் எவ்வகையான பிரதிபலன்களை ஏற்படுத்தப்போகின்றது என்ற அம்சம் கவனமாகப் பரிசீலனைக்குட்படுத்தப்பட வேண்டும்.

அரசின் கண்ணோட்டத்தில் வடக்கு முஸ்லிம் அகதிகள் வடக்கிற்கு எப்போதுமே திரும்பவும் மீளக்குடியேற முடியாதவர்கள் என்ற நிச்சயப்பாட்டுக்கு வந்துவிட்டதா? அவ்வாறான நிச்சயப்பாட்டுக்கு வந்திருந்தால் அதற்கான பின்னணிக் காரணங்கள் எவை? வடக்கு முஸ்லிம் அகதிகளை மீள இம்மக்களின் பூர்வீக இடங்களில் குடியேற்றுவது தொடர்பாக வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதா? அதில் முக்கியமாக இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் இது ஒரு அம்சமாகக் கலந்துரையாடப்பட்டதா? என்ற வினாக்கள் எழுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச ஸ்தாபனங்களின் கண்ணோட்டத்தில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட ஒரு இன மக்களைப் பொறுத்த வரையில் இம்மக்களுக்கு தமது பூர்வீக இடத்தில் உள்ள வாழ்விட உரிமை நிச்சயமாக மறுக்கப்பட்டுள்ளது என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளதா? அவ்வாறான ஏதாவது பேச்சு வார்த்தைகளில் இலங்கை அரசுடனோ, சம்மந்தப்பட்ட ஆயுதக்குழுக்களுடனோ தேசிய, சர்வதேச சமாதான சக்திகள் முயற்சி எடுத்திருக்கின்றனவா? என்பதும் கருத்திற்கு எடுக்கப்பட வேண்டும்.

ஏனென்றால் நிச்சயமாக வடக்கு முஸ்லிம் அகதிகள் தமது பூர்வீக இடத்திற்கு மீளச் செல்ல முடியாது என்ற அம்சம் நிரூபிக்கப்படாத வரையில் இம்மக்கள் "அகதி அந்தஸ்தில்" இருந்து குறைக்கப்பட முடியாத பண்புகளைக் கொண்டவர்களாக காணப்படுகிறார்கள், என்பதை கருத்திற் கொள்ள வேண்டும். அவ்வாறாயின் தேசிய சர்வதேச மட்டத்தில் இவ்வகதிகளின் பிரச்சினை தனித்துவமாக நோக்கப்பட்டு அதற்கான பொருத்தமான தீர்வு முன் வைக்கப்பட வேண்டும்.



படிப்பகம்

padippakam



மாறாக அரசாங்கமும் சர்வதேச சமாதான சக்திகளும் வடக்கு முஸ்லிம் அகதிகள் தமது பூர்வீக இடங்களுக்கு திரும்புவது பற்றிய தீர்க்கமான முடிவுகள் இல்லாத சூழ்நிலையில் இம்மக்களுக்கு 'அகதி அந்தஸ்தல்லாத' மாற்று வழிகளை (மீள்குடியேற்றம்) முயற்சிப்பது பின்வரும் அடிப்படையில் மிகப் பாரதூரமான தவறாகும். அதாவது இலங்கையிலோ, உலகின் எந்த மூலையிலோ ஆயுத பலத்தின் மூலமாக நியாயமற்ற வகையில் மக்கள் இனங்களை பலவந்தமாக வெளியேற்றி அவர்களின் வாழ்வுரிமையை யாரும் பறிக்க முடியும் என்பதை நியாயப்படுத்துவதாக இது முடிந்து விடும். இவ்வுலகில் நீதி, நியாயம் நிலைக்க வேண்டுமாக இருந்தால் இவ்வாறான முடிவு ஒன்றிற்கு நியாய சக்திகள் உடன்பட்டுப் போகக் கூடாது.

### மீள்குடியேற்றமா? அல்லது இடைக்கால வாழ்விட ஒழுங்கா?

மேற்குறித்த கண்ணோட்டத்தில் இலங்கையின் வடக்கு முஸ்லிம் அகதிகளின் அடிப்படைப் பிரச்சினை அணுகப்படுவது பொருத்தமானதாகும். 6 வருட அகதிமுகாம் வாழ்க்கையில் இம்மக்கள் மிகவும் சோர்வடைந்து விட்டார்கள். தமது உடல் ஆரோக்கியம், உள ஆரோக்கியம், கல்வி, கலாச்சாரம், சமயம், ஒழுக்கம் அகதிமுகாம் வாழ்க்கையில் கட்டிக் காக்க முடியாமல் மிகவும் பலவீனப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றார்கள். முகாம் வாழ்க்கைக்கு ஒரு மாற்று ஒழுங்கை இம்மக்கள் வேண்டி நிற்கின்றார்கள். மிக அவசரமாகவும், அவசியமாகவும் செய்யப்பட வேண்டிய அகதிச் சீர்திருத்தம் இம்மக்களின் முகாம் வாழ்க்கைக்கு பொருத்தமான மாற்று வழிகளை அடையாளம் காண்பதாகும்.

பொருத்தமான இடைக்கால வாழ்க்கை வசதிகள் இம்மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இம்மக்களின் வாழ்விட சூழல் கௌரவமானதாக, உற்றார் உறவினரோடு வாழக்கூடியதாக அமைத்துக் கொடுப்பது அவசியமானதாகும். இம்மக்களின் அடிப்படை அகதிப் பிரச்சினை தீர்க்கப்படும் வரை இவர்களின் "அகதி அந்தஸ்து" தேசிய சர்வதேச ரீதியாக மதிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் இம்மக்கள் பொருத்தமான பொருளாதார அடிப்படை மட்டத்தை அடையப்படாத வரை இவர்களின் உணவு நிவாரணங்கள் நிறுத்தப்படக் கூடாது. தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள தற்காலிக வாழ்விட வசதிகள் (பாடசாலை, வீதி, மலசலகூடம், நீர்) மேலும் அதிகரிக்கப்படுவதும் பொருத்தமானதாகும்.

இந்த அடிப்படையில் இன்றைய அரசு செய்து வருகின்ற அகதிகளுக்கான சில வாழ்விட வசதி முயற்சிகள் வரவேற்கத்தக்கன. ஆனால் இதில் பல அடிப்படைக் குறைபாடுகள் காணப்படுகின்றன. அவை திருத்தப்பட்ட அடிப்படையில் இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். அரசு தனது கொள்கை ரீதியாக இவ்வாறான அகதிகளுக்கான ஒரு "மாற்று வாழ்விட ஒழுங்கு" அகதிகளின் வாழ்விடப் பிரச்சினைக்கான இடைக்காலத் தீர்வே என்பதனை தெட்டத் தெளிவாக அகதிகளுக்கும், இத்தேச மக்களுக்கும், சர்வ தேசத்திற்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். இதனையே வடக்கு முஸ்லிம் அகதிகள் விரும்புகின்றார்கள் என்பதனை அகதி மக்களோடு கலந்துரையாடிய போது மிகத் தெளிவாக அறியக் கூடியதாக இருக்கின்றது.

அண்மையில் புத்தளம் மாவட்டத்தில் அகதிகளுக்காக திறக்கப்பட்ட குடியேற்றம் "மீள்குடியேற்றக் கிராமம்" (Re-settlement Village) என்று அழைக்கப்படுகின்றது. இது இம்மக்களின் அகதிப் பிரச்சினையை தனித்துவமாக நோக்குகின்ற போது பொருத்தமானதாக

பொருத்தமான இடைக்கால வாழ்க்கை வசதிகள் இம்மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இம்மக்களின் வாழ்விட சூழல் கௌரவமானதாக உற்றார் உறவினரோடு வாழக்கூடியதாக அமைத்துக் கொடுப்பது அவசியமானதாகும். இம்மக்களின் அடிப்படை அகதிப் பிரச்சினை தீர்க்கப்படும் வரை இவர்களின் "அகதி அந்தஸ்து" தேசிய சர்வதேச ரீதியாக மதிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் இம்மக்கள் பொருத்தமான பொருளாதார அடிப்படை மட்டத்தை அடையப்படாத வரை இவர்களின் உணவு நிவாரணங்கள் நிறுத்தப்படக் கூடாது. தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள தற்காலிக வாழ்விட வசதிகள் (பாடசாலை, வீதி, மலசலகூடம், நீர்) மேலும் அதிகரிக்கப்படுவதும் பொருத்தமானதாகும்.



படிப்பகம்

padippakam



இல்லை. அதனால் இக்குடியேற்றத்தை"இடைக் கால வாழ்விட ஒழுங்கு" (Interim Living Arrangment) என்று அழைக்கப்பட கொள்கை ரீதியாக ஒழுங் குகள் செய்யப்பட வேண்டும். இதுவே இங்கு குடியேறியுள்ள அகதிகளின் அபிலாசை களாகவும் காணப்படுவதை இம்மக்களுடனான கலந்துரையாடல்களில் இருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது.

மேலும் அதே போன்றே மேற்குறித்த அரசின் இடைக்கால வாழ்விட வசதிகள் இதுவரை இவ்வசதிகள் கிடைக்காத ஏனைய 90 வீத முஸ்லிம் அகதிகளுக்கு புத்தளம் மாவட்டத்திலும், ஏனைய பிரதேசங்களிலும் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறான திட்டங்கள் மூலமாக முஸ்லிம் அகதிகளுக்கு வாழ்விட வசதிகளை மேலும் பலப்படுத்துகின்ற அதே நேரத்தில், இவ்வகதிகளின் அடிப்படை பிரச்சினையை (மீண்டும் தாயகத்திற்கு செல்லும்) தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசும் ஏனைய சமாதான சக்திகளும் மேற்கொள்வது பொருத்தமானதாகும். இந்த அடிப்படையில் இனப்பிரச்சினைப் பேச்சு வார்த்தைகளில் அத்துடன் சமாதானத், தீர்வுத் திட்டங்களில் பலவந்த மாக வெளியேற்றப்பட்ட இவ்வகதிகளின் பிரச்சினைகள் எடுக்கப்பட்டு பொருத்தமான தீர்வு காணப்படுவதை இவ்வக திகள் விரும்புகின்றார்கள்.

இவ்வகதிகளின் அபிலாசைகள் கௌர வப்படுத்தப்பட வேண்டியதும், அவர்களின் பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வு காணப்பட வேண்டியதும தேசிய, சர்வதேச சமூகங்களின் கடமையாகும்.

அண்மையில் புத்தளம் மாவட்டத்தில் அகதிகளுக்காக திறக்கப்பட்ட குடியேற்றம் "மீள்குடியேற்றக் கிராமம்" (Re-settlement Village) என்று அழைக்கப்படுகின்றது. இது இம்மக் களின் அகதிப் பிரச்சினையை தனித்துவமாக நோக்குகின்ற போது பொருத்தமானதாக இல்லை. அதனால் குடியேற்றத்தை "இடைக் கால வாழ்விட ஒழுங்கு" (Interim Living Arrangment) என்று அழைக்கப்பட கொள்கை ரீதியாக ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் இதுவே இங்கு குடியேறியுள்ள அகதிகளின் அபிலாசைகளாகவும் காணப்படுவதை இம்மக்களுடனான கலந்துரையாடல்களில் இருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது.




26.09.96 அன்று 'REFUGESS ARE PEOPLE' எனும் நூல் வெளியீட்டின் போது வைபவத்துக்கு தலைமை தாங்கிய முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் (வலமிருந்து இடம்) எம்.என் ஐயூப் அவர்கள், அருகில் ஏ.எம். மாகான் மரைக்கார் (சன்டே லிட்டர் உதவி ஆசிரியர்) உரை நிகழ்த்துபவர் NMRO தலைவர் கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் அவர்கள்.



படிப்பகம்

padippakam



# இஸ்லாத்தின் எழுச்சியை பலவீனப்படுத்தும் பிர்அவ்னின் புதல்வர்கள்

மனிதர்களிற் சிலர் தங்கள் சொல், செயல்களில் நபிமார்கள் றசூல்மார்களின் வழியைப் பின்பற்றி நடப்பர். மற்றும் சிலர், விசுவாசம் கொண்டு அந் நேர்வழி நடப்பவர்களின் குழந்தைகளைக் கொன்றும், அவர்களின் பெற்றோரை சிறையிலடைத்தும் அவர்கள் மேல் வீண் பழி சுமத்தியும் அவர்களுக்கு இன்னல்கள் பல கொடுத்தும் அவர்களின் ஈமானிய உணர்வுகளை மழுங்கடிக்கச் செய்ய முயற்சிகளை மேற் கொள்வர். இவர்கள்தான் பிர்அவ்னின் புதல்வர்கள்.

முஸ்லிம்கள் என்பவர்கள், நாதியற்றவர்கள், ஒதுங்க இடமில்லாதவர்கள், அவர்களின் துயர்துடைக்க ஆளில்லாதவர்கள். துன்பங்களைச் சொல்லி ஆறுதலடைய வழியற்றவர்கள். எந்தப் பாதுகாப்பும் இல்லாதவர்கள் அவர்களை எதிர்ப்பவர்களை தட்டிக் கேட்க துணிவில்லாதவர்கள். இன்று சக்தியிழந்து நிற்கும் ஒரு சமூகம் அவர்கள் தான். இவர்கள் மீதுதான் மிக எளிதாக ஆதிக்கம் செலுத்த முடியும் என்றெல்லாம் முஸ்லிம்களைப்பற்றி இந்த பிர்அவ்னின் வாரிசுகள் கணக்கிட்டு வைத்துள்ளனர். இவர்களின் இலக்கு முஸ்லிம்களை பலவீனப்படுத்துவதுதான்.

இது இலங்கையின் வடபுலத்தில் வாழ்ந்து அகதிகளாக்கப்பட்ட முஸ்லிம்கள் விடயம் மட்டுமல்ல. உலக நாடுகளில் எங்கெல்லாம் முஸ்லிம்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் விரோதிகள் கும்பல் முஸ்லிம்களை அழிக்க முழு முயற்சி செய்கின்றன.

எனவே நாமும் எம் சமூகமும் எம் இளைஞர்களும் உயிரோட்டமுள்ள உண்மை முஸ்லிமாக வாழவும், அல்லாஹ்வையே பூரணமாக நம்பி வாழும் சமூகமாக அமையவும், அல்லாஹ்வின் உதவி நமக்குக் கிடைப்பதற்காக, அவனை ஆத்திரமூட்டும் எந்தச் செயலிலும் நாம் இறங்காமல் இருக்கவும் ஒவ்வொருவரும் முயற்சி செய்தல் அவசியம். பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு ஆறுதல் சொல்வதும், எவ்வளவுதான் அநியாயங்களும் அட்டூழியங்களும் நடந்தேறினாலும் "எதிர்காலம் இஸ்லாத்திற்கே" என்று உறுதியான நம்பிக்கையோடு செயல்படுவதும், இத்தூய நோக்கோடு யார் யாரெல்லாம் பாடுபடுகிறார்களோ அவர்களோடு கை கோர்த்து நிற்பதும் நமது கடமையாகும். இல்லையெனில் அல்லாஹ் கூறும் (கூற்றை) எச்சரிக்கையை பயந்து கொள்ளுங்கள்.

"நீங்கள் புறப்படாவிட்டால் மிகத் துன்புறுத்தும் வேதனையால் (அல்லாஹ்வாகிய) அவன் உங்களை வேதனை செய்வான். அன்றியும் (உங்களைப் போக்கி உங்களிடத்தில்) உங்களல்லாத (வேறு) சமூகத்தாரை பகரமாக்கி விடுவான். (ஏனென்றால்) அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்" ( 9:39)

"விசுவாசம் கொண்டோரே!) நீங்கள் தைரியத்தை இழந்துவிட வேண்டாம். கவலையும்பட வேண்டாம். (உண்மையாகவே) நீங்கள் விசுவாசம் கொண்டவர்களாக இருந்தால் நீங்கள் தாம் மிக்க மேலானவர்கள். உங்களுக்கு (உஹதுப் போரில் தோல்வியுற்றுக்) காயம் ஏற்பட்டதென்றால் (அதைப்பற்றி அதைரியம் அடையாதீர்கள். ஏனென்றால்) அந்த ஜனங்களுக்கும் இதைப் போன்றே (பத்றில் தோல்வியுற்றுக்) காயம் ஏற்பட்டுள்ளது. அந்த (சோதனையான) நாட்களை மனிதர்களுக்கிடையில் மாறிமாறி வரும்படி நாம் செய்கின்றோம். ஏனென்றால் (உங்களில்) உண்மையாகவே விசுவாசம் கொண்டவர்கள் யாரென்று அல்லாஹ் அறி (வித்து விடு) வதற்காகவும் உங்களில் தியாகிகளை அவன் எடு (த்தறிவி) ப்பதற்காகவுமே (இவ்வாறு செய்கிறான்) இன்னும் அநியாயக் காரர்களை அல்லாஹ் நேசிக்கமாட்டான்"

( 3:139,140)

இஸ்லாமிய சமூகம் இந்நாட்களில்



படிப்பகம்

padippakam



சந்திக்கும் இப்பயங்கர சோதனைகளெல்லாம் இறைவனின் ஏற்பாடே. இவைகள் வெற்றியின் அறிகுறிகளே.எனவே பொறுமை காப்போம். பொறுமையின் பின்தான் வெற்றிவரும் அல்லாஹ் கூறுவதைக் கவனியுங்கள்.

**"(விசுவாசம் கொண்டோரே!) உங்களுக்கு முன் சென்று விட்டார்களே அத்தகை யோரின் உதாரணம் (சோதனை நிறைந்த நிலைகள்) உங்களுக்கு வராத நிலையில் நீங்கள் சுவர்க்கத்தில் நுழைந்து விடலா மென்று எண்ணிக் கொண்டீர்களா, அவர் களை வறுமையும் பிணியும் பீடித்தன. தூதரும் அவருடன் விசுவாசம் கொண்ட வர்களும் அல்லாஹ்வின் உதவி எப்பொ ழுது (வந்து சேரும்) என்று கூறும் வரை அவர்கள் (இன்னல்கள் பலவற் றால்) அலைக்கழிக்கப்பட்டு விட்டார்கள்." தெரிந்து கொள்ளுங்கள் அல்லாஹ்வுடைய உதவி நிச்சயமாக மிக சமீபத்திலி ருக்கிறது." (என்று கூறப்பட்டது)" (2:214)**

உலக நாடுகளில் காஷ்மீர், பர்மா, சூடான், செச்னியா, பொஸ்னியா, றுவண்டா, சோமாலியா, போன்ற இன்னும் பல இடங் களில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவு கொலை, கொள்ளை, மோசடி, புரட்சி, போன்ற இவை அனைத்துமே, அல்லாஹ்வின் ஒளியை வாயால் ஊதி அணைத்துவிட முயலும் சில வீணர்களின் முயற்சியாகும். இவர்களுக்கு அல்லாஹ் கூறும் கூற்றைப் பார்ப்போம்.

**"அவர்கள் தங்கள் வாய்களினால் (ஊதி) அல்லாஹ்வின் பிரகாசத்தை அணைத்து விட நாடுகின்றனர். இந்நிராகரிப்போர் வெறுத்த போதிலும் அல்லாஹ் தன்னுடைய பிரகாசத்தை பூர்த்தியாக்கி வைப்பதைத் தவிர (வேறெதையும்) நாடவில்லை." (2:32)**

வெற்றி முன்னோக்கி வந்து கொண்டி ருக்கிறது. எனினும் அவ்வெற்றிக்குரிய வழிவகை களை நாம் தேடுவது மிக அவசியமாகும். அதுதான் அல்லாஹ் காட்டிய வழியாகும்.

**"(நபியே!) நீர் அல்லாஹ்வின் வழிமுறை யில் யாதொரு மாறுதலையும் காணவே மாட்டீர்." (33:62)**

**"(நபியே!) அல்லாஹ் ஏற்படுத்திய வழியில் யாதொரு திருப்பத்தையும் நீர் காணவே மாட்டீர்". (35:43)**

இஸ்லாமிய உடன் பிறப்புக்களே! அகதிச் சோதரர்களே!

நமக்கு நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றவைகளை நாம் அசை போட்டுப் பார்ப்பது காலத்தின் கட்டாயத் தேவையாகும். இவை அனைத்துமே அல்லாஹ் வின் ஏற்பாடாகும். இதன் வெளிப்படை தீயதாக இருப்பினும், ஏதோ ஒரு வகையில் நன்மை உண்டு என உறுதியாக நாம் நம்பியாக வேண்டும். அல்லாஹ் தன் திருமறையில் பின்வருமாறு கூறுகிறான்.

**"இன்னும் ஒரு பொருளை அது உங்க ளுக்கு நன்மையாக இருக்க (அதை) நீங்கள் வெறுக்கலாம். இன்னும் ஒரு பொருளை அது உங்களுக்குத் தீமையாக இருக்க (அதை) நீங்கள் விருப்பலாம். (அவற்றில் நன்மை உண்டா? இல்லை யா? என்பதை) அல்லாஹ்வே அறிவான். நீங்களோ அறியமாட்டீர்கள்" (2:216)**

அல்லாஹ்வின் ஏற்பாட்டை, அவன் எம்மீது விதித்திருப்பவற்றை பூரணதிருப்தி யோடும் பொறுமையோடும் உறுதியோடும், நன்மை கிடைக்குமென்ற நம்பிக்கையோடும் எதிர் கொள்ள வேண்டும். நிச்சயமாக அல்லாஹ் எம்மை வீணாக்க மாட்டான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எமதுள்ளத்தில் வளர வேண்டும். ஒரு கண் சிமிட்டும் நேரத்திற்குள் வல்ல அல்லாஹ் எதையும் மாற்றி அமைக்கும் சக்தியுள்ளவன். வலிமையுள்ளவன்.

நாம் நாளாந்தம் சந்திக்கும் சோதனை கட்கும் வேதனைகட்கும் எல்லையே இல்லை என்பது உண்மைதான். என்றாலும் அல்லாஹ் வின் அன்பும், அருளும் பாசமும் எம்மீது தான் உண்டு. எனவே, அந்த அல்லாஹ்விடம் இரு கரம் ஏந்திப் பிரார்த்திப்போம். பொறுமை யோடு இருப்போம். எமது பலவீனத்தையும் குறைபாட்டையும் அந்த வல்ல அல்லாஹ்விடம் முறையிடுவதைத் தவிர எமக்கு வேறு வழி இல்லை. அவன்தான் பலமற்றவர்களினதும் எங்களதும் இறைவன். அவனே எமக்குப் போதும். அவன்தான் உதவி புரிபவர்களில் மிக்க மேலான்.

அகதிச் சோதரன்
– அகத்தி முறிப்பான் –



படிப்பகம்

padippakam



# விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுக்கு வழங்கிய 'பாதுகாப்பு' !

அண்மையில் BBC தமிழோசைக்கு அளித்த பேட்டியில், விடுதலைப் புலிகள் அமைப்பின் முஸ்லிம்கள் தொடர்பான நிலைப் பாட்டையும், அவர்களை வட மாகாணத் திலிருந்து வெளியேற்றியதற்கான காரணத்தையும் அதன் தலைவர் பிரபாகரன் விளக்கியிருக் கிறார். முஸ்லிம் மக்கள் பற்றிய உங்களது நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்கு அவர் அளித்த பதில் வருமாறு, "முஸ்லிம் மக்கள் தனித்துவப் பண்பாடுடைய ஓர் இனக்குழு என்ற வகையில் அவர்களது பிரச்சனை அணுகப்பட வேணடும். முஸ்லிம் மக்களின் தனித்துவம், நில உரிமைப்பாடு பேணப்படும் அதேவேளை அவர்கள் தமிழ் மக்களோடு ஒன்றிணைந்து வாழ்வதே அவர்களது சமூக, அரசியல், பொருளாதார வாழ்வைச் சிறப் பிக்கும் என நாம் கருதுகின்றோம். சிங்களப் பேரினவாதிகளும், சுயநலம் கொண்ட முஸ்லிம் அரசியல் வாதிகளும் தமிழ் முஸ்லிம் மக்களி டையே வேற்றுமையையும், விரோதத்தையும் வளர்த்துவிட முயற்சிக்கிறார்கள். இந்த சூழ்ச்சி களுக்கு முஸ்லிம் மக்கள் பலிக்கடா ஆகக் கூடாது."

'யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்களை ஏன் வெளியேற்றினீர்கள் என்று கேட்டதற்கு, "90ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் இனக்கலவரம் வெடித்துப் பெரும் தொகையில் தமிழ் மக்கள் கொல்லப் பட்ட பொழுது யாழ்ப்பாணத்தில் கலவரம் பரவும் ஆபத்து எழுந்தது. அந்த வேளையில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பைக் கருதி நாம் அவர்களை யாழ்ப்பாணத்திலிருந்து தற்காலி கமாக வெளியேறுமாறு கேட்டுக் கொண்டோம். ஆயினும் யுத்தம் முடிவடைந்து சமாதான சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் அவர்களை மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியமர அனுமதிப்போம்" எனப்பதில் அளித்துள்ளார். ( களத்தில் 5.3.93)

90ம் ஆண்டு ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பித்த போது, 'முஸ்லிம் ஊர்காவல்படை', 'ஜிகாத்' என்ற பெயர்களில் இலங்கை அரசால் ஊட்டி வளர்க்கப்படும் புல்லுருவிக்கும்பல் தமிழ் மக்களைத் தாக்கியது. ஆனால் யுத்தத் தேவைகளுக்கு என்று சொல்லி முஸ்லிம் வியாபாரிகளின் கடைகளைக் கொள்ளையடித் ததும், பணம் கேட்டு முஸ்லிம் முதலாளிகளைப் பணயம் வைத்ததும், ஜிகாத் உறுப்பினர்களைக் கைது செய்ய என்று சொல்லி முஸ்லிம் கிராமங்களைச் சுற்றி வளைத்து இராணுவம் போல தேடுதல் வேட்டை நடத்தியதுமான விடுதலைப்புலிகளின் செயல்கள் இத்தாக்குத லுக்கு தூபமிட்டன என்பது உண்மை. மேலும் இச்சம்பவங்களை "இனக்கலவரம் வெடித்து பெருந் தொகையில் தமிழ் மக்கள் கொல்லப்பட் டனர்" என வர்ணிப்பது மிகவும் மிகைப்படுத்தப் பட்ட ஒன்று. இதன் விளைவாக "யாழ்ப்பாணத் திலும் கலவரம் பரவும் ஆபத்து எழுந்தது" என்பது பச்சைப் பொய். வடமாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே நிலவி வருகிற வேற்றுமைகள் இனக் கலவரத்தைத் தோற்று விக்கிற அளவுக்கு பகையானவையாக ஒரு போதும் இருந்ததில்லை. அதுவும் யாழ்ப் பாணத்தில் அறவே இல்லை.

இவையனைத்தையும் விடுதலைப் புலிகள் மறுக்கட்டும். அவர்கள் சொல்வதையே உண்மை யென்று எடுத்துக் கொள்வோம். அப்படியொரு "கலவரம் பரவும் ஆபத்து எழுந்த" வேளையில் அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு, ஜிகாத் போன்ற புல்லுருவிக் கும்பல்களையும் முஸ்லிம் மக்களையும் வேறு பிரித்துக்காட்டியிருக்க வேண்டும். இத்தகைய கலவரங்கள் "தமிழ் முஸ்லிம் மக்களிடையே வேற்றுமையையும் விரோதத்தையும் வளர்த்து விடும்" என்று சொல்லியிருக்க வேண்டும். இதனால் "சிங்களப் பேரினவாதிகளும், சுயநலம் கொண்ட முஸ்லிம் அரசியல்வாதிகளுமே"



படிப்பகம்

padippakam



பயனடைவார்கள் என்பதை உணர்த்தியிருக்க வேண்டும். "முஸ்லிம் மக்கள் தனித்துவப் பண்பாடுடைய ஓர் இனக்குழு" என்ற தமது நிலைப்பாட்டை தமிழ் முஸ்லிம் மக்களுக்கு விளக்கி தமிழீழ விடுதலையின் வெற்றிக்கு இவ்விரு சமூகங்களதும் ஒற்றுமை அவசியம் என்பதைப் புரிய வைத்திருக்க வேண்டும். ஒரு வேளை இதனையும் மிஞ்சி மூர்க்க குணம் கொண்டு முஸ்லிம் மக்களைத் தாக்கியே தீருவது என தமிழ் மக்கள் உருக் கொண்டு நின்றிருந் தால், இத்தகைய சூழ்நிலையில் என்ன செய்வது என்பது பற்றி முஸ்லிம் மக்களின் கருத்தை அறிந்திருக்க வேண்டும். அதைத் தமிழ் மக்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பளித்திருக்க வேண்டும். இப்பிரச்சினைக்குத தீர்வு காண மக்களுக்கு அதிகாரம் இருந்திருக்க வேண்டும். அத்தகைய அதிகாரம் கொண்ட மக்கள் கமிட்டியில் இப்பிரச் சினைக்குத் தீர்வு காண மக்களுக்கு அதிகாரம் இருந்திருக்க வேண்டும். அத்தகைய அதிகாரம் கொண்ட மக்கள் கமிட்டியில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும்.

இவற்றில் எதுவுமே நடக்கவில்லை. நடந்தது என்ன? அதிகாரமற்ற மக்களின் மீது விடுதலைப் புலிகளின் இராணுவ சர்வாதிகாரம் பிரயோகிக்கப்பட்டது. 24 மணி நேர அவகா சமும் வெளியேற்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. இதற்கும் கட்டுப்பட முஸ்லிம் மக்கள் நிர்ப்பந்திக் கப்பட்டனர். விரும்பியோ விரும்பாமலோ இதைச் சகித்துக் கொள்ள வேண்டியநிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டது. இன்று விடுதலைப் புலிகள் தமது சொந்த முடிவுக்கான பழியை தமிழ் மக்கள் மீது சுமத்தியுள்ளனர். "முஸ்லிம் மக்களை அவர்களின் பாதுகாப்புக்காகவே வெளியேற்றினோம்" என்பது, முஸ்லிம்களுக்கு எதிராக தமிழர்கள் ஒரு கலவரத்துக்கு தயாரானர்கள் என்றும், தமிழர்களின் சார்பில் அப் பொறுப்பை மாகாணங்களுக்கு வெளியே முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு பொறுப்பான வர்கள் யார் என்று விடுதலைப் புலிகள் நினைக் கிறார்கள்? இலங்கை அரசாங்கமா? அவ்வா றெனில் "தமிழ் மக்களோடு சேர்ந்து வாழ்வதே முஸ்லிம் மக்களின் சமூக பொருளாதார அரசியல் வாழ்வைச் சிறப்பிக்கும்" என்பதற்கு அர்த்தம் என்ன?

"கலவரம் பரவும் ஆபத்துத்தான்" முஸ்லிம்களை வெளியேற்றியதற்கு காரணம் என்றால், அவர்களை மீண்டும் குடியமர அனுமதிப்பதற்கு "யுத்தம் முடிவடைந்து சமாதான சூழ்நிலை ஏற்படும் பட்சம்" வரை காத்திருப்பது ஏன், ஒருவேளை, யுத்தம் தொடர்கிற வரையில் 'கலவரம் பரவுவதற்கான ஆபத்தும்' தொடரும் என்று விடுதலைப்புலிகள் முடிவுகட்டி விட்டார்களா? இந்த ஜனநாயகமற்ற பாதையில் விடுதலை யுத்தத்தை வெற்றிக்கு இட்டுச் செல்லலாம் என நம்புகிறார்களா? அவ்வாறெனில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பின்வரும் விடயங் களைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

முதலாவதாக: முஸ்லிம் மக்களின் ஜன நாயக உரிமைகளை அங்கீகரித்து அவர்களை தம்முடன் ஐக்கியப்படுத்திக் கொள்ள தமிழ் மக்கள் தயாராக இல்லையென்றால், வடக்குக் கிழக்கைத் துண்டாடி தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் இலங்கை அரசின் இராணுவத்திட்டங்களை வெற்றி கொள்வது சாத்தியமானதல்ல.

இரண்டாவதாக: "சிங்களப் பேரினவா திகளும் சுயநலம் கொண்ட முஸ்லிம் அரசியல் வாதிகளும் தமிழ் – முஸ்லிம் மக்களிடையே வேற்றுமையையும் விரோதத்தையும் வளர்த்து" தமிழ் விடுதலையை நசுக்க முயல்கிறார்கள். இந்தச் சூழ்ச்சிகள் பலிக்க விடுதலைப்புலிகள் இடம் வைக்கக் கூடாது.

மூன்றாவதாக: விடுதலைப் புலிகளின் ஜனநாயக விரோதப்பாதைக்கு மாற்றாக ஜனநாயகப் பாதையில் தமிழீழ விடுதலையை வென்றெடுக்க அணிதிரள்வதற்குப் பதிலாக, விடுதலைப்புலிகளைக் காரணம் காட்டி இலங்கை அரசின் நோக்கங்கள் நிறைவேற முஸ்லிம் மக்கள் வாய்ப்பளிக்கக் கூடாது. இதன்மூலம் அவர்கள் தமது ஜனநாயக உரிமைகளைத் தானும் வென்றெடுக்க இயலாது.

இவை காரணமாக, முஸ்லிம் மக்களின் ஜனநாயக உரிமைகளும், பாதுகாப்பும் விடு தலைப் புலிகளால் மீறப்படமாட்டாது' என்ற உத்தரவாதத்தை வழங்கி அவர்கள் மீண்டும் தமது பகுதிகளில் குடியமரலாம் என பகிரங்கமாக அறிவிக்க விடுதலைப் புலிகள் அமைப்பு இப்போதே முன்வர வேண்டும் எனக் கோருகின்றோம்.

***(நன்றி பனிமலர், மார்ச் – ஏப்ரல் 1993)***



படிப்பகம்

padippakam



## பாசிசம் என்பது

தனது இனம், தனது கலாச்சாரம் ஆகியவையே உயர்ந்தது எனும் மமதையுடன், ஆக்கிரமிப்பின் அடிப்படையிலான தேசிய வெறியும், இன வெறியும் சேரும் போது பாசிசம் உருவாகிறது. பிறகு அது பன்முகச் சமுதாயத்தின் (Piural Socity) கோரிக்கைகளை ஏற்க மறுக்கும் மனோபாவத்தை உருவாக்குறிது. அடுத்து இத்திசையில் செல்பவர்கள் தம்முடைய கருத்தைப் பிறருக்குத் திருப்திகரமான முறையில் எடுத்துரைப்பதுமில்லை. அடுத்தவரின் கருத்தைப் பொறுமையாகக் கேட்பதுமில்லை. மேற்சொன்ன தன்மைகள் கொண்ட மனோநிலைக்குத் தான் பாசிசம் என்கின்றோம். இத்தகைய மனோநிலை கொண்டவர்கள் பாசிஸ்ட்டுகள் ஆவர்கள்.

*மௌலானா ஷஃபி முனீஸ் அவாகள்*

## 1997 டிசம்பர் வரை W.F.P யின் உலர் உணவு உதவித் திட்டம் தொடரும்

வடகிழக்கில் இனப்பிரச்சினை காரணமாக இடம் பெயர்ந்துள்ள ஐம்பதினாயிரம் மக்களுக்கு உணவு நிவாரண உதவி வழங்குவதற்கு ஐ.நா. உலர் உணவுத் திட்டம் புதிதாக 16 கோடியே 80 இலட்சம் ரூபாவை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஐ.நா. சபையின் உலக உணவுத் திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி கெத்தரின் பேர்ட்டின் இதற்கான அங்கீகாரத்தை வழங்கியதாக இலங்கையின் பிரதிநிதி ஜோசப் ஸ்கைலைஸ் அறிவித்துள்ளர்.

வடகிழக்கு மாகாணங்களிலிருந்து இடம் பெயர்ந்து புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களிலுள்ள 120 நலன்புரி நிலையங்களில் வாழ்வோருக்கு இவ்வுதவி வழங்கப்படும் என்றும் ஐ.நா. சபையின் தகவல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

உலக உணவு ஸ்தாபனம் வழங்கும் நிவாரண உதவியில் அரிசி, சீனி, மைசூர் பருப்பு, என்பன அடங்கும். அரசாங்கம் இந்த உதவித் திட்டத்தின் கீழ் 538 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய்யை வழங்கும். இதன் பெறுமதி 5 கோடியே 54 இலட்சம் ரூபாவாகும்.

இந்த நிவாரண உதவியைப் பெறும் ஒவ்வொரு வரும் தினமும் 400 கிறாம் அரிசி, 50 கிறாம் பருப்பு 20 கிறாம் சீனி, 25 கிறாம் தேங்காய் எண்ணெய் என்பவற்றைப் பெறுவார்கள்.

இத்திட்டம் சுகாதார, சமூகநல, நெடுஞ்சாலைகள் அமைச்சினூடாக செயற்படுத்தப்படும். புனர்வாழ்வு, புனரமைப்பு, துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சு இதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.



படிப்பகம்

padippakam



# திரை மறைவில் சில சதிகள்

## சிலாவத்துறை "எம்மார்"

* அகதி முகாம்களில் வாழும் முஸ்லிம்களுக்கு அவர்களின் குடிசைகளைத் திருத்திய மைக்கவென புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு குடும்பத்திற்கு 7000/- வீதம் ஒதுக்கியிருந்தது. இப்பணம் ஒதுக்கப்பட்டு வருடங்கள் ஒன்றிரண்டு தாண்டியும் இதுவரை சகல முகாம்களுக்கும் பூரணமாகக் கொடுத்து முடிக்கப்படவில்லை. குறிப்பிட்ட பிரதேச அதிகாரிகளின் அசிரத்தையே இத்தாமதத்திற்குக் காரணம் எனக் கூறப்பட்டாலும், திரை மறைவில் நடக்கும் சில இலஞ்ச எதிர்பார்ப்புகளே இதன் பிரதான காரணம் என முகாம் வாசிகளால் தெளிவாகக் கூறப்படுகிறது. ஆளுமை கொண்ட சில பிரதேச அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் இப்பணத்தை முழுமையாக வழங்குவதில் இழுத்தடிப்புச் செய்வதாக அறியக் கிடக்கிறது.

மேற்படி பணம் காசோலையாகவே ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட முகாம் ஒன்றிற்கு காசோலைகள் வழங்கப்பட வேண்டுமாயின் குடும்பமொன்றிற்கு வழங்கப்படும் 7000/- வில் 1000/- மறைமுகமாக குறிப்பிட்ட நபர்களுக்குத் தரப்படும் என அம்முகாம் வாசிகள் அனைவரும் ஒத்துக் கொண்ட பின்னர், உடனடியாக அம்முகாமுக்கு காசோலைகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறே ஒவ்வொரு முகாமும் பணத்தைப் பெற்றுக் கொண்டு குடும்பத்திற்கு தலா 1000/-வீதம் கையுறை செலுத்தி வருகின்றனர். வெந்து நொந்து வேதனையால் வாடிவதங்கி அகதிக் குடிசையில் வாழ்ந்து வரும் இம்மக்கள், தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பணத்தைப் பெறவே இலஞ்சம் கொடுக்க வேண்டிய துரதிஷ்ட நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். மேலிடங்களுக்கு இந்த இலஞ்ச விவகாரம் தெரிந்திருந்தும் இன்றைய கட்சி அரசியலால் அதனைத் தடுத்து நிறுத்த முடியாதுள்ளதாகக் கூறப்படுகிறது.

* இடம் பெயர்ந்த முஸ்லிம்களைப் பொறுத்த வரை அவர்கள் இருவகையான தொண்டராசிரியர் நியமனங்களால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

1. 1990 ஆம் ஆண்டின் முன் (அகதியாகுமுன்) நீண்ட காலமாகத் தொண்டராசிரியராகக் கடமையாற்றிய மன்னார் மாவட்ட தொண்டராசிரியர்களுக்கு 1990 இன் பின் அரசாங்க ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. ஆனால் அவற்றில் இடம் பெற்றிருந்த 39 தொண்டர் ஆசிரியர்களுக்கும் மன்னார் கல்விக் காரியாலயத்தால் நேர்முகப் பரீட்சை நடாத்தியிருந்தும் - அவர்களுக்கான பாடசாலைகள் ஒதுக்கியிருந்தும் இன்றுவரை இவர்களுக்கு அரசாங்க நியமனம் வழங்கப் படாது புறந்தள்ளப்பட்டுள்ளனர். நேர்முகப் பரீட்சையும் முடிந்து, வருடங்கள் சில தாண்டிய நிலையில் நியமனம் இன்று கிடைக்கும் நாளை கிடைக்கும் என ஏங்கிய வண்ணம் இந்த 39 பேரும் திண்டாடித் திரிகின்றனர். இந்த நியமனத்தை எதிர்பார்த்தே வேறு போட்டிப் பரீட்சைகளில் தம் கவனத்தைச் செலுத்தாது காலத்தைக் கழிக்கின்றனர். தம்முடைய நிலை என்ன என்பது பற்றியும் தங்களுக்கு நியமனம் வழங்கப்படாத காரணம் என்ன என்பது பற்றியும் மன்னார்க் கல்விக் காரியாலயம் எவ்வித தெளிவையும் அளிக்கவில்லை என



படிப்பகம்

padippakam



இவர்கள் தெரிவிக்கின்றனர். தாம் பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல்வாதிகளும் குறிப்பிட்ட நியமனத்தைப் பெற்றுத் தருவதாகக் கடந்த 5 வருடங்களாகத் தங்களை ஏமாற்றி வந்துள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

11. 1990 ஆம் ஆண்டின் பின்னர் இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் பிள்ளைகளது கல்வித் தேவை கருதி, சில அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவி மூலம் 89 தொண்டராசிரியர் புத்தளம் கோட்டக்கல்வி அலுவலகத்தால் அகதி மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டனர். இவர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையில், 4 பாடங்களில் சித்தியடைந்தோராயும் 'போலவலான' ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் குறுகிய கால பயிற்சியை முடித்துக் கொண்டோராயும் காணப்படுகின்றனர்.

மாதமொன்றிற்கு 1500/- - 2000/- வரை கொடுப்பனவில் சேவைக்கமர்த்தப்பட்ட இந்த 89 பேரும் சுமார் 3-4 வருடகால சேவையின் பின் திடீரென கைவிடப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சம்பளம் வழங்கி வந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்ந்தும் சேவை புரிவதை நிறுத்திக் கொண்டுள்ளன. இந்த நிலையில் பாடசாலையை விட்டு நின்ற இந்த 89 பேரினதும் குறிப்பிட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களினதும் எதிர் காலம் கேள்விக் குறியாகியுள்ளது. அகதி முஸ்லிம் மாணவர்கள் கல்வி பயிலும் கல்பிட்டி அல்-அக்ஸா மத்திய கல்லூரியின் மாலை நேரப் பிரிவு இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் 1000 மாணவர்கள்வரை கல்வி பயிலும் இப்பாடசாலையில் சுமார் 30 ஆசிரியர்கள் வரை கடமையற்றி வந்தனர். இவர்களில் 20 பேர் தொண்டராசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இந்த 20 பேரும் இப்பாடசாலையை விட்டு நிற்கும் நிலையில் இம்மாணவர்களதும் தொண்டராசிரியர்களதும் நிலை என்ன என்பது பற்றி எவரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

மேற்படி இருவகைத் தொண்டராசிரியர்களின் நிலை பற்றி பல தடவைகள் பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரமாகியிருந்தும் பல அரசியல்வாதிகளிடம் இது பற்றித் தெளிவுபடுத்தியிருந்தும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

# முஸ்லிம் மக்கள் போராட்டத்துக்கு எதிரானவர்களல்லர்

## கிழக்குப் பிராந்திய புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தூறை

வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டது குறித்து வருந்துவதாகவும் அவர்களை மீளக் குடியமர்த்துவதற்கான முயற்சிகளை தாங்கள் செய்து வருவதாகவும் புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் கூறியிருந்தார். ஆனால் அதன் பின் அது குறித்து எந்தவித பேச்சுமில்லையே ஏன்?

உண்மையில் வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேறச் சொல்வதானது வருந்தத்தக்க விடயம் பல இழப்புக்களின் மத்தியில் போராட்டம் தொடர்ந்து வந்த நிலையில் சிங்கள பேரினவாதம் போராட்டத்தை அடக்குவதற்கு முஸ்லிம் மக்களை ஒரு கருவியாகவே பயன்படுத்தி வந்தது என்பதும், முஸ்லிம் பெயர்களில் சிங்களவர்களைக் கூட இயக்குவித்த சம்பவங்களும் அன்று நடந்தன. இன்றும் தொடர்ந்து வருகின்றன. ஆனால் முன்னரை விட இன்று முஸ்லிம் - தமிழ் மக்கள் உறவு சுமுகமாகியுள்ளது. அவர்கள் போராட்டத்துக்கு எதிரானவர்கள் அல்ல. மற்றும் அவர்கள் தமிழ் மொழியை வளர்ப்பதிலும், தமிழ்ப்பற்றிலும் அவர்களது பணி போற்றத்தக்கவை. விட்ட தவறை நிவர்த்தி செய்ய, மீளக் குடியேற்ற வேண்டியவர்கள் நாங்களே. அனால் இன்று முஸ்லிம் மக்களை மட்டுமல்ல தமிழ் மக்களையே உடனடியாக மீளக் குடியேற்ற முடியாத நிலையில் நாம் உள்ளதை உணர்வீர்கள். எதிர் காலத்தில் அது நடக்கும்.

நன்றி
சரிநிகர் இதழ் - 104



படிப்பகம்

padippakam



**எருக்கலம்பிட்டி**

இந்து சமுத்திரத்தின் நடுவே இலங்கையின் வடக்கே இலங்கையைத் தொட்டும் தொடாதவாறும் முத்திமிட்டுக் கொண்டிருக்கும் ஒரு பட்டினம் அதுதான் மன்னார்தீவு. மன்னார் தீவின் மகிமையை உலகளாவச் செய்த ஒரு கிராமம் தான் எங்கள் ஊர் எருக்கலம்பிட்டி. சுமார் 3 சதுரமைல் (2000 ஏக்கர்) பரப்புடைய எங்கள் ஊரில் எழுநூறு வருடங்கள் 100%மாக முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

ஆத்மீகத் துறையில் அவர்களுக்கு இருந்த ஈடுபாட்டை அங்கே கட்டப்பட்டிருந்த 8 அழகிய பள்ளிவாசல்களும், 3 அரபிக் கலாசாலைகளும், தெட்டெனத் தெளிவுபடுத்தின. இலௌகீகக் கல்வியிலும் எங்கள் ஊர் மக்கள் தம் புகழை உலகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் பரப்ப அங்கே புகழ் பூத்த இரு கல்லூரிகள் இருந்தன. அதில் ஆண்களுக்கென ஒரு மத்திய கல்லூரியும், மகளிருக்கென ஒரு மகளிர் கல்லூரியும் இருந்தன. அக்கல்லூரிகளின் கல்வி மேம்பாட்டை பரீட்சைப் பெறுபேறுகளைக் கண்டு கேட்டு ஈழ நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஏன் இந்தியாவில் இருந்தும் கூட மாணவர்கள், எமதூர் விடுதிகளில் தங்கி கல்வி கற்றார்கள், கற்பித்தார்கள்.

இஸ்லாமியச் சூழலில், இஸ்லாமியக் கலாசாரத்தில் எமதூர் வடமாகாணத்தின் ஒரு சொர்க்க பூமியாகத் திகழ்ந்தது. எமது இந்த கல்லூரி என்ற வயலின் அறுவடையாக வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், ஆய்வு கூட உதவியாளர்கள் என உத்தியோகத்தர்கள் சுமார் 450 பேர் உலகின் எல்லாப் பாகங்களிலும் புகழ்பரப்பி வருகின்றார்கள்.

கல்வித்துறையில் மாத்திரமல்ல விளையாட்டுத் துறையிலும் இலக்கியத்துறையிலும், சாகித்திய பரிசுகள் போன்ற தேசிய விருதுகள் பலவற்றை எமதூர் மாணவர்கள் பெற்றுள்ளார்கள். இது மட்டுமல்ல வியாபாரத்திலும், விவசாயத் துறையிலும் அவர்கள் சிறந்து விளங்கினார்கள். வியாபாரத் துறையில் எமதூர் மக்களுக்கு இருந்த ஆர்வத்தினால் சிறப்பினால், திறமையினால் மன்னார் பட்டினத்தின் 33% (50) கடைகளில் எமதூர் மக்களே வியாபாரம் செய்து வந்தார்கள். எமதூர் மக்கள் மும் மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தமையினால் இலங்கையின் தலைநகரான கொழும்புடன் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்த அது உதவியாக இருந்தது.

விவசாயத்துறையில் எமதூர் மக்களுக்கு இருந்த ஆர்வத்தினாலும், திறமையினாலும், கஷ்டப்பட்டு உழைக்கும் கரங்களை அவர்கள் கொண்டிருந்த தனாலும் இதனால் பெரும் நிலப்பரப்பின் விதைப்புக் காலங்களில் மன்னார் விவசாயிகளின் விதை நெல் களஞ்சியமாகத் திகழ்ந்தது.

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற முதுமொழிக்கேற்ப ஆழ்கடலில் முத்துக் குளிப்பதிலும் சங்கு குளிப்பதிலும், எமது ஊராரின் திறமையை பாரத மக்களே பாராட்டிப் புகழும் அழவிற்கு திறமை பெற்றிருந்தனர். ஆழமான சமுத்திரத்தினடியிலிருந்து எமது சுழியோடிகள் பெற்ற அரிய வலம்புரிச் சங்குகளின் எண்ணிக்கை அதற்குச் சான்று பகரும். மீன்பிடித்துறையிலும் எமது ஊர் மக்கள் சிறந்து விளங்கினார்கள் என்பதற்கு எமதூரிலிருந்து பதனிடப்பட்ட கருவாடு, குளிரூட்டப்பட்ட மீன் என்பனவற்றை ஏற்றிக் கொண்டு ஒவ்வொரு நாளும் கொழும்பை நோக்கி வரும் லொறிகளின் எண்ணிக்கையும் எமதூர் புகையிரத நிலையத்தின் பக்கத்தே இருந்த ஐஸ் பெக்டரியில் ஒவ்வொரு நாளும் விற்பனையாகும் பனிக்கட்டிகளின் எண்ணிக்கையும் சான்று பகர்ந்து வந்தன.

எமதூரிலிருந்து கொழும்புக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியைத் தேடித்தந்த தெங்கு, மரமுந்திரிகை, பனங்கிழங்கு என்பவற்றின் சுமார் 400 ஏக்கர் தோட்டங்களின் நில சுவாந்தர்களாக எமதூர் மக்கள் விளங்கினார்கள்.

எமதூரில் இல்லை என்று சொல்ல எதுவுமே இல்லை. அடிப்படைத் தேவைகளான நீர் குழாய்கள் மூலம் ஒவ்வொரு வீட்டையும் சென்றடையக் கூடியதாக ஊரின் மத்தியிலே பிரமாண்டமான கோடிக்கணக்கான ரூபாய் செலவில் கட்டப்பட்ட நீர்த்தாங்கி, வடகடலிருந்து, கச்சதீவிலிருந்து பார்ப்போருக்கு எமதுதூர் வடகரையை அடைய ஒரு பெரிய வெளிச்சவீடு, எம்மக்கள் சுகமாக வாழ ஆஸ்பத்திரி, அஞ்சல் அலுவலகம், அறிவு பரப்பு பொது நூல் நிலையங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், மீன், இறைச்சி, மரக்கறி சந்தைகள் போன்ற பல கட்டிடங்கள் வான் உயர்ந்து நின்றன. எனினும் கலப்பற்ற ஒரு தனிக்கலாச்சாரம் எமதூரில் இருந்தது.

இவ்வாறு புகழ்பூத்த எருக்கலம்பிட்டி மக்களுக்கு 10,000 குடும்பத்தவருக்கும் ஊரினுள்ளேயிருந்த அசையும் பொருட்களின் பெறுமதி மட்டுமே 500 கோடி ரூபாவிற்கு மேலானதாகும். அசையாச் சொத்துக்களின் பெறுமதியையும் கணக்கிட்டால் அது எத்தனையோ கோடான கோடி ரூபாவகும்.

*நன்றி : தினகரன், S.A அஸீஸ்*

**அட்டைப்பட விளக்கம்**

29.6.1995 அன்று NMRO SLMC உடன்பாட்டு பேச்சுவார்த்தையின் போது இரு கட்டம்

ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!!

padippakam



# சிட்டுக் குருவியின் சேதி தெரியுமா?

தெருவோரத்து ஆலமரம். அங்கு மூட்டை முடிச்சுடன் வந்த ஒரு மனிதன் ஆஹ...... என்று ஆலமரத்தின் அடியில் அமர்ந்தான். நீண்ட தூரம் வெயிலில் நடந்து வந்ததால் அவன் உடலில் வியர்வை வளர்ந்து கொண்டிருந்தது. மேலும் அவன் முகத்தில் இனம்புரியாத ஒரு கவலை ரேகை! ஆலமரத்தையும் அவனையும் தழுவியது தென்றல் காற்று. அவன் முகம் மகிழ்ச்சிக்கு மாறியது.

அந்த மனிதனைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தன இரு குருவிகள். ஒன்று ஆண்குருவி. இன்னொன்று பெண் குருவி

திடீரென்று பெண்குருவி கேட்டது

"இந்த மனிதர்கள் ஏன் எப்போதும் கவலையில் மூழ்கிக் கிடக்கிறார்கள்?"

ஆண்குருவி பதில் கூறியது

"தம் உணவுக்காகத்தான் இப்படி அலைகிறார்கள். பெண்குருவி விடவில்லை. கேள்விக் கணை தொடுத்தது.

"நாமும் தான் அலைகிறோம். நாம் கவலைப்படுவதில்லையே?"

"அவர்களுக்கும் நமக்கும் இரண்டு வித்தியாசங்கள் இருக்கின்றன"

"அப்படியா! என்ன வித்தியாசங்கள்?"

"முதல் வித்தியாசம், நாம் இறைவனைச் சார்ந்து வாழுவது! அவன் அருளால் ஆகாரம் கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம். மனிதர்கள் அவ்வாறில்லை. அவர்கள் இறைவனைச் சார்ந் திருப்பதில்லை. தம் முயற்சியினால் மட்டும் தான் உணவு கிடைக்கிறது என்று அவர்கள் எண்ணிக் கொள்கிறார்கள்!

"எவ்வளவு ஆணவம்! சரி இன்னொரு வித்தியாசத்தைப் பற்றி சொல்லுங்கள்?"

"அது, கிடைத்ததைப் பெற்று இறைவனுக்கு நன்றி செலுத்தும் குணம்! மனிதனுக்கு எவ்வளவு கிடைத்தாலும் நிறைவு ஏற்படுவதில்லை! அதனால் இறைவனுக்கு நன்றி செலுத்துவதும் இல்லை! மேலும் செல்வம் சேர்ப்பதிலேயே தன் வாழ்நாளை கழித்து விடுகிறான்! எப்போதும் அந்தக் கவலைதான்! அப்புறம் எப்படி நிம்மதி அவனைத்தேடி வரும்?"

"நல்லாச் சொன்ங்க! ஒரு விஷயத்திற்காக நாம் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்"

"எதுக்கு?"

"நல்லவேளை, இறைவன் நம்மை மனித இனத்தில் படைக்கவில்லை-"

## முஸ்லிம் சமுதாயத்தின் உரிமைகளை வென்றெடுக்க முஸ்லிம் எம்.பி.க்கள் ஒன்றுபட வேண்டும்

முஸ்லிம் சமுதாயத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு கொள்வதற்கும் கட்சி அரசியல் முரண்பாடுகளைத் தவிர்த்து பாாாளுமன்றத் திலுள்ள இருபது முஸ்லிம் எம்.பி.க்களும் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வரேவண்டும். சமுதாய நலனை கருத்திற் கொண்டு இனியும் நாம் ஒன்றுபடத் தவறினால் அதன் எதிர் விளைவுகள் மிகப்பாரதூரமானதாகவே அமையும்.

முஸ்லிம்கள் சமுதாயப் பற்றுடனும் பரிசுத்தமான உள்ளத்துடனும் செயற்பட்டால் நமது சமுதாயம் இந்த மண்ணில் தலை நிமிர்ந்து வாழ முடியும்.

சில்லறைப் பிரச்சினைகளிலும், அரசியல் பேதங்களிலும் நாம் தொடந்து ஈடுபட்டுக் கொண்டிருந்தால், எதிர்காலத்தல் முஸ்லிம் சமுதாயம் இந்த மண்ணில் அநாதைச் சமுதாயமாகத்தான் வாழ வேண்டிய நிலை ஏற்படும்.

ஒன்று படுவதன் மூலம் நிச்சயமாக எமது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள முடியும். பிளவுபட்டு நின்றால் எதையும் பெற முடியாத நிலைதான் ஏற்படும். எமது ஒற்றுமையின் சக்தியை நாம் உணர மறுத்து வருகின்றோம்.

பாராளுமன்றத்தில் இன்று 20 முஸ்லிம் உறுப்பினர்கள் உள்ளோம். எமக்கிடையேயுள்ள அரசியல் பேதங்களை சமுதாயப் பிரச்சினைகள் வரும் போது நாம் மறந்து விட வேண்டும்.

நாம் ஒன்றுபட்டால், நிச்சயம் எம்மால் எந்தச் சவாலையும் எதிர் கொள்ள முடியும்.

*பிரதி அமைச்சர் அல்ஹாஜ் அலவி மௌலானா*



படிப்பகம்

padippakam



# ஆயுதப்போர்

உலக உயிரினங்களின் அழிவுக்கு பிரதானமாக மூன்று நிகழ்வுகளே காரணங்களாக அமைகின்றன. அவை ஆயுதப்போர், இயற்கையின் சீற்றம் அல்லது வேற்றுக் கிரகவாசிகளின் தாக்குதல், குறுங்கோள்களின் மோதல் என்பனவாகும்.

இன்று முழு உலகிலும் 96 யுத்தங்கள் நடைபெற்று வருகின்றன. லத்தீன் அமெரிக்காவில் 12 யுத்தங்களும், மத்திய கிழக்கில் 36 யுத்தங்களும் ஆபிரிக்காவில் 12 இனவாத யுத்தங்களும் நடக்கின்றன.

இன்று வரை குணப்படுத்த முடியாத தாக்கமாகக் கருதப்படுகின்ற ஹிரோஷிமா நாகசாகி குண்டுவெடிப்புச் சம்பவம் நியூக்ளியர் குண்டுகளால் நிகழ்ந்ததவையாகும். இந்த விதமான குண்டுவெடிப்புச் சோதனைகளை அமெரிக்கா 1130 முறையும், சோவியத் யூனியன் 715 தடவையும், இங்கிலாந்து 49 தடவையும், பிரான்ஸ் 209 தடவையும், சீனா 43 தடவையும், இந்தியா ராஜஸ்தான் பாலைவனத்தில் 1 தடவையும் செய்து காட்டியிருக்கின்றன. இன்றைய உலகின் முதன்மை நாடாக கருதப்படுகின்ற அமெரிக்கா அதனது இராணுவத்திற்காக ராடர் கருவிக்கு அகப்படாத ஸ்டெலித் ஹெலிகொப்டரை தயாரித்துள்ளது. வளைகுடா யுத்தத்திற்காக இது ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருந்ததாகும்.

இந்த இராணுவத் தளபாடங்கள் இலங்கை நாட்டிலும் பாதிப்பை ஏற்படுத்த தவறவில்லை. 'இந்தப் பாதிப்புக்கள் நிவர்த்தி செய்ய முடியாதவையாக ஆகிவிடுமோ' என்ற அச்சம் அபிவிருத்தியை நோக்கி செயற்படுபவர்களிடம் எழுந்துள்ளது. 1983 ஏப்ரல் 9ம் திகதி வாகனம் ஒன்றை வெடிக்க வைத்து நடத்தப்பட்ட முதலாவது தாக்குதல் நடந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள சரித்திரப் புகழ்வாய்ந்த அடைக்கலமாதா தேவாலயத்தை இராணுவத்தினர் ரொக்கட் லோஞ்சர் மூலம் தாக்கினார்கள். (10-04-84) பல கார்கள் வீதிகளில் வைத்தே தீயிலிட்டு எரிக்கப்பட்டன. யாழ் கூட்டுறவு பண்டக சாலையும் அருகிலிருந்த கடைகளும் தீயில் நாசமாகின. ஏப்ரல் 10ந் திகதி மாலை யாழ்நகரில் இருந்த நாகவிகாரை தாக்கப்பட்டது. சிங்கள மகாவித்தியாலயமும் தீயிடப்பட்டது. 1908 ம் ஆண்டிலேயே தயாரிக்கப்பட்ட போயிங், ஜெட், புக்காரா விமானங்கள் இன்று வட-கிழக்கை நாசப்படுத்தி வருகின்றன. 43 வருட அரபு - இஸ்ரேல் மோதல் இன்னும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. இலங்கை உட்பட, 10 நாடுகளில் 7 முஸ்லிம் சமூகங்கள் போரினால் அழிவை ஏதிர் நோக்கியுள்ளன. 11 சமூகங்களில் 9 முஸ்லிம் சமூகங்களாகும். அவை அஸர் பைஜானிகள், ஆர்மீனியர்கள், பொஸ்னியா முஸ்லிம்கள், ஈராக்கிய, ஈரானிய, துருக்கி மற்றும் ரஷ்ய குர்த் மக்கள், மொஸம்பிக் மக்கள், பேரு மக்கள், பர்மாவில் ரொஹில்ஜியா முஸ்லிம்கள், சோமாலியர்கள், இலங்கையர்கள், தென் சூடானியர்கள், சஹாராவில் டோரிக் இன மக்கள் ஆகியவையாகும்.

இலங்கையில் வாழும் 10 லட்சம் முஸ்லிம்களில் 1 லட்சம் பேர் அகதிகளாயுள்ளனர். 1990 ஒக்டோபர் கடைசி



படிப்பகம்

padippakam



வாரத்தில் - மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் ஒட்டுமொத்தமாக இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கு பலவந்தமாக கலைக்கப்பட்டனர். ஆறு அண்டுகளாகியும் அவர்கள் சொந்தப் பிரதேசங்களுக்கு மீளமுடியாத சூழ்நிலை தொடர்ந்தும் நீடித்து வருகிறது.

சிங்களமும், தமிழும் இலங்கையின் அரசகரும மொழியாகவும், ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் ஆக்கப்பட்டிருந்த போதிலும், இது நடைமுறைக்கு ஒவ்வாத சூழ்நிலையே இலங்கைப் போர்களுக்கு காரணமாய அமைந்ததெனலாம். இரு மொழிக் கொள்கையை அமுல்படுத்த வேண்டிய அவசியம் பயனுறுதி வாய்ந்த அரசாங்க நிருவாகப் பொருப்பு மாத்திரமன்றி நாட்டின் அனைத்து பாகத்திலும் எமது அபிவிருத்திக் கொள்கை வெற்றிபெறவும் வழி செய்ய முடியும்.

சமாதானத்திற்கு முதற்படி மற்றவரையும் உலகையும் புரிந்து கொள்ளும் ஆற்றலே என்பதை பொது அறிவுபடைத்த ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவரினதும் பேச்சை புரிந்து கொள்ள நாம் பழகிக் கொள்வோமேயானால் மற்றவரின் கருத்தை புரிந்து கொள்ளவும் வெளிப்படுத்தவும் பழகிக் கொள்ள முடியும். பிறர் பேச்சை நாம் புரிந்து கொள்வோமேயானால் வன்செயலும், கடுஞ்சினமும் நீங்கி கலந்துரையாடல், கருத்துப் பரிவர்த்தனை சார்நெறியை நடைமுறைப்படுத்த முடியும்.

○○○○○○

# இலங்கையில் போரின் காரணமாக 3 இலட்சம் குழந்தைகள் அகதிகள்

## - யுனிசெப் அறிக்கை -

சர்வதேச ரீதியில் நோக்கும் போது ஆங்காங்கு நடைபெறும் போர்களே குழந்தைகளை பல வகைகளிலும் பாதிக்கின்றது. உலகெங்கிலும் 2 மில்லியன் குழந்தைகள் போரினால் கொல்லப் பட்டுள்ளனர். 4 தொடக்கம் 5 மில்லியன் குழந்தைகள் அங்கவீனமுற்றுள்ளனர். 12 மில்லியன் குழந்தைகள் மனநிலை பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

நவீன போர் உத்திகளும் நிலக் கண்ணிகளும் பெருமளவில் குழந்தைகளின் பாதிப்புக்கு காரணமாகின்றன. இதனால் நிலக் கண்ணிகளை தயாரிக்கும் அமைப்புகளுடன் யுனிசெப் நிறுவனம் எந்த வித தொடர்பு களையும் மேற கொள்வதில்லை என்று முடிவெடுத்துள்ளது.

குழந்தைகள் போராளிகளாக ஈடுபடுத் தப்படுவது மிகவும் பாரதூரமான நடவடிக்கை யாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் புலிகள் அமைப்பும் பாடசாலை மாணவர்களை போர் நடவடிக்கைகளுக்கு திருப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இது கண்டிக்கத்தக்கதாகும்.

இலங்கையில் போர் நடவடிக்கைகள் காரணமாக சுமார் 3 இலட்சம் குழந்தைகள் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து வாழ்கின்றனர்.

இவ்வாறு 'யுனிசெப்' உலக சிறுவர்களின் நிலை தொடர்பான 1996 அறிக்கையில் கூறியுள்ளது.



படிப்பகம்

padippakam



# இருண்ட பனித்துளி

தேடிப்பார்
உன்னையும் மீறி
அந்த நினைவுகள்
உனக்குள்
உறைந்து உறைந்து
படிந்து கிடக்கலாம்.

நீ,
விரட்டப்பட்ட
அந்த
கசப்பான நினைவுகளை
உன்னால்
எப்படி கழித்துப்போட
முடிந்தது.
கழித்துப் போடுவதற்கு
நினைவுகள் ஒன்றும்
செருப்புக்கள் அல்லவே

உன்னால்
பொறுத்துப் பொறுத்து
வெறுத்துப்போன
அந்த நினைவுகள்
எனக்குள்,
முன்னிலும் பார்க்க
அதிகமாய்
வளர் பிறைதான்.

ஓ.....
அந்தப் ....
போராட்ட
விளைவுகளால்
அகதியாகிப் போனவனே
உனக்குள்
வெளிப்படும்
நீள் மூச்சுக்கான
அர்த்தம் புரிகிறது
நாட்கள் நகர்கின்றன
மாதங்கள் வருஷங்களுக்குள்
போய்ப் புதைகின்றன
வரலாற்றுப் புத்தகத்தை
தூசி தட்டிப் பார்க்கிறேன்

மனசின் அடியில்
மங்கிய சித்திரம்
ஆறு வருடமும்
ஆறாத் துயரமும்.

சோதரா.....
உனக்குள்
சூழ் கொள்ளும்
தகிப்பும்
தவிப்பும்
நான் அறியாததல்ல
ஏனெனில்,
அது
எமது தாயகமே
எம் பூமிகளை
நாம்
வென்று – மீட்பது
எம்
முதற்கடமை அல்லவா?

இனியும்.......
நாம்
அவர்களுக்கு
கழுத்தை தாழ்த்தி
நடக்கின்ற
கழுதைகள் போல
துணை போக மட்டும்
துணிய மாட்டோம்
அவர்கள் – எம்
ஜீவ பூமிகளை
தன்வயப்படுத்தும்
முனைப்புகளுக்கு
முற்றுப் புள்ளி
வைப்போம்.

ஓ........
இனியும்
ஒரு இருண்ட வரலாறு
இடம் பெறாதிருக்க
இள நெஞ்சங்களில்
வீரத்தை

வளர்ப்போம்
ஏனெனில்
நாங்கள்......

இன்று,
சோகத்தால்
வெளுத்துப் போன
என் – உள்ளம்
உருகி உருகி
அழுகிறது – இது
கண்ணீரல்ல – என்
ஆத்மாவின் ரத்தம்
போதும் நிறுத்துகிறேன்
கண்ணீர் வடிவதையல்ல
எழுதுவதை
ஏனெனில்,
எழுத்துக் கண்ணீரைச்
சிந்திக் கொண்டிருந்த
எனது
எழுது கோலின்
மைக் குருதி
வற்றி விட்டது.
ஆனால்.....
ஈரம் மட்டும்
இன்னும்
உளரவில்லை.

கடைசியாய்......
உமக்கு
காதோடு
ஒரு வார்த்தை
வாழ்வு – மரணம்
எதுவானாலும்,
சொர்க்கம்
எமக்கு
மட்டும்தான்
ஏனெனில்
நாங்கள்.....

நௌஸாத் கமால்
காத்தான்குடி – 05



படிப்பகம்

padippakam



# சமூக விடுதலைக்காக ஐக்கியமாக நின்று குரல் கொடுப்போம்

அபூ பாதிமா

அடால்ஃப் ஹிட்லரின் அனுமதியுடன் நாஜிகள் ஏறத்தாழ அறுபது லட்ரம் ஜெர்மனியர்களை படுகொலை செய்ததாக வரலாறு கூறுகிறது.

கொடூரமான இந்த மனிதப்படு கொலைகள் நடந்த பொழுது அதற்கு எதிராக நாவசைப்பதற்கு கூட அங்கு யாருக்கும் துணிவு இருக்க வில்லை.

எழுத்தாளர்கள், புத்தி ஜீவிகள், மதத் தலைவர்கள் உட்பட எல்லோருமே வாய்மூடி மௌனிகளாய் இருந்தனர்.

பிற்காலத்தில் தங்களின் இந்தச் செயலுக்காக அவர்களில் பலர் வருந்தினர். தாங்கள் செய்தது தவறு எனபதை ஒப்புக் கொண்டனர்

அப்படிப்பட்டவர்களில் ஒருவர்தான் புகழ் பெற்ற ஜெர்மன் நாடாக ஆசிரியரும் கவிஞருமான பர்தால்ட் பிரஹத் (1898-956) என்பவா பிறகாலத்தில் அவர் தன் செயலுக்காக வருந்தி பின்வருமாறு எழுதினார்.

"அவர்கள் கம்யூனிஸ்டுகளை வேட்டையாடியபோது
என் உணர்வுகள் சற்றும் கொப்பளிக்கவில்லை.
எனக்குள் நானே சொல்லிக் கொண்டேன்
கம்யூனிஸ்டுகளை வேட்டியாடியபோது
எண்ணிக்கையில் ஒன்றோ இரண்டோ
ஏறினால் என்ன? குறைந்தால் என்ன?

"அவர்கள் யூதர்களைக் கொடுமை செய்த போது
என் உள்மனம் துடிக்கவில்லை. எனக்குள்
நானே சொல்லிக் கொண்டேன். ஒன்றோ
இரண்டோ யூதர்கள் கூடினால் என்ன?
குறைந்தால் என்ன?"

"அவர்கள் கத்தோலிகர்களை ஆட்டிவைத்த போது
நான் சற்றும் நிம்மதி இழக்கவில்லை.
அப்பொழுது எனக்குள் நானே சொல்லிக்
கொண்டேன். ஒன்றோ இரண்டோ கத்தோலிகர்
கூடினால் என்ன? குறைந்தால் என்ன?

அவர்கள் என் வீட்டுக் கதைவைத் தட்டியபோது எனக்காக குரல் கொடுக்கவும் யாரும் இருக்கவில்லை. மற்றவர்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களையும் துயரங்களையும் கண்டும் கூட பெரும்பாலானவர்கள் சாந்தமாகவே இருந்து விடுகின்றார்கள்.

தங்களையோ, தங்கள் உறவினர்களையோ நேரடியாகப் பாதிக்காத எந்த ஒரு விஷயம் குறித்தும் அவர்கள் மௌனமாகவே இருக்கவே விரும்புகிறார்கள்.

நாட்டிற்கு சமூகத்திற்கு எந்த ஆபத்து வந்தாலும் சரி, எத்தகைய இழப்பு ஏற்பட்டாலும் சரி. தங்களின் நலன்களுக்கு பாதிப்பு இல்லையெனில் அவர்களுக்கு அது ஒரு பிரச்சினையே இல்லை.

ஆனால்

அநீதிகளையும் அக்கிரமங்களையும் ஆக்கிரமிப்புக்களையும், சமூகம் கூட்டாக எதிர் கொள்ளவில்லையெனில், தக்கநேரத்தில் இணைந்து நின்று அவற்றைத் தடுக்க வில்லையானால் "சமூகம் விலை போவது" தவிர்க்க முடியாததாகும்.

சமூகத்தில் யாரேனும் அறியாமையினால் ஏமாற்றப்படுகிறார்கள் எனும் பொழுது மற்றவர்கள் கையால் வாயைப் பொத்திக் கொண்டு இருந்து விட்டால் அந்த "ஏமாற்றுப் பேர்வழிகளின் செயல்களால் முழுச் சமுதாயமும் தனது சுயகௌரவத்தையும் தன்மானத்தையும் இழக்க வேண்டி ஏற்படும். தட்டிக் கேட்கவோ, தடுத்து நிறுத்தவோ யாருமில்லை என்றால் ஏமாற்றுப் பேர் வழிகளின் - தீயவர்களின், கை மேலோங்கி விடும். அவர்களது வயிறுகளும் புடைத்துவிடும்.

அக்கிரமக்காரர்களும் அநீதமானவர்களும் ஒரு தனி நபரையோ சமூகத்தையோ. சொற்களால் செயல்களால் துன்புறுத்தும் போது மற்றவர்கள் மௌனத்தைக் கடைப்பிடித்தால் அல்லது ஏமாற்றுப் பேர்வழிகளுடன் சேர்ந்து தாளம் போட்டால் இந்த மௌனமும் அசைவற்ற தன்மையும் அல்லது தாளம் போடும் தன்மையானதும் அநீதியாளர்களை மேலும் ஊக்குவித்து எல்லோர் மீதும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடச் செய்ய வழிவகுக்கும்.

ஆனால்:-

சமூகத்தில்

அக்கிரமம் தொடங்கும் போது

சமூகம்

ஏமாற்றப்படும் போது

சமூகம் இணைந்து நின்று கண்டித்தால் - அவற்றைக் களைய, பாதுகாப்புப் பெற பாடுபட்டால் அதனை முளையிலேயே தலையெடுக்காது தடுத்து விடலாம்.

ஏமாற்றுக் காரர்களினதும் - அநீதமானவர்களினதும் மிகச் சிறந்த மூலதனமே சமூகத்தின் இந்த மௌனமும் அசைவற்ற தன்மையும்தான். எந்தத் தடையும் எதிர்ப்பும் இன்றி தங்களின் 'காட்டு



படிப்பகம்

padippakam



தனங்களை' அரங்கேற்ற அவர்களுக்கு இந்த மௌனம் நல்ல வாய்ப்பாக அமைந்து விடுகிறது.

நாட்டில் சமூகத்தில் இன்று நடைபெறும் பெரும்பாலான தீச் செயல்களுக்கும் முறைகேடுகளுக்கும் காரணம் எதிர்ப்பையோ கண்டனத்தையோ வெளிப்படுத்தாமல் எந்த அநீதியையும் சகித்துக் கொண்டு செல்லும் மக்களின் மனோபாவம்தான்

சதிகாரர்களின் தீப்பந்தத்திற்கு எண்ணெய் வார்ப்பது இதே மனோபாவம்தான், ஏமாற்றுக்காரர்களின் ஏமாற்றலை சுரண்டலை எதிர்த்துக் குரல் கொடுப்பதும் அதர்மத்தைக் கண்டித்து பொங்கி எழுவதும் கொடுமைகளையும் அநீதிகளையும் எதிர்த்து நின்று போராடுவதும். இத்தீய செயலுக்குரியவர்களின் உள்மனத்தில் நிச்சயம் ஒரு திகிலை ஏற்படுத்தும்

இத்தகைய உயிர்த்துடிப்புள்ள ஒரு சமூகத்தின் ஆளுமை, தீமைகளின் ஆணிவேரை அசைத்துப் பிடுங்கிவிடும்.

ஊழல் பேர்வழிகளும் ஏமாற்றுப் பேர்வழிகளும் என்றைக்கும் விரும்புவது இருட்டைத்தான்! இவர்களுக்கு வெளிச்சம் பிடிக்காது. தங்களின் மலின முகங்களும் இழி செயல்களும் வெளியே தெரிந்துவிடும் என்பதற்காக இவர்கள் வெளிச்சத்தை வெறுப்பார்கள்.

வெளிச்சம் தரும் ஒளி விளக்கின் கடைசித் திரியையும் ஊதி அணைக்கவே இவர்கள் இடைவிடாமல் முயன்று கொண்டிருப்பார்கள்.

இவர்களின் இந்த முயற்சியைத் தடுக்க யாரும் முன் வரவில்லையெனில்,

பாதாளச் சிறையில் அடைக்கப்பட வேண்டிய கொடியவர்கள் "சமுதாய விடுதலை நாயகர்களாக" வலம் வருவார்கள்.

பிறகு

கற்சுவர்கள் இல்லாத திரந்த வெளிச்சிறையாக நாடே மாறிவிடும். இதற்குத் தீர்வு இதுதான்!

தக்க சமயத்தில் தக்க இடத்தில்

தக்க விதத்தில் தீமைகளைக் கண்டித்து இணைந்து குரல் கொடுப்பதும், அவற்றைக் களைய பாடுபடுவதும் தான்.

இதனைச் செய்ய தற்பொழுது இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட, மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட வடக்கு முஸ்லிம்கள் தயாராக வேண்டும்.

ஆம்
அவர்கள் தான்
ஆக்கிரமிப்புக்குள்ளானவர்கள்!
அக்கிரமத்திற்குள்ளானவர்கள்!!
நீதிக்குள்ளானவர்கள்!!!
தற்பொழுது ஏமாற்றப்பட்டுக் கொண்டிருப்பவர்கள்.
ஆம்
வாருங்கள்
சகோதரர்களே
சமூகவிடுதலைக்காக ஐக்கியமாக நின்று
குரல் கொடுப்போம்.

## தடை பல வந்தாலும்.........!

மலையின் கரடுமுரடான பாதைகளிடையே ஒரு சின்னஞ்சிறு வித்து முளைத்து ஓர் இளங்குருத்தாகக் காட்சியளித்த போது,

அது வேர்பிடிப்பது கடினம் என்றே பாறை நினைத்தது.

ஒரேவீச்சில் அதைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டும் என்று பனித்திரள் கொண்ட காற்று எண்ணியது.

நீர் வீழ்ச்சியின் வேகத்தில் அது அடித்துச் செல்லப்பட்டுவிடும் என்று மழை மனப்பால் குடித்தது.

இந்த இளந்தளிர் தனது வெப்பத்தை எங்கே தாங்கப் போகிறது என்று கதிரவன் கருதினான்.

ஆனால்

தட்ப வெப்பத்தின் இந்தக் காலகட்டங்களை எல்லாம் கடந்து வந்த செடி, பெரும் மரமாகி வளர்ந்தோங்கி விட்டது. அதன் வேர்கள் தம்மைத் தாமே ஆழ்பதித்து உன்றிக் கொண்டன.

அது தனக்கு வேண்டிய உரத்தைத் தாமே தேடிக் கொண்டது.

பிறகு பருவ காலங்களில் கோரப்பிடியில் சிக்கிய மக்கள் அதனடியில் தஞ்சம் புகும் நேரம் வந்துவிட்டது

நினைவில் வையுங்கள்!

உயிர் துடிப்புள்ள சமுதாய அமைப்பும் இவ்வாறே இன்னல்களையும் இடையூறுகளையும் கடந்து சென்று புதுப் பொலிவும் வலுவும் பெறுகிறது.

பிறகு காலம் உள்ளளவும் தனது நிலையான பெருவாழ்வால் மனித குலத்திற்கு நன்மைகள் செய்து கொண்டே இருக்கின்றது.

## அமுக்கக் குழு ஒரு விளக்கம்

சில நோக்கங்களுக்காக ஒன்று சேர்ந்து சமூகத்தில் குறிப்பிட்ட உரிமைகளைக் கோரி அவற்றைப் பெற எத்தனிக்கும் மக்களையே 'அமுக்கக் குழு' என அழைக்கப்படுவர்.

அரசியற் கட்சிகளைப் போல் ஆட்சி அதிகாரத்தைப் பெறும் நோக்கம் 'அமுக்கக் குழு' விடம் இருப்பதில்லை.

அரசியல் அதிகாரம் பெறுவதற்கு இக்குழுவினர் முயற்சிப்பதில்லை.

ஆனால் அதிகாரத்தில் உள்ளவர்கள் மீது மக்கள் பலத்தை காண்பித்து தமது உரிமைகளை அடைய 'அமுக்க குழு' முயற்சிக்கும்.

உலகில் அரசியல் ஆரம்பித்த காலத்திலேயே 'அமுக்கக் குழு' என்ற ஒன்றும் தோன்றி விட்டன.

ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!!

படிப்பகம்

padippakam



# வடக்கு முஸ்லிம் அகதிகளுக்கான மீள்குடியேற்றம் பலவந்தமானதா?

## கருத்துப் பரிமாறல்

**ஹுசைனியாபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் ஐ.பெறோஸ்கான் NMRO தலைவர் கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் அவர்களுக்கு எழுதிய மீள் குடியேற்றம் தொடர்பான கடிதமும் அதற்கு அவர் அளித்த பதிலும் இதில் இடம் பெறுகிறது.**

தலைவர்,
வட மாகாண முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு,
ரோஹினி வீதி,
கொழும்பு.
02-10-1990

அன்புடையீர்,

### அகதிகளின் மீள் குடியேற்றம்

கொழும்பு-6, ரோஹினி வீதியிலுள்ள இஸ்லாமிய நிலையத்தில் கடந்த 96-09-30 திகதி நிகழ்ந்த நூல் வெளியீட்டு விழாவில் தாங்கள் ஆற்றிய உரையில் அகதிகளின் மீளக் குடியேற்றம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மறுநாள் தினகரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன.

வடமாகாண முஸ்லிம் அகதிகளாகிய நாம் சில விடயங்களை உங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

எதிர்வரும் 4ம், 5ம் திகதிகளில் புத்தளம் மாவட்டத்திலுள்ள ஹுஸைனியாபுரம், பாலாவி போன்ற கிராமங்களில் அகதிகளின் நலனுக்காகச் செயற்படுத் தப்பட்ட சில திட்டங்களின் அங்குரார்ப்பன நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கும் இவ்வேளையில் தங்களின் கூற்றுக்கள் எங்களுக்கு விசனம் தருகின்றன.

அகதிகளை மீளக் குடியேற்றுவது பலாத்காரமான முறையில் நடை பெற்றுவருவதாக உண்மைக்கும் சத்தியத்துக்கும் நேர்மாறான முறையில் உங்கள் கருத்து அமைந்துள்ளது. உங்கள் மனச்சாட்சிக்கும் விரோதமான இக்கூற்றை ஏன் கூறினீர்களோ தெரியாது. புரிந்து கொள்ளவும் முடியவில்லை. வடமாகாண முஸ்லிம்கள் 1990ம் ஆண்டு வெளியேற்றப்பட்ட பிறகு தென்னிலங்கையில் அகதி முகாம்களில் அவல வாழ்க்கை வாழ்ந்தமை தங்களுக்குத் தெரியாத தொன்றல்ல. நிலபுலங்கள், சொத்துக்களை இழந்து வந்த நாம் மீண்டும் எமது தாயகத்துக்குச் செல்ல வேண்டும் என்பதிலே உங்களை விட எமக்கு கொள்ளை ஆசைதான்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கெடுபிடிகள் அதற்கு சாதகமாகாது என்ற சூழ்நிலையில், இருக்கும் இடத்திலேயே சில வசதிகளைப் பெருக்கிக் கொள்ள நினைப்பதில் தவறுமல்ல.

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கப்பல்துறை, துறை முகங்கள், புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சர் அல்ஹாஜ் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்கள் மூலமாக எமக்குச் சில விமோசனங்கள் கிடைத்தன, கிடைத்தும் வருகின்றன.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மீளக்குடியேற்றம் எங்களின் சுய விருப்பத்திற் கிணங்க, பூரண விருப்பத்துடனேயே நடை பெற்று வருகின்றது. எனவே பலவந்தமாக நாங்கள் குடியேற்றப்படுவதாக நீங்கள் கூறுவது அப்பட்டமான பொய்யாகும். உங்கள் கூற்று ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் எங்களுக்கு மென் மேலும் துன்பத்தைத் தரக் கூடியது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

உண்மை தெரிந்திருந்தும், நாம் பலவந்த மாகக் குடியேற்றப்படவில்லை என்பதைப் புரிந்திருந்தும், எங்கள் சுய விருப்பத்தின் பேரிலே குடியேறுகின்றோம் என்பதை அறிந்திருந்தும், நீங்கள் இப்படி உரையாற்றுவதற்குத் தள்ளப்பட்டமை எமக்கு வேதனை தருகின்றது.

எனவே, இத்தகைய பொறுப்பற்றதும், உண்மைக்குப் புறம்பானதுமான கூற்றுக்களைக் கூறி அவல வாழ்விலிருந்து மீளத்துடிக்கும் எம்மை மீண்டும் அவதிக்குள் தள்ள வேண்டாமெனத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
(ஐ.பெறோஸ்கான்)

செயலாளர்
கி.அ.ச.

**ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!!**

padippakam



செயலாளர்
கிராம அபிவிருத்தி சங்கம் ஹுசைனியாபுரம்
புத்தளம்

அன்புள்ள ஹுசைனியாபுர (உழுக்காப் பள்ளம்) கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் நண்பர் பெரோஸ்கான் அவர்களுக்கு, அஸ்ஸலாமு அலைக்கும்.

வடக்கு முஸ்லிம்களுக்கான மீள்குடியேற்றம் என்ற பொருள்பட நீங்கள் எனக்கு எழுதிய கடிதத்திற்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். கடந்த ஆறு வருடகால அகதி வாழ்க்கையில் ஒரு முக்கியமான காலக்கட்டத்தில் வடக்கு முஸ்லிம் மக்கள் இருக்கின்றார்கள் என்பது என் கருத்து. இச்சந்தர்ப் பத்தில் அகதிகளுக்கான மீள்குடியேற்றம் என்ற அம்சம் தொடர்பாக ஒரு பரஸ்பர கலந்துரையாடலை நீங்கள் உங்கள் கடிதம் மூலம் ஆரம்பித்து வைத்தமை வரவேற் கத்தக்கது. உங்களது கடிதத்திற்கு பதிலாக மீள்குடி யேற்றம் சம்மந்தமாக எனது நிலைப்பாட்டை இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். வடக்கு முஸ்லிம்க ளின் எதிர் காலம் பற்றி ஒரு ஆரோக்கியமான கலந்துரை யாடலை இங்கு ஆரம்பித்து வைக்க விரும்பு கின்றேன்.

உங்கள் கடிதத்தில் "தற்போது நடை பெற்றுக் கொண்டிருக்கும் கெடுபிடிகள்.... (முஸ்லிம்களை வடக்கின் பாரம்பரியப் பிரதேசங்களுக்கு மீளச் செல்வதற்கு)..... சாதகமாகாது என்ற சூழ்நிலையில், இருக்கும் இடத்திலேயே வசதிகளைப் பெருக்கிக் கொள்ள நினைப்பதில் தவறில்லை." என்று குறிப்பிட்டிருப்பதில்எனக்கு எந்த விதமான முரண்பாடும் இல்லை. அந்த அடிப்படையில் நீங்களும் உங்களைச் சேர்ந்த மக்களும் எடுத்துக் கொண்ட இந்த முடிவில் நூறு வீதம் உடன்பாடுடையவனாக நான் இருக்கின்றேன். அது மட்டுமல்லாமல் உழுக்காப் பள்ளத்தில் அகதி மக்களால் தமது சொந்த முயற்சியின் மூலமாக மிகவும் கஷ்டத்தின் மத்தியில் உருவாக்கப்பட்ட சொந்தக் குடியேற்றத்திட்டம் பலவந்த குடியேற்றத் திட்டம் என்று நான் எச்சந்தர்ப்பத்திலும் குறிப்பிட வில்லை. இதுபோலவே எருக்கலம்பிட்டி குடியேற்றமும் சொந்த முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றம் என்பது எனது திடமான கருத்து.

அவ்வாறாயின் நான் அக்கூட்டத்தில் என்ன கூறினேன் என்பதை நீங்கள் சரியாக அறிந்து எனது மீள்குடியேற்றம் பற்றிய உங்கள் விமரிசனத்தை செய்யாததையிட்டு நான் மனவருத்தப்படுகின்றேன்.

96-09-30 திகதியில் நடைபெற்ற நூல் வெளியீட்டுக் கூட்டத்தில் எனது உரையில் அரசாங் கத்தின் இன்றைய மீள்குடியேற்ற கொள்கையைத்தான் நான் விமர்சித்தேன். மாறாக அகதி மக்கள் (உளுக் காப்பள்ள சொந்தக்குடியேற்ற முஸ்லிம்கள் உட்பட) முகாம் வாழ்க்கைக்கு மாற்று வாழ்க்கைத்திட்டத்தைத் தேடுவதை நான் விமர்சிக்கவில்லை. யென்பதை முதலில் தெட்டத் தெளிவாக கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில், எந்த சந்தர்ப்பத்தில் மீள்குடி யேற்றம் பற்றிய அம்சத்தை நான் குறிப்பிட்டேன் என்பதையும் அதே நேரத்தில் நடைமுறையில் உள்ள மீள்குடியேற்றம் பற்றி எனது நிலைப்பாட்டையும் நான் உங்களுக்கு விளங்கப்படுத்தியாக வேண்டும்.

"அகதிகளும் மக்களே" என்ற பொருளில் என்னால் எழுதப்பட்ட ஆங்கில நூல் ஒன்று கொழும்பில் வெளியிடப்பட்டது. இந்நூல் வடக்கு முஸ்லிம்களுக்கான மீள் குடியேற்றம் பற்றிய செயல் அமர்வை அடிப்படையாகக் கொண்டதாகும். இச்செயல் அமர்வில் வட மாகாணத் தின் வெவ்வேறு பிரதேசங்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஏறக்குறைய எழுபத்து இரண்டு பேர் பங்கு பற்றினர். இந்நூல் இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றிய வர்களின், மீள்குடியேற்றம் பற்றிய கருத்துக்களின் சாராம்சத்தினை குறிப்பிடுகின்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட வடக்கு முஸ்லிம் பிரதி நிதிகளின் மீள்குடி யேற்றம் பற்றி முன்வைத்த கருத்துக்களின் சாராம் சத்தினை சுருக்கமாகப் பின்வருமாறு கூறலாம்.

"தாம் பிறந்து வாழ்ந்த வட மாகாணமே தமது தாயகம். வட மாகாண முஸ்லிம் அகதிகளுக்கான மீள்குடியேற்றம் இம்மக்களின் சொந்த இடங்களில் தான் நடை பெற வேண்டும். அதற்காக தொடர்ந்து அகதியாக முகாம்களில் இம்மக்கள் வாழவும் முடியாது. ஆகவே அகதிகளின் வாழ்விட, அத்துடன் ஏனைய அடிப்படைப் பிரச்சினை களுக்கான பொருத்தமான மாற்றுத் திட்டத்தை அரசாங்கம் முன்வைக்க வேண்டும். அதில் அகதிகளுக்கான குடியிருப்பு, நீர், மலசலகூட, கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகளை அரசாங்கம் கூட்ட வேண்டும். ஐந்து வருடம் அகதிகள் முகாம்களில் பட்ட துன்பத்திற்கு மீட்சிதரும் முறையில் இந்த மாற்று வாழ்க்கைத் திட்டம் அமைய வேண்டும். மீள் குடியேற்றம் என்ற பெயரில் தற்போது கொடுக்கப்பட்டு வரும் பணக் கொடுப்பனவுகள், ஏனைய அடிப்படை வசதிகள் மேலும் அதிகரிக்கப்படுவதோடு அவ்வசதிகள் எல்லா அகதி மக்களுக்கும் சமமாகக் கிடைக்கக் கூடியதாக விஸ்தரிக்கப்பட வேண்டும். அவ்வாறான ஒரு மாற்று வாழ்க்கை திட்டத்தை மீள்குடியேற்றம் என்று அழைக்க கூடாது. அது "இடைக்கால வாழ்க்கைத்திட்டம்" என்று அழைக்கப்படுவதோடு, அரசாங்கத்தினால்



படிப்பகம்

கொள்கை ரீதியாக அவ்விடைக்கால மாற்றுத் திட்டம் அங்கீகரிக்கப்பட வேண்டும். அகதி மக்களுக்கான நிவாரண, அத்துடன் ஏனைய உதவிகள் அகதி நிலையிலிருந்து பொருளாதார ரீதியாக மீட்சி ஏற்படும் வரையில் தொடர்ந்தும் அளிக்கப்படும் என உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும்" என்பதாகும்.

மேற்குறித்த செயல் அமர்வின் முடிவுகள் பற்றி உங்களுக்கு கருத்து முரண்பாடு இருக்கும் என்று நான் நம்பவில்லை.

கொழும்பு நூல் வெளியீட்டில் புத்தளம் செயல் அமர்வின் சாரம்சம் எனது பேச்சின் முக்கிய அம்சமாக இருந்தது. இத்தோடு தொடர்புபட்ட அடிப்படையில் மீள்குடியேற்றம் என்ற எனது கருத்து பின்வரும் தொனியில் கூறப்பட்டது.

வடக்கு முஸ்லிம்கள் தமக்கென தலைமைத்துவம் இன்மையின் பிரதிபலிப்பு இம்மக்களின் வாழ்க்கையை இதுவரையில் கடுமையாகப் பாதித்து வந்திருக்கிறது என்ற அம்சத்தை நான் சுட்டிக் காட்டிய போது அப்பாவிகளான வடக்கு முஸ்லிம்கள் கடந்த காலங்களில் எவ்வாறு பிற சக்திகளால் பாதிக்கப்பட்டார்கள் என்பதை மூன்று கட்டங்களாக விளக்கினேன். இம்மூன்று கட்டங்களிலும் வடக்கு முஸ்லிம்கள் பிறரின் பலவந்தத்திற்கு உள்ளானார்கள் என்றும் குறிப்பிட்டேன். முதலில் வடக்கு முஸ்லிம்கள் ஆயுத முனையில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். இடையில் வடக்கு முஸ்லிம்கள் அகதி முகாம்களில் பலவந்தமாக சிறைப்படுத்தப்பட்டார்கள். இறுதியில் இன்று இம்மக்களை புத்தளத்தில் பலவந்தமாக மீள்குடியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா? என்ற வினாவை எழுப்பினேன்.

மீள்குடியேற்றம் பற்றிய இவ்வாறான ஒரு வினாவை நான் கொழும்புக் கூட்டத்தில் எழுப்புவதற்கு பல காரணங்கள் காணப்பட்டன. அவற்றை இங்கு நான் உங்களுக்குத் தெளிவுபடுத்தியாக வேண்டும்.

அகதிகளாகிய நாம் மீள்குடியேற்றம் என்ற பதத்தினை மிக சரளமாக இன்று பயன்படுத்தி வருகின்றோம். அதன் கொள்கை ரீதியான தாற்பரியத்தை தாக்கத்தை, எதிர்கால விளைவுகளை நாம் கருத்துக் கெடுப்பது இல்லை. அரசாங்கத்தின் கண்ணோட்டத்திலும், சர்வதேச ஸ்தாபனங்களின் (UNHCRபோன்ற) கண்ணோட்டத்திலும் "மீள்குடியேற்றம்" என்ற பதத்திற்கு மிகத் தெட்டத் தெளிவான வரைவிலக்கணம் ஒன்று காணப்படுகின்றது. அவ்வரை விலக்கணமானது பின்வருமாறு விளங்கப்படுத்தப்படக் கூடியது.

அதாவது இனப்பிரச்சினையால், அத்துடன் அரசியல் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதுவாழ்வு அளிக்க நிறுவன ரீதியாக உதவுவதே மீள்குடியேற்றத்திட்டமாகும். அந்த அடிப்படையில் மீள்குடியேற்றம் என்பது பாதிக்கப்பட்ட மக்களை அவர்களின் சொந்த இடத்தில் வாழ்க்கையை புனரமைக்க உதவுவதைக் குறிக்கும். இதற்காக கொடுக்கப்படும் பண ரீதியான கொடுப்பனவுகளையும், அதே போல ஏனைய அடிப்படை வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதையும் மீள்குடியேற்றம் என்ற பதம் குறிக்கின்றது. உண்மையில் இவ்வகையான ஒரு மீள்குடியேற்றத்திட்டம் மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் இழந்த மிக அடிப்படையான மனித உரிமைகள் பலவற்றை அவர்களுக்கு மீளப் பெற்றுக் கொடுப்பதைக் குறிக்கின்றது.

இந்த அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களை அவர்களின் சொந்த இடத்தில் மீள்குடியேற்றுவதென்பதில் பல ஆழமான உண்மைகள் காணப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மக்களின் சொந்த இடங்களில்தான் அம்மக்களின வாழ்விடங்கள் காணப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மக்களின் சொந்த இடங்களில்தான் அம்மக்களின் விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் ஆகிய பொருளாதார நலன்கள் காணப்படுகின்றன. அரசின் கொள்கை ரீதியான மீள் குடியேற்றத் திட்டமும், அதனோடு தொடர்புடைய கொடுப்பனவுகளும் தமது சொந்த இடத்தில் ஏற்கனவே இருக்கின்ற வீட்டைத் திருத்தவும், பொருளாதார நவடிக்கைகளை மீள ஆரம்பிக்கவும் உதவி வழங்குவதைக் குறிக்கும். அதனால்தான் மீள்குடியேற்றக் கொடுப்பனவுகள் குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்ல, பாதிக்கப்பட்ட மக்கள் சொந்த இடத்தில் மீள் குடியேற்றப்படும்போது அரசியல் உரிமை இயல்பாகவே அம்மக்களுக்குக் கிடைக்கின்றது. அது போலவே அம்மக்களின் கல்வி, வரலாற்று, கலாச்சாரங்களைப் பேணுதல் ஆகிய ஏனைய அடிப்படை மனித உரிமைகள் அவர்களின் சொந்த இடங்களில் மீள இஸ்தாபிக்கப்படுகின்றன. தேசிய சர்வதேச மட்டத்தில் உதவிகளும் உத்தர வாதங்களும் அளிக்கப்படுகின்றன.

இவ்வகையான ஆழமான அர்த்தங்களைக் கொண்ட மீள்குடியேற்றம், இந்த நாட்டின் இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பல லட்சக்கணக்கான மக்களுக்காக கடந்த காலங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அவ்வாறு செயற்படுத்தப்பட்ட இத்திட்டங்களின் செயல் முறையில் பல பிரச்சினைகள் காணப்பட்டாலும் அதன் அடிப்படைத் தத்துவம் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஓரளவு நிவாரம் வழங்குவதாகக் காணப்

ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!!

படுகின்றது. மீள்குடியேற்றம் பற்றிய இத்தத்துவத்தின் உண்மைத்தன்மை இந்த நாட்டில் மட்டுமல்ல உலகின் ஏனைய பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதையும் நான் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

வடக்கு முஸ்லிம் அகதிகளைப் பொறுத்த வரையில் ஏன் மீள் குடியேற்றம் பற்றிய இவ்வழிமுறை பின்பற்றப்படவில்லை? என்பதே எனது வினாவாகும்.

வடக்கு முஸ்லிம் அகதிகளை இப்போது எடுத்துக் கொள்வோம். இம்மக்களுக்கு தற்போது நடை பெறுவதாகக் கூறப்படுவது மீள்குடியேற்றமா? இம்மக்களுக்கு தமது வதிவிட வசதியினை ஏற்படுத்தி கொள்வதற்காகக் கொடுக்கப்பட்டு வருகின்ற கொடுப்பனவுகள் மீள்குடியேற்றக் கொடுப்பனவுகளா? இம்மக்களுக்கு அங்குமிங்கு மாக அளிக்கப்படுகின்ற சில மேலதிக வசதிகள் மீள்குடியேற்றத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதா? என்ற வினாக்கள் எழுகின்றன.

அரசாங்கத்தின் இந்த மீள்குடியேற்றத் திட்டம் மூலமாக வடக்கு முஸ்லிம்களுக்கு உறுதிப்படுத்தப்படு கின்ற அடிப்படை மனித உரிமைகள் என்ன? பாதிக்கப் பட்ட மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வாழ்விட வசதி களை ஏற்படுத்திக் கொள்வதற்காக அளிக்கப்படுகின்ற பணக் கொடுப்பனவுகள் இம்மக்களின் ஏனைய எல்லா உரிமைகளையும் பாதுகாக்கப் போதுமானதா?

வடக்கு முஸ்லிம்கள் தாம் அகதிகளாக வாழ்கின்ற பிரதேசங்களில் சொந்தக் காணிகள் வாங்கத் தூண்டப்பட்டு அதில் வாழ்விட வசதியை ஏற்ப டுத்துவதற்காக முப்பத்தொன்பதினாயிரம் (39000) ரூபா பெறுமதியான மீள்குடியேற்ற பணக் கொடுப்பனவுகளை பெறும்படி தூண்டப்பட்டால் அது ஒரு பலவந்த மீள்குடியேற்ற முயற்சி என்று நான் கருதுகின்றேன். வடக்கு முஸ்லிம் அகதிகள் தொழில் வாய்ப்புப் பின்னணி இல்லாத சூழலில் மீள்குடியேற அரசால் ஆர்வப்படுத்தப்பட்டால் அது மீள்குடியேற்றத் தத்துவத்துக்கு முரணானது என்பதனால் அதை பலவந்த மீள்குடியேற்றம் என்று கூறுவேன். இவ்வகதி மக்களின் அரசியல், கல்வி ஏனைய உரிமைகள் எங்கு, எவ்வாறு எதிர்காலத்தில் அமையப்போகின்றது என்பதில் கொள்கை ரீதியாகத் தெளிவற்ற நிலையில், ஒழுங்கற்ற முறையில் செய்யப்பட்டால் அதை பலவந்த மீள்குடியேற்றம் என்று நான் நினைக்கின்றேன்.

தவிர எதிர்காலத்தில் இனப்பிரச்சினை ஒன்று ஏற்படுவதற்கு சாத்தியக் கூறுகள் உள்ள புத்தளம் மாவட்டத்தின் உள்ளூர் மக்களினதும் இலங்கை நாட்டு மக்களினதும் அங்கீகாரம் இல்லாத முறை யில் ஏறக்குறைய ஒரு லட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட வடக்கு முஸ்லிம்களை தெற்கில் மீள்குடியேற்ற முயற்சி எடுக்கப்பட்டால் அது இம்மக்களை எதிர்காலத்தில் பல வழிகளில் பாதிக் கும் என்ற அடிப்படையில் ஒரு பலவந்த மீள் குடியேற்றத்திட்டம் என்று கூறுவேன்.

ஆனால் இதற்கு மாற்றீடாக அகதி மக்களின் அகதி அந்தஸ்த்தை பாதுகாப்பதோடு அகதியாக வாழும் கட்டத்தில் அகதிகளின் வாழ்க்கை வசதிகளை, ஏனைய உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பொருத்தமான ஒரு இடைக்கால மாற்றுத்திட்டத்தை அரசு கொள்கை ரீதியாகப் பிரகடனப்படுத்தி செயல் படுத்த முற்படுமானால் அது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு அம்சமாகும். மறு வார்த்தையில் நான் இங்கு குறிப்பிடுவது என்னவென்றால் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்ற அகதிகளுக்கு வாழ்விட வசதிகளை அதிகரிக்க எடுத்துக் கொள்ளப்படுகின்ற முயற்சி ஒரு இடைக்கால வாழ்விட வசதி ஒழுங்கு என்பதை அரசு பிரகடனப்படுத்த வேண்டும். அதே நேரத்தில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்களின் அகதி அத்துடன் அரசியல் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளும் சம்பந்தப் பட்டவர்களால் எடுக்கப்பட வேண்டும் என்பதாகும்.

அதே போல் வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட இம்மக்கள் இழந்த சமூக, பொருளா தார, கலாச்சாரச் சொத்துக்களுக்கு பொருத்தமான நஷ்டயீடும், மாற்று ஒழுங்குகளும் இல்லாத முறையில் சொந்த இடம் அல்லாத இடத்தில் இம்மக்கள் மீள்குடி யேற்றப்பட்டால் அது பலவந்த மீள்குடியேற்றம் என்பது எனது கருத்து. பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்கள் மிக விரைவில் திரும்பவும் தமது தாயகம் மீள முடியாது என்பது தேசிய சர்வதேச மட்டத்தில் நிச்சயப்படுத்தப்பட்ட அடிப்படையில் மாற்று வாழ்விட ஒழுங்குகள் செய்யப்படுவது பொருத்த மானது என்று நான் நினைப்பேன், அக்கட்டத்திலும் அவ்வாறான மாற்று வாழ்விடத்திற்கு தேவையான நிலம், வாழ்விட வசதிகள், தொழில் வாய்ப்புகள், கல்வி, ஏனைய வசதிகள் ஆகியவைகள் ஏற்படுத்தப்படாத ஓர் குடியேற்றத்திட்டம் மீள்குடியேற்றம் என்று அழைக்கப் பட்டால் அது பலவந்த மீள் குடியேற்றத் திட்டம் என்று நான் துணிந்து கூறுவேன்.

அகதி மக்களின் வாழ்விட வசதிகளை அதி கரிக்கப் போவதாகக்கூறி சில சலுகைகளைத் தந்து அகதிகளின் அடிப்படை மீள்குடியேற்ற உரிமைகளைப் பறிப்பதாக இருந்தால் அது பலவந்த மீள்குடியேற்றம்.



padippakam
படிப்பகம்

padippakam



இவ்வாறு நூறுமுறை இன்று நடைமுறையில் உள்ள மீள் குடியேற்றத்திட்டம் ஒரு பலவந்தமான மீள்குடியேற்றத் திட்டம் என்று நியாயப்படுத்த நான் தயாராக இருக்கின்றேன். இதை மறுத்து உரைப்பவர்கள் தமது விளக்கங்களை நேர்மையாகச சொல்ல முற்பட்டால் அதை செவிசாய்க்க நானும் எமது அமைப்பும் தயாராக உள்ளோம்.

நிச்சயமாக இவ்வாறான கருத்துப் பரிமாறல் அகதி முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றிய கண்ணோட்டத்தில் மேலும் தெளிவுபடுத்த உதவக் கூடியது. இந்த அடிப்படையில் எனது குடியேற்றம் பற்றிய உங்கள் விமரிசனத்தை நான் வரவேற்கின்றேன்.

அதே நேரத்தில் அகதி வாழ்க்கையில் இடைக் கால வாழ்க்கை வசதியை அதிகரிக்க விரும்புகின்ற நீங்களும், உங்கள் சமூகமும், அது போன்ற பல்லாயிரக் கணக்கான வடக்கு முஸ்லிம் அகதிகளும் மீள்குடி யேற்றத்திட்டம் என்ற அரசினதும் சர்வதேச சக்திகளி னதும் திட்டத்தினுள் உட்படுத்தப்படுவதை நானோ, நீங்களோ, வடக்கின் ஏனைய முஸ்லிம்களோ விரும்ப மாட்டோம் என்பது எனது கருத்து.

நண்பர் பெரோஸ்கான் அவர்களே! வடக்கில் முஸ்லிம்களுக்கு சொந்தமான கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்கள் கவனிப்பாரற்று அழிந்து கொண்டிருக்கின்றனவே? அது பற்றி தேசிய, சர்வதேச மட்டத்தில் எம் சார்பாகக் கதைப்பதற்கு யாரும் இல்லையே அது ஏன்? அது போல நாம் பயன் படுத்திய நூற்றுக்கும் அதிகமான பள்ளிவாயில்கள், புனித ஸ்தலங்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றதே எமது சமய உரிமையை தட்டிக் கேட்பதற்கு இந்த நாட்டில் யாரும் இல்லையா? அது போல ஐம்பதுக்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் பாடசாலைகள் (200க்கும் மேற்பட்ட பாடசாலைக் கட்டிடங்களை) நாம் இழந்திருக்கிறோமில்லையா?

இதுபோல எமது அரசியல் உரிமை, எமது பல்கலைக்கழக மாவட்டக் கோட்டா உரிமை, தொழில் வாய்ப்புப் பெறும் உரிமை போன்ற நாம் இழந்த அடிப்படை மனித உரிமைகளைப் பற்றிக் கேட்பதற்கு யாரும் இல்லையே. எங்கே எமது சமூகத் தலைவர்கள்? எங்கே எங்கள் அரசியல் தலைவர்கள்?

வடக்கிலான எமது நியாயமான உரிமைகளை எப்போது கேட்பது? இனப்பிரச்சினை முடியும் வரை இலவுகாத்த கிளிகளாக நாம் இருப்பதா? அப்போது எமது உரிமைக்குரலை நியாயப்படுத்த யார் வரப் போகின்றார்கள்? அல்லது இங்கு அகதிகளாக வாழ்விட வசதிகளைப் பெருக்க முயற்சிக்கும் அதே நேரத்தில் எமது அகதி அந்து டன் அரசியல் பிரச்சினைக்கும் நிரந்தரத் தீர்வைக் காண நாம் முயற்சிப்பதா? எது பொருத்தமானது இந்த அடிப்படையில் பலவந்த வெளியேற்றத்திற்கு உட்பட்ட வடக்கு முஸ்லிம்கள் தலைமைத்துவமற்ற அரசியல் அநாதைகள் என்பதை நீங்கள் மறுப்பீர்களா?

இலங்கையில் மீள்குடியேற்றம் செய்யப் பட்ட இடங்களில் எல்லாம் சொற்ப அவகா சத்தில் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது. அது நிறுத்தப்பட்டால் மாற்றுப் பொருளாதாரத் திட்டம் ஒன்றை ஹுசைனி யாபுர மக்களுக்கு நீங்கள் வைததுளளீர்களா? எனபதை நான் அறிய விரும்புகின்றேன். ஏனென்றால் அரசாங் கம் கொள்கை ரீதியாக தொடர்ந்தும் மீள் குடியேற்றப் பட்டவர்களுக்கு கொடுக்க முடியாது. கொடுப்பதும் இல்லை.

ஏனென்றால் என்னோடு கலந்துரையாடிய உழுக்காப்பள்ளத்தில் வாழும் வடக்கு முஸ்லிம் அகதிகள் தமது இறுதி இலட்சியம் தமது சொந்த இடங்களுக்கு மீள்குடியேறுவதுதான் என்றும் தற்போதைய முயற்சிகள் வதிவிட வசதிகளை தாங்கள் அதிகரிக்க எடுத்துக் கொள்கின்ற முயற்சியே தவிர வேறொன்றும் அல்ல என்பதை என்னிடம் குறிப்பிட்டதையும் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

உழுக்காப்பள்ளத்தில் வாழ்கின்ற வடக்கு முஸ்லிம்களின் மேற்குறித்த கருத்துடன் நூறு வீதம் உடன்பட்டவனாக இருக்கின்றேன் என்பதை தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகின்றேன். அகதி முகாம் வாழ்க்கையின் அவல நிலையில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள இம்மக்கள் நீண்ட காலம் போராடினார்கள் என்பதையும் அவர்களின் கடுமை யான உழைப்பின் ஒரு சிறு பலன்தான் உழுக்காப்பள்ள சொந்தக் குடியேற்றம் என்பதையும் நான் நன்கறிவேன்.

உழுக்காப்பள்ள மக்களின் அபிலாஷை களை தெளிவாகத் தெரிந்த நிலையில் நான் இருக்கின்றேன். உழுக்காப்பள்ளத்தில் வாழ்கின்ற வடக்கு முஸ்லிம் அகதிகள் மட்டுமல்ல பலவந்த மாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் மிகப் பெரும்பான்மையினர் இக்கருத்தைத்தான் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் நான் நன்கறிவேன். அந்த நிலைப்பாட்டில் இருந்து தான் வடக்கு முஸ்லிம்களுக்கான மீள்குடி யேற்றம் என்பதை நான் விமர்சித்தேன்.



படிப்பகம்

padippakam



> அகதி மக்கள் அரசினால் பொருத்தமான அகதிக் கொள்கை ஒன்று இதுவரை முன் வைக்காததால் தமக்கென ஒரு மாற்று வழியை ஏற்படுத்த முற்பட்டார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த வகையில் அகதிகளின் நலன்களை பாதுகாப்பது என்ற தனது கடமையில் இருந்து அரசு தவறி விட்டது.

உழுக்காப்பள்ளத்தில் வாழ்கின்ற முஸ்லிம் அகதிகள் மேற்குறித்த எனது கருத்தில் இருந்து மாறுபட்ட கருத்தினைக் கொண்டவர்களாக இருந்தால் அதனை அறிய நான் ஆவலாக இருக்கின்றேன். நீங்கள் மேற்குறித்த சங்கத்தின் காரியதரிசி என்ற வகையில் இம்மக்களின் கருத்தை இதன் மூலம் பிரதிபலிப்பதாக இருந்து இம்மக்களின் கருத்தானது உழுக்காப்பள்ளம் மீள்குடியேற்றம் என்ற தத்துவத்துக்கு உட்பட்டது தான் என்று உத்தரவாதப் படுத்துவீர்களாக இருந்தால், அதேபோல ஒக்டோபர் ஐந்தாம் திகதி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்ட உங்கள் சொந்தக் குடியேற்றம் ஹுஸைனியாபுரம் மீள்குடியேற்றக் கிராமம் என்பதை கொள்கை ரீதியாக ஏற்றுக் கொள்வதாக இருந்தால், எனது உங்கள் சொந்தக் குடியேற்றம் பற்றிய கருத்து தவறானது, பிழையானது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். தயவு செய்து இது சம்பந்தமாக செயலாளர் என்ற வகையில் உங்களது தனிப்பட்ட கருத்தை நேரடியாகவோ அல்லது பத்திரிகை மூலமாகவோ வெளியிட வேண்டும் என்று நான் உங்களை ஆர்வப்படுத்துகின்றேன்.

நீங்களும் உங்களைச் சேர்ந்தவர்களும் ஹுசைனியாபுரம் மீள்குடியேற்றக் கிராமம் என்பதை கொள்கை ரீதியாக ஏற்றுக் கொள்வதாக இருந்தால் நானும் என்னைப் போன்றவர்களும் நீங்கள் அல்லாத ஏனைய உங்களைப் போன்ற அடிப்படை வாசதி களையும் பெறாத 95 வீதமான வடக்கு முஸ்லிம்க ளுக்காக பேசத் தயாராக இருக்கின்றோம்.

எஞ்சிய 95 வீத முஸ்லிம்களும் உங்களைப் போல ஒரு இடைக்கால வாழ்க்கை வசதிக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார் கள் என்பதையும் இங்கு நான் எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்.

> துரதிஷ்ட வசமாக தலைமைத்துவமற்ற தன்மையும், வசதியற்ற தன்மையும், அரசியல் செல்வாக்கற்ற தன்மையும் இம்மக்களின் ஆர்வத்திற்கு உதவிகள் அரசு மட்டத்திலும், அரசு சார்பற்ற நிறுவனங்களின் மட்டத்திலும் கிடைக்கக்கூடியதாக இருக்கவில்லை.

புத்தளத்தில் தமது இடைக்கால வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள அரசாங்கத்தின் வாக்குறுதிகளை நம்பி சொந்தக் காணிகள் வாங்கிய பண்டாரவெளி, மணற்குளம், இலந்தைக்குளம், பூநொச்சி, சிறுக்குளம், கூளாங்குளம், புதுவெளி, கொண்டச்சி, தம்பட்டமுசலி, முசலி, அத்துடன் ஏனைய மன்னார்தீவு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி முஸ்லிம்களின் சொந்தக் காணி குடியேற்றத்திற்கு புனர்வாழ்வு அமைச்சு எப்பொழுது மீள்குடியேற்றக் கிராமங்களுக்கு அளிக்கப்பட்டதைப் போன்ற வாழ்விட, கல்வி, வீதி போன்ற அடிப்படை வாழ்க்கை வசதிகளை அளிக்கப் போகின்றது? இது சம்பந்தமாக அரசின் திட்டம் என்ன என்பதை நாங்கள் அறிய விரும்புகின்றோம்.

> இது ஒரு புறமிருக்க மறுபக்கத்தில் அன்றாட வாழ்க்கைக்குப் போராடிக்கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான அகதிகள் தமது சொந்தக் காசில் தமக்கு உரிமையற்ற பிரதேசத்தில் தமது மீள்குடி யேற்றத்தை ஏற்படுத்துவதற்கு சொந்தக் காணிகள் வாங்க அரசாங்கத்தால் ஆர்வப்படுத் தப்பட்டுள்ளார்கள். அரசாங்கத்தின் கண்ணோட் டத்தில் அகதிகள் சொந்தக் காணிகள் வாங்கித் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளக் கூடிய வளம் கொண்டவர்கள் என்று கருதப்படுகின்றது? சொந்தக் காணி வாங்கியே ஆக வேண்டும் என்ற போராட்டத்தில் நிலை குலைந்து இருக்கின்ற அகதிகளின் எண்ணிக்கையை அரசு அறியுமா?

அது போக இதுவரையில் சொந்தக் காணி கூட வாங்குவதற்கு வசதியற்ற ஏனைய பல்லா யிரக்கணக்கான அகதி முஸ்லிம்களுக்கான அரசாங் கத்தின் மாற்றுத் திட்டம் என்ன? இவ்விடயத்தில் சக அகதிகளுக்கு ஏலவே சொந்தக் குடியேற்றம் அமைக்கும் விடயத்தில் அனுபவம் ரொண்ட உங்களைப் போன்றவர்கள் வழிகாட்ட வேண்டியது அவசியமாகும்.

மறுபுறத்தில் அரசாங்கம், வடக்கு முஸ்லிம் களின் பலவந்த வெளியேற்றத்தினால் உருவாகிய அகதி அத்துடன் அரசியல் பிரச்சினையை முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் புதைக்க முயற்சிப்பதைப் போன்று மீள்குடியேற்ற மாற்றுத் திட்டத்தை முன்வைத்து முக்கியத்துவமிழக்கச் செய்ய முற்படு கின்றது. அரசு தெளிவற்ற கண்ணோட்டத்தில் இம்மீள் குடியேற்றத் திட்டத்தை முன் வைத்திருந்தால் இப்போதாவது அவசரமாக தனது இம்மீள் குடியேற்றத் திட்டத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டியது அதன் கடமையாகும். அவ்வாறு செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுவது என்னுடையதும், உங்களுடை யதும் அதுபோல இதில் அக்கறை கொண்ட ஏனையவர்களுடையதும் கடமையாகும்.



படிப்பகம்

padippakam



அரசாங்கம் பொறுப்பற்ற முறையில் மீள்குடியேற்றத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முற்பட்டால் அதனைத் தட்டிக் கேட்பதற்கு பலர் இருக்கின்றார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஏனென்றால் இம்மீள் குடியேற்றம் சம்பந்தமாக வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு எடுத்த சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசும், அமைச்சும் எவ்வாறு நோக்கியது என்பதை நான் இங்கு குறிப்பிட வேண்டும்.

அரசின் வடக்கு முஸ்லிம் அகதிகளுக்கான மீள்குடியேற்றத் திட்டம் பற்றிய அகதி முஸ்லிம்களின் கண்ணோட்டத்தையும் ஆலோசனைகளையும் பெறுவதற்காக புத்தளம் நகரில் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட செயல் அமர்வில் கலந்து கொள்ள விருப்பம் இல்லை என்பதை அமைச்சின் அதிகாரிகள் அப்போது எமக்கு அறிவித்தார்கள். அதே நேரத்தில் அகதி முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை எமக்கு சுட்டிக் காட்டி இருந்தார்கள். அரச அதிகாரிகளின் அவ்வேண்டுகோளின் அடிப்படையில் எட்டு மாதங்களுக்கு முன்னர் நாம் அனுப்பிய அறுபது பக்கங்களைக் கொண்ட ஆலோசனைகளை முற்றாகப் புறக்கணித்த நிலையில் அரசு தனது தெளிவற்ற மீள்குடியேற்றத் திட்டத்தை அரை குறையாக நடைமுறைப்படுத்துவதில் மிகவும் ஆர்வப்பட்டு வருகின்றது. அது ஏன்?

மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய வட மாகாண முஸ்லிம் மக்களின் கண்ணோக்குப் பற்றி நாங்கள் சமர்ப்பித்த மிக நியாயமான ஆலோசனைகள் அரசால் பரிசீலனைக்கு எடுத்து ஆவணைகள் செய்யப் படவில்லை. அரசின் இப்புறக்கணிப்பு நீடிக்குமானால் தற்போது நடைமுறையில் இருக்கும் மீள்குடியேற்றம் பற்றிய உண்மைகளை அகதி மக்களுக்கு நாங்கள் விளங்கப்படுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். தேசிய, சர்வதேச மக்களிடம் இவ்விடயம் எடுத்துச் செல்லப்பட வேண்டிய சூழ்நிலைக்கு நாங்கள் தள்ளப்படுவோம். என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

மேலதிக குறுங்கால நன்மைகளில் அக்கறை கொண்டு அகதி மக்கள் தமது அடிப்படை உரிமைக்கு முரணாக நடக்க முற்பட்டால் அதனைச் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு அம்மக்களின் உரிமைக்காகப் போராடும் எமக்கு உண்டு. அகதி மக்களின் தேர்தல் கால வாக்கில் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு நம்பிக்கை வைத்திருக்கவில்லை என்பதை தெட்டத் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

அதே போல சுயநலம் கொண்ட குறுங்கால நன்மைகளில் ஆர்வம் கொண்ட அரசியல்வாதிகள் அகதிகளைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்துவதைப் பார்த்துக் கொண்டும் இருக்க மாட்டோம். இக்கட்டத்தில் நான் ஒன்றை உங்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அதாவது அரசிடமிருந்து மீள்குடி யேற்றத் திட்டத்தின் கீழ் மேலதிக உதவியினைப் பெறுபவர்கள் அரசின் உள் நோக்கத்தை சரியாக அறிந்து கொள்ள வேண்டும். மேலதிக உதவிகளின் பின்விளைவுகளை சரியாகத் தெரிந்து பெற்றுக் கொள்ள வேண்டும். தருவதையெல்லாம் பெற்றுக் கொள்வோம் என்ற மனோபாவத்தில் இருப்பது நியாயம் இல்லை. எமது உரிமைக்கு முரணான சலுகைகளை மறுக்கும் தைரியம் இருக்க வேண்டும்.

நாம் எதிர்பார்க்க வேண்டியது சலுகைகளை யல்ல. உரிமைகளை அரச அதிகாரிகள் எமது உரிமைகளை சலுகை உருவில் தர முற்பட்டால் அதனை நாம் கண்டித்ததாக வேண்டும்.

நண்பர் பெரோஸ்கான் அவர்களே! வடக்கு முஸ்லிம்களுக்கான மீள்குடியேற்றம் பற்றி நீங்கள் ஆரம்பித்து வைத்த இந்தக் கருத்து பரிமாறலுக்கு நான் மீண்டும் ஒரு முறை நன்றி கூற விரும்புகின்றேன். மீள்குடியேற்றம் பற்றி இன்னும் நிறைய அம்சங்களை மிகக் கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கின்றோம். இது போன்ற கலந்துரையாடலை நீங்கள் தொடர்வீர்கள் என்று நம்புகின்றேன்.

உங்களுக்கு விடும் இதே கோரிக்கையை இலங்கை அரசுக்கும் மீள்குடியேற்றத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் விட விரும்புகின்றேன். மீள்குடியேற்றம் பற்றிய அவ்வாறான கருத்துப் பரிமாறல்கள் தனிப்பட்ட முறையிலோ பொது மேடைகளிலோ, பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மூலமாகவோ செய்வதற்கு நானும் எங்கள் அமைப்பும் தயாராக இருக்கின்றோம் என்பதை உங்களுக்கு எழுதும் கடிதத்தின் மூலமாக அறிவிக்க விரும்புகின்றேன்.

இவ்வண்ணம்
எஸ். எச்.ஹஸ்புல்லாஹ்
தலைவர் – NMRO

**வஸ்ஸலாம்.**



படிப்பகம்

padippakam



# செய்திச் சிதறல்கள்

## "வடக்கு முஸ்லிம்களதும் தாயகம்!"

### பேராசிரியர் கா.சிவத்தம்பி

வடக்கு முஸ்லிம்களினதும் தாயகம். அங்கு வாழ்வதற்கு முஸ்லிம்கள் உரித்துடையவர்கள் உண்மையில் அவர்கள் வெளியேற்றப்பட்டது ஒரு துரதிஷ்டமான செயலே' என்று பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான (NMRO) அமைப்பு ஒழுங்கமைத்த தமிழ் – முஸ்லிம் மக்களுக்கான ஒன்று கூடலில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் தலைவர் கலாநிதி, எஸ்.எச் ஹஸ்புல்லா தலைமையில் 1996 ஜுலை 13 சனியன்று அமைப்பின் தலைமையகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் மேலும் பேசுகையில் '400 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே யாழ் முஸ்லிம்களுக்கும் தமிழர் களுக்கும் இடையே நல்லுறவு இருந்து வந்திருக் கின்றது. அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. எனினும், துரதிர்ஷ்ட வசமாக விடுபட்டுபோன இவ்வுறவை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கை களை நாம் இப்போது முன்னெடுத்தல் வேண்டும். அதற்காக எம்மால் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் எவையோ அவற்றையெல்லாம் நாம் முன்னெடுக்க வேண்டும்' என்றார்.

இக்கூட்டத்துக்கு தலைமை வகித்த கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லா அவர்கள் தமதுரையில் 'தமிழ் – முஸ்லிம் ஒற்றுமை வலுப்பட வேண்டும். 90 இல் ஏற்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட இடைவெளியை நீக்குவதற்காக என்ன என்ன நடவடிக்கைகளை இக்காலகட்டத்தில் மேற்கொள்ளலாமோ அவை பற்றிச் சிந்திக்க வேண்டும்" என்றார்.

அடுத்து பேசிய வ.ஐ.ச ஜெயபாலன் தமதுரையில் 'இலங்கை அந்நிய ஆட்சிக்கு முற்பட்ட காலப்பகுதியில் நேரடியான ஆட்சி முறைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. இனரீதியான அல்லது சமூக பிரதேச ரீதியான அதிகாரப் பரவலாக்கல் அடிப்படையிலேயே ஆட்சி செலுத் தப்பட்டு வந்தது. வட – கிழக்கில் தமிழ் – முஸ்லிம்கள் இன அடிப்படையிலான வன்னிமை என்ற தனி ஆட்சி அலகுகளுக்குள்ளேயே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். எனவே முஸ்லிம்களுக்கான தனி ஆட்சி அலகு என்பது புதிய விடயமல்ல. இதே போல் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் தமது தனித்த ஆட்சி அலகின் கீழேயே வாழ்ந்து வந்தார்கள் என்பதையும் முஸ்லிம்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

யாழ் மாநகரசபை முன்னாள் உறுப்பினர் எம்.சாஹுல் ஹமீட் அவர்கள் பேசுகையில் தமிழ் தலைவர்களான ஜி.ஜி. பொன்னம்பலம் அ. அமிர்தலிங்கம் போன்றோர் முஸ்லிம்களுக்காக எப்போதும் குரல் கொடுத்து வந்தனர். ஜி.ஜி.பொன்னம்பலத்தாலேயே நாச்சிக்குடா குடியேற்றம் உருவாக்கித் தரப்பட்டது. யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் முஸ்லிம்கள் தொடர்பாக எவ்வித குறையையும் விடவில்லை' என்றார்.

முன்னாள் யாழ் உதவி மேயர் எம்.எம்.ஸி.பஷீர் அவர்கள் தமதுரையில், '61 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சத்தியாக்கிர கத்தில் நோன்புகாலமாக இருந்தும் முஸ்லிம்கள் பேரார்வத்துடன் கலந்து கொண்டனர். இது செல்வநாயகம் போன்ற தலைவர்களால் கௌரவிக் கப்பட்டது. இவ்வாறான சம்பவங்கள் மறக்கப் பட்டுவிட்டது கவலைக்குரியது தான்' என்றார்.

பேராசிரியர் சி.சிவசேகரம் அவர்கள் தமதுரையில் "வெளிநாடுகளில் வாழும் தமிழர் மத்தியில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது தொடர்பான வெட்கவுணர்வு மேலோங்கி இருக்கிறது. இது தொடர்பாக சிறு சஞ்சிகைகள் எழுதிவந்தன. இது தவிர யாழ் முஸ்லிம்கள் விரும்பிய நேரத்தில் தத்தமது பிரதேசங்களுக்குச் சென்று திரும்பக்கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களுக்கெதிரான நடைமுறைகள் தமிழர் அரசியலினூடே வளர்ந்து வந்திருக்கிறது. இது குறித்து மீள்பார்வையும் அவசியம் என்றார்.



படிப்பகம்

padippakam



வடக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பின் சார்பில் நன்றியுரையாற்றிய மௌலவி பி.ஏ.எஸ் சுப்யான் அவர்கள் இன்று தமிழ், முஸ்லிம் மக்கள் இழந்திருக்கக்கூடிய உரிமைகளை தமிழ் முஸ்லிம் மக்களது ஐக்கியத்தின் மூலமே மீளப்பெற முடியும். அதற்கான ஆரம்ப முயற்சியே இது' என்றார். கூட்ட முடிவில் தமிழ் - முஸ்லிம் ஐக்கியத்திற்கான முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல பேராசிரியர் கா.சிவத்தம்பி, கவிஞர்.வ.ஐ.ச.ஜெயபாலன், விரிவுரையாளர் க.சிதம்பரநாதன், வர்த்தக பிரமுகர் எஸ். தியாகராசா, கலாநிதி. எஸ்.எச்.ஹஸ்புல்லா, பேராசிரியர் சி.சிவசேகரம், மௌலவி, பி.ஏ.எஸ் சுப்யான், எம்.எம்.சி. பஷீர், கே.எம்.எஸ்.ஹமீட், ஆகியோரைக் கொண்ட ஏற்பாட்டுக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

வடக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பு ஒழுங்கமைத்த யாழ் தமிழ் - முஸ்லிம் மக்களின் ஐக்கியத்தை வலுப்படுத்துவதற்கான ஒன்று கூடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்.

1. வடக்கு முஸ்லிம்களினதும் தாயகம் என்பதை இவ் ஒன்று கூடல் உறுதிப்படுத்துகிறது.
2. தமிழ் - முஸ்லிம் உறவு வலுப்பட எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.
3. வடக்கிற்கு முஸ்லிம்கள் மீளச் செல்வதற்கு எல்லா நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்கொள்ள வேண்டிய அதே வேளை முஸ்லிம்கள் விரைவில் மீளச் செல்வதற்கான நம்பிக்கை வலுப்படுத்தப்படல் வேண்டும்.
4. முஸ்லிம்கள் மீளச் செல்லும் பிரதேசங்கள் உரிய இழப்பீட்டோடு, அவர்களது சமூக, பொருளாதார, அரசியல் முயற்சிகளை முன்னெடுக்கக் கூடிய வகையில் புனரமைக்கப்பட வேண்டும்.
5. இப்பொழுது வெளித்தெரியவருகிற நல்லெண்ணத்தை உறுதிப்படுத்தும் வகையில் வடக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முஸ்லிம்கள் விடுதலை செய்யப்படல் வேண்டும்.
6. தேசிய இனப்பிரச்சினைக்கு தமிழ் பேசும் மக்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நிலையான சமாதானத் தீர்வை அரசு ஏற்படுத்த வேண்டும்.
7. மேற்கூறிய தீர்மானங்களை தமிழ், முஸ்லிம் மக்கள் சம்பந்தப்பட்ட சகல, அரசியல் சமூக, பொருளாதார அமைப்புகளும் ஆதரித்து நடவடிக்கைகளில் ஈடுபடல் வேண்டும்.

# சிறுபான்மை இனங்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## மௌலவி பி.ஏ.எஸ்.சுப்யான்

வடமாகாணத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த முஸ்லிம்களை புலிகள் வெளியேற்றிய போது, தமிழ்க் கட்சிகள் உரிய நேரத்தில் குரல் கொடுக்கத் தவறிவிட்டன. இது வேதனையானதே.. புலிகள் கோருகின்ற தமிழீழம் தாம் வடபுலத்து முஸ்லிம்களினதும் தாயக பூமியாகும்.

எல்லா இயக்கங்களும் போட்ட தாளங்களுக்கேற்றவாறு நாமும் ஆடினோம். தமிழர்களின் நியாயமான போராட்டங்களுக்கு எமது பங்களிப்பையும் நல்கி வந்தோம். தமிழர்களுடன் சேர்ந்து வாழ விரும்பினோம். இப்போது கூட விரும்புகின்றோம். இனப் பிரச்சினை தமிழர்களை மட்டும் வாட்டவில்லை. எமக்கும் பல பிரச்சினைகள் உண்டு. பேரினவாதம் எம்மையும் நசுக்குகின்றது.

தற்போது தலைவிரித்தாடும் பிரச்சினை சுமுகமான முறையில் தீர்க்கப்பட வேண்டும். சிறுபான்மை இனங்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இந்நாட்டு மக்கள் ஐக்கியமாக வாழும் சூழ்நிலை ஏற்பட வேண்டும். என்பதே முஸ்லிம்களின் வேட்கையாகும்.

புலிகள் தாங்கள் முதலில் எதை எதிர்பார்க்கின்றனர் என்பதை தெளிவுபடுத்த வேண்டும். அரசாங்கம் தாம் தரப்போவதையும் கூற வேண்டும். தமிழீழம் தான் புலிகளின் நிலைப்பாடா? அல்லது அதற்குச் சமமான ஏதாவது ஒன்றை முன்வைக்க எத்தனிக்கின்றனரா? புலிகள் நியாயமான கோரிக்கையொன்றை முன்வைக்கும் பட்சத்தில் அதனை அரசாங்கம் சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்தி இனப் பிரச்சினைக்கு முடிவுகட்ட வேண்டும்.

பேச்சு வார்த்தை என்று வரும்போது தமிழ்க் கட்சிகளும், புலிகளும் முஸ்லிம்களுக்கு எதை வளங்கப் போகின்றோம் என்று பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்விலே முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்கின்ற முஸ்லிம் அலகுக்குள் வடக்கு முஸ்லிம்களை இழுத்துச் செல்வதனை வடக்கு முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

வடக்கேயிருக்கும் கல்விமான்கள், புத்திஜீவிகள் ஒன்று கூடி எடுத்த முடிவே இது. இந்த நிலைப்பாட்டுக்கு வடமாகாண முஸ்லிம்கள் பூரண ஆதரவு தெரிவித்துள்ளனர். எமது மாற்று ஆலோசனையை எல்லாக் கட்சிகளுக்கும் அனுப்பி வைத்திருக்கின்றோம். தெரிவுக் குழுவிற்கும் சமர்ப்பித்துள்ளோம். என்று 10.8.96 C.R.C மண்டபத்தில் இடம் பெற்ற இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகள் தொடர்பான புத்திஜீவிகளின் கருத்தரங்கில் NMRO உப தலைவர் மௌலவி பி.ஏ.எஸ் சுப்யான் தனது கருத்துரையில் குறிப்பிட்டார்.

இக் கூட்டம் 'மோர்ச்' நிறுவனச் செயலாளர் பாலக்கிருஷ்ணன் தலைமையில் இடம் பெற்றது.

ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!!

padippakam



## சொந்த இடம் திரும்புவதே வடக்கு முஸ்லிம்களின் விருப்பம்

### கலாநிதி எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ்

வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் அகதிகள் விடுதலைப் புலிகளின் அங்கீகாரத்துடன் மீண்டும் தமது சொந்த இருப்பிடங்களுக்கு சென்று தமிழ் மக்களுடன் இணைந்து வாழவே விரும்புகின்றனர். அதை விடுத்து, அவர்களை தற்பொழுது தங்கியிருக்கும் இடங்களில் நிரந்தரமாக குடியமர்த்தும் நடவடிக்கைகளில் அரசாங்கமோ புணர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சோ ஈடுபடக்கூடாது என்று NMRO வின் தலைவர் கலாநிதி எஸ்.எச்.ஹஸ்புல்லா தெரிவித்தார்.

'REFUGEES ARE PEOPLE' (அகதிகளும் மக்களே) என்ற தலைப்பில் கலாநிதி எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் தொகுத்த ஆங்கில நூலின் வெளியீட்டு வைபவம் 30.9.96 வெள்ளவத்தை இஸ்லாமிய கல்விநிலையத்தில் (C.I.S) முன்னாள் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.என். ஐயுப் தலைமையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய கலாநிதி எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் மேலும் தெரிவிக்கையில், இந் நூலானது 1996 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் இடம் பெற்ற ஒரு செயலமர்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

வடபகுதியிலிருந்து இடம் பெயர்ந்த அனைத்துத் தரப்பு முஸ்லிம்களினதும் பிரதிநிதிகள் சுமார் 75 பேர் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

வடக்கில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டது மட்டுமன்றி, கடந்த 6 வருடங்களாக இந்த நாட்டு அரசாங்கங்களின் தெளிவற்ற அகதிக் கொள்கை காரணமாக அகதி முகாம்களில் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். அது மட்டுமன்றி தாம் வெளியேற்றப்பட்டு தற்பொழுது தங்கியுள்ள இடங்களில் அவர்கள் நிரந்தரமாக குடியேறவும் வற்புறுத்தப்படுகின்றனர்.

ஆனால் மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்ட அகதிகள் பிரதிநிதிகளின் கருத்துப்படி வடபகுதி முஸ்லிம் அகதிகள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக் குடியமரவே விரும்புகின்றனர், என்று தெரியவருகின்றது.

சுமூகமான பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் நாட்டின் தற்போதைய இனப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணப்பட்டு எல்.ரி.ரி.ஈ யினரின் அங்கீகாரத்துடன் வடபகுதிக்கு மீண்டும் சென்று தமது சொந்த மண்ணில் தமிழ் மக்களுடன் இணைந்து வாழ்வதே அவர்களது நோக்கம்.

அதுவரையிலான காலப்பகுதிக்கான ஒரு இடைக் கால ஏற்பாடாக தற்போது தங்கியிருக்கும் பகுதிகளிலான குடியமர்வுகள் மேற்கொள்ளப் படலாமேயன்றி வடபகுதி முஸ்லிம் அகதிகள் தாம் இடம் பெயர்ந்து தங்கியுள்ள பகுதிகளில் நிரந்தரமாக தங்க வற்புறுத்தப்படக் கூடாது என்று கூறினார்.

ஈ.பீ.ஆர்.எல்.எப் அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் இங்கு உரையாற்றுகையில்

அகதிகள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று குடியமர்வதே மீளக்குடியேற்றமாக அமையும். அகதி முகாம் வாழ்க்கையானது மனித நாகரிகத்ததை குழிதோண்டி புதைக்கும் ஒரு வாழ்க்கையாகும். இது அனைத்து அகதிகளுக்கும் பொருந்தும். அப்படியான அகதி முகாம் வாழ்க்கைக்கு மாற்றமாக ஒரு இடைக்கால நடவடிக்கையாக மாத்திரமே வடபகுதி முஸ்லிம் அகதிகள் தாம் தற்போது தங்கியுள்ள பகுதிகளில் குடியமர்த்தப்பட வேண்டும். அதைவிடுத்து அரசியல் காரணங்களுக்காக அங்கு நிரந்தரமாக குடியமர்த்தும் முயற்சிகளில் அரசாங்கமோ, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சோ முயற்சிக்குமாயின் அனைத்து ஜனநாயக அமைப்புக்களும் அதனை எதிர்க்கும் என்றார்.

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதியாசிரியர் ஏ.எம். மாக்கான் மாரைக்கார் இந் நூலுக்குரிய மதிப்புரையை வழங்கினார்

## வடக்கு முஸ்லிம்கள் ஒற்றுமையின் மூலம் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும்

கடந்த 26.09.96 வியாழன் காலை நுரைச் சோலையில் இடம் பெற்ற NMRO வின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடலில் 'எதிர்கால வேலைத்திட்டங்கள்' என்ற மகுடத்தில் கருத்துக்கள் கூறும் பொழுது மேற் கண்டவாறு தலைவர். கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் கூறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலில் NMRO வை மக்கள் சக்தியாக்குவதற்குள்ள நடவடிக்கையாக பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

புத்தளம் மாவட்டத்தில் பிரதேச ரீதியாக வேலைத்திட்டங்களை முன்னெடுத் துச் செல்வதற்கு செயற் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இக் கலந்துரையாடலில், கலந்து கொண்ட NMRO வின் பெண்கள் உறுப்பினர் தங்களுக்கென்று தனியான ஓர் பிரிவு NMRO வினுள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது இங்கு குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

padippakam



## ஒரு புறம் ஆயுத உற்பத்தி மறு புறம் அமைதி மாநாடுகள்

இன்றைய உலகில் எங்கு நோக்கினும் கலவரங்கள்! கொலைகள்! அவற்றைக் கண்டு மனித இனம் வெறுத்துப் போய் இருக்கிறது. போர், கலவரம் என்றாலே உலகம் நடுங்குகிறது. அதிலிருந்து தப்பிக்க வழி தேடுகிறது. இந்த முயற்சியில் அது வெற்றி பெறுமா?

சமுதாயங்கள் கல்நெஞ்சம் கொண்டு நாள்தோறும் ஆயுத உற்பத்தியில் தீவிரமாய் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அமைதியான உலகம் எவ்வாறு தோன்றும்?

உண்மையில் இது தனிப்பட்ட ஒரு மனிதனின், சமுதாயத்தின், தேசத்தின் குறை அல்ல. மாறாக, இன்றைய உலகம் மனமார ஏற்றுக் கொண்டிருக்கும் கலாச்சார அமைப்பின் தவிர்க்க முடியாத விளைவாகும்.

இன்றைய இந்த அமைப்புக்கு அமெரிக்காவும், ஐரோப்பாவும்தான் தலைமை தாங்குகின்றன. அவைதாம் இன்றைய உலகை ஆட்டிப்படைக்கின்றன.

அவர்களுடைய ஒழுக்கப் பண்பாட்டில் பொதுநல மனப்பான்மைக்கு இடமில்லை. அவர்கள் உருவாக்கியுள்ள சமுதாயத்தில் உன்னத இலக்கிற்கோ பரந்த கண்ணோட்டத்திற்கோ வழியில்லை.

அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் அரசியல் தத்துவத்தில் சுரண்டலுக்கே சாதனைப்பட்டம் வழங்கப்படுகிறது. 'வலிமையுள்ளது தங்கும்" என்ற கோட்பாட்டிற்கு ஏற்ப அவர்கள் சுய நலத்தின் அடிப்படையில் அடுத்தவர்களை நசுக்கி தாம் முன்னேற முயல்கிறார்கள்.

உண்மையாதெனில் உலகில் லோகாயத கலாச்சாரத்தின் இச்சைகளுக்கு அடிபணியும் பண்பு மேலோங்கி உள்ளது. இப்படிப்பட்ட பின்னணியில் அமைதி மாநாடுகள் நடத்துவது, அமைதிக்காக நோபல்பரிசு அளிப்பது போன்ற வற்றால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

மௌலானா சுலைமான் நத்வி

### அன்பான 'அகதி' வாசகர்களுக்கு

'அகதி 10' லிருந்து ஆங்கிலத்துக்கும் சில பக்கங்களை ஒதுக்கியுள்ளோம். NMRO வின் தீர்மானத்தின்படி ஆறு மாதத்திற்கு ஒரு தடவை ஆங்கிலத்தில் NEWS BULLEDIN ஒன்றை வெளியிடு வதாகவே இருந்தது. இவ்வாறான ஒரு வெளியீட்டுக்கு அதிகமான 'நிதி' தேவை யாக உள்ளது. அதற்கான நிதி எம்மிடமில்லாததால் 'அகதி' இதழுடனேயே தற்பொழுது ஆங்கிலத் தையும் இணைத்துக் கொண்டுவருவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தேசிய சர்வதேச மட்டத்தில் தமிழ் தெரியாதவர்களுக்கு எமது பிரச்சினை பற்றிய தெளிவை ஏற்படுத்த உதவும் என்பதே எமது அபிப்பிராயமாகும். இதனை வாசகர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதே எமது நம்பிக்கை

மேலும் வ.ஐ.ஜெயபாலனின் சென்ற இதழில் இடம் பெற்ற பேட்டியின் தொடர்ச்சி இடமின்மையால் இவ் இதழில் இடம்பெறவில்லை.

அகதி இதழில் இடம் பெறுவதற்காக கட்டுரை, வரலாறு, கதை, கவிதை, 'அகதிமுகாம்' செய்திகள் பலதுறை ஆக்கங்களை வாசகர்களிட மிருந்து எதிர்பார்க்கிறோம். ஆக்கங்களை அனுப்பு வோர், 'அகதி'களாயின் தங்களுடைய பாரம்பரிய முகவரியையும் தற்போதைய முகவரியையும் குறிப்பிட வேண்டும்.

'அகதி' இதழ் தங்களுக்கு கிடைப்ப தில்லை எனப் பலரும் கவலை தெரிவித் துள்ளனர். உண்மையில் நாட்டின் பல பகுதி களுக்கு இன்னும் 'அகதி' இதழ் சென்றடைய வில்லை. அங்கு எமக்கு முகவர்கள் இல்லாததே காரணமாகும். முகவராக இருந்து எமது உரிமைப் போராட்டத்தில் பங்காளியாக செயல்பட விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**சந்தா விபரம்**
**தனிப்பிரதி ரூபா 10.00**
**அறு இதழ்களுக்கான சந்தா ரூபா 72.00**
**வெளிநாடு ரூபா 200 00**
மணியோடர் அனுப்பும் பொழுது

'AHATHI' NORTHERN MUSLIM'S RIGHTS ORGANI-ZATION

என்ற பெயருக்கு Sub post office Horetuduwa Moratuwa என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.



படிப்பகம்

padippakam



# AN ALTERNATIVE PROPOSAL TO SAFEGUARD THE INTERESTS OF THE MUSLIM MINORITY OF THE NORTHERN PROVINCE

**Submitted to The Parliamentary Select Committee on Constitutional Reforms on 25 May 1995**

## AN ALTERNATIVE PROPOSAL TO SAFEGUARD THE INTERESTS OF THE MUSLIM MINORITY OF THE NORTHERN PROVINCE

***Northern Muslims' Rights Organization***

## INTRODUCTION

Muslims were a minority group in the Northern Province. They were forcibly expelled from the north by the LTTE in 1990. During the last four and a half years, (Now 6 years) they have been living in the welfare centers (refugee camps) in the South. Taking into consideration the fact that the problem of the Muslim minority is unique, the following important matters have to be taken up in any peace negotiations:

1. The Northern Muslims' right to live in the north and
2. Suitabe safeguards for the security of this minority group to be included in the new constitution that is being formulated.

An alternative proposal to safeguard the interests of the Muslim minority of the north is described in the following section. The rationale for these safeguards is given in a background report on "the plight of the Muslim minority of the Northern Province" separately (see annexed document.)

### THE RIGHT TO LIVE IN THE NORTH

The Muslims of the north were denied their right to live in the north and were expelled. The problems created by the forced expulsion have to be rectified. Therefore, the following aspects must be taken up in the peace discussions.

1. The Right to Live: The right to live with dignity and self respect in their traditional villages in the Northern Province must be recognized.
2. Re-settlement: Speedy and appropriate re-settlement of the Muslim refugees must be arranged for.
3. Refugee Status: Until the re-settlement of the refugees is commenced in the north, the present status of this refugee population must be re-defined giving proper recognition to their problem and proper relief and rehabilitation programmes must be implemented to improve the living conditions of these people.

### SUITABLE MINORITY SAFEGUARDS IN THE CONSTITUTION

Given numerical, distributional, ethnic distinctness and harmonious inter ethnic relations of the Muslim minority of the north, the following constituional arrangements will safeguard their minority interests in the north:

1. ***Fundamental Rights:*** In addition to the fundamental rights guaranteed for individuals in the constitution, minority rights such as the freedom to participate in the religious and cultural activities and to develop their ethno-cultural identity as a group also must be guaranteed.
2. ***Protection for Minorities:*** In addition of other forms of minority protection given in the constituiton, specific protection must be provided as follows:

(a) No legislation against the interests of a minority group must be passed.

(b) The right to challenge any discriminatory action against a minority group in a court of law must be provided for.

(c) Constituional protection must be given for free social and economic activities of minority groups.

3. ***Political Representation:*** Muslims are the principal minority group in the north. But they consist only of five per cent of the total population in the region. At the same time, their geographical distribution has very distinct features (concentrated in some areas and scattered in others areas of the region-see diagram 1) as well. In considering these facts, the political interest of this group can be best served in the following manner.



படிப்பகம்

padippakam



(a) At the national level, the Mannar electorate where Muslims consist of about 30 per cent of the total electorate population must be made a multi-member constituency which will enable the Muslim minority in the north to elect one member to the national Parliament.

(b) At the regional level, all minority groups in the north should be guaranteed at least one-fifth of the total number of members in the regional legislature. For this purpose, the nomination principle can be used

(c) Muslim concentrations are found in some areas in the north. (e.g., Musali, Erukkalampiddy, Vidataltivu Periyamadu in the Mannar district, Hijrapuram Thanniyutu-Neeravipity in the Mullaitivu district and Moor street in Jaffna Town-See Diagram 4). These concentrations can be formed as local government administrative units to enable the Muslim community in these areas to exercise limited autonomy.

4. ***Special Measures for community Development:*** As a backward community in the north (e.g., in education), the Muslims must be given special opportunities such as a quota for university admission, land allocation, etc. to enable them to become real partners in the development process.

5. ***The Cultural Council:*** The socio- cultural interests of the Muslim minority who have been scattered in the North can be best served through a 'cultural council' for that community. This council will not have legislative powers but will be a forum for a minority community to give expression to its interests. At the same time, this council may also help the socio-cultural development of this community in the region. Even and isolated Muslim settlement may have an opportunity to elect its member to this council. Democratic traditions could best be preserved by creating this cultural council in a multi-religious society.

6. ***Inter - ethnic Relation:*** The constitution must provide for the promotion of better understanding between different ethnic groups in the region and must promote ethnic integration through mutual respect and understanding.

## CONCLUSION

This alternative proposal to safeguard the interests of the Muslim minority of the north is different from the 'Muslim Provincial Council' proposed by the Sri Lanka Muslim Congress Party for the Northern and the Eastern Provinces. Our alternative proposal; is more realistic and appropriate for minority such as the Muslims of the north.

## THE PLIGHT OF THE MUSLIM MINORITY OF THE NORTHERN PROVINCE

***Northern Muslims' Rights Organization***

The Muslim minority of the north has also been affected in the ethnic conflict. But their grievances are different from those of others. This report identifies their grievances and explains the basis for the fulfillment of the aspiration of this community in the peace negotiations.

## THE BACKGROUND TO THE PROBLEM

The entire Muslim Population of the Northern Province (estimated at 75.000 persons in 1990) of Sri Lanka was forcibly chased away at gunpoint from their traditional villages and towns during the latter part of October 1990. The LTTE, a Tamil militant group, was responsible for this act of violence against the Muslims.

The mass expulsion of Muslims from the north was carried out in the following manner. On 22nd October, 1990, quite unexpectedly, the LTTE announced over loudspeakers in the streets of the Muslim settlements in the Northern Province that the Muslims must leave their homes, villages and towns. Leaving all their belongs behind or face death. The ultimate was that the Muslims should leave this region within 48 hours from the 22nd of October, 1990. In Jaffna town, the time given was only two hours.

This quite unexpected order was a shock to all the Muslims who had always maintained excellent relationships with the Tamil population in the north. The Muslims pleaded with the LTTE to reconsider their decision, but this was refused by the LTTE. Muslim houses were looted and cash, Jewellery and other valuables were taken forcibly at gun point by the LTTE cadres. The same thing happened to the commercial and industrial establishments owned by Muslims.

The Muslims lost all hope of preventing their forcible displacement. The LTTE cadres, in large numbers, increased their pressure on the Muslims. Therefore, in order to save their lives, the Muslims fled from their homes in large numbers. Diagram 3 shows the movement of refugees from the Northern Province.

The displaced Muslims took refuge in Muslim settlements in the adjoining districts of the Northern Province- Puttalam, Anuradhapura and Kurunegala. One hundred and twenty three refugee camps in the above three districts accommodated nearly 60,000 refugees (Diagram 4 shows the distribution of refugee camps in Puttalam district).

More than four and half years have passed since the forcible expulsion of the Muslims from their



படிப்பகம்

padippakam



original places. The refugees undergo immense hardships in the camps. This refugee problem has been ignored so far. The problem of the forcibly expelled Muslim minority has been equated with those 'internally displaced' and they have been treated accordingly.

**THE IMPACT OF THE FORCIBLE EXPULSION**

The Forcible expulsion has created a number of socio- economic, Political and psychological problems for this minority group. Their wealth was robbed before their expulsion. They were allowed to take only about one thousand rupees when they fled from the north. On arrival in the safe areas, they were lodged in temporary buildings and later put in "welfare centres". These welfare centres were over- crowded and located in extremely unhealthy environments. The limited dry ration assistance and NGO's activities were used to 'manage' the refugee crisis.

The people who were affected by the involuntary mass expulsion were considered as no more than a 'displaced population' in this country. Yet no attempt has even made to assess the gradual deterioration of health, education, discipline and culture of this community in the refugee camp. In fact, it is already evident that there has been a gradual decline of the physical and moral qualities community

This community has been a victim of increasing ethnic violence. This refugee problem was not given prominence at the national and international levels because this community was numerically insignificant to make a political impact. In the same way, their problems have not even been taken up in the peace negotiations.

**THE PRIORITIZED PROBLEMS OF THE EXPELLED MUSLIMS**

In fact, the refugee problem of this community is a political problem. The LTTE which is fighting for a separate state in the Northern and Eastern Province is directly responsible for their forced expulsion. A Political solution has to be found for their return to their original places in the north. The re-sttlement of the community in the north should, therefore, be given priority. Once they are re-settled, the security and constitutional protectic have to be worked out.

**The Re-settlement in the North**

A framework for the re-settlement of the Muslim minority in their original places in the north has to be worked out through political negotiations. When this minority was forcibly expelled in 1990, they were singled out and denied their right to live in the north. They could north return to their original places of residence in the north fearing for their lives as the LTTE is still militarily powerful in the north.

However, as has been reported in the newspapers, there is a sign of hope in that the LTTE appears to be regretting the expulsion of Muslims from the north. Such a change of attitude on the part of the LTTE is encouraging. The re-settlement of the Muslims in their traditional settlements in the north must go along with a guarantee of the following rights:

(a) ***The Right to live in their traditional Settlements:*** The re-settlement of this refugee group has to be looked at from the standpoint that this group has been denied the right to live in their traditional settlements in the north. The fundamental rights of this minority group have to be guaranteed before their re-settlement. Thus, the right to live must be given the highest priority in the peace negotiations.

(b) ***Security:*** The re-settlement of this minority group has to be accompanied by an assurance from the national and international communities that the Muslim minority will not be expelled once again from their original places. In addition, short-term security measures must be taken by the appropriate authorities to safeguard the interests of the minorities in the region.

(c) ***Property Rights:*** The right to get back their movable and immovable assets must be assured. An independent arbitration commission must be appointed to look into the claim of the expelled Muslims regarding their properties (both movable and immovable). The same commission should be given necessary powers to resolve the disputes among the Muslims and between Muslims and non-Muslims regarding their rights to assets.

(d) ***Compensation:*** Compensation must be given for the loss of the movable and immovable properties of the forcibly expelled Muslims.

(e) ***Re-construction and Rehabilitation:*** Proper rehabilitation and re-construction have to be implemented to re-build the society which was completely rooted out from their traditional areas by forced expulsion. The affected people must be partners in the rehabilitation and re-construction process in the north.

(f) ***Refugee Status:*** Until the re-settlement of the refugees is commenced in the north, the present refugee living conditions have to be improved by implementing proper relief and rehabilitation programmes. The status of this internally displaced population must be re-defined giving proper recognition to their interest.

The above are the fundamental rights of any community. The basic rights of the Muslim minority



படிப்பகம்

padippakam



have to be politically recognized and provided for in an amicable way.

## SUITABLE MINORITY PROTECTION FOR THE MUSLIMS OF THE NORTHERN PROVINCE

A greater regional autonomy for the Northern and the Eastern Provinces is being considered as the way out of the on going civil war in this country. In such a situation, constitutional provision should be provided to ensure the protection of the interests of the Muslim minority in the region. What we are suggesting here are the most appropriate constitutional safeguards for a minority such as the Muslims of the North. The necessary measures of minority protection for the Muslims of the north are explained in detail in the statement of aspirations of the Muslim minority of the north (see annexed document). The following section provides the rationale for these specific recommendations.

(A) ***Geographical Distribution:*** Muslims are the principal minority group in the north. They consist of about 5% of the total population of the region. Though the Muslims are proportionately a small group, several Muslim concentrated areas are found in the Northern Province. For example, three locations in Mannar district (Musali, Erukklampiddy and Vidataltivu-Neeravipity and South of Mullaitivu district (Hijirapuram- Neeravipity and South of Mullaitivu town) and one very high Muslim concentration in Jaffna Municipality (Wards 19, 20 and 21) are important enough to mention here (see Diagram 2). The Muslim concentrated areas have land and resources for their development. Therefore, the above mentioned Muslim concentrated region should be created as special administrative units for Muslims. As the above mentioned administrative units will consist of about 75% of the total Muslims of the Northern province, the same time, areas where Muslims are concentrated and other individual settlements are scattered in all five districts of the Northern Province (see Diagram 1&2). Therefore, the socio-cultural interests of these noncontiguous Muslim settlement must be safeguarded through a cultural council for the Muslims of the north.

(B) ***Ethnic identity:*** Muslims are a very distinct and cultural group in the north. They consider their religion to be the most important aspect of their lives. The religion-cultural basis has given an identity to this community. They are very sensitive above their religious tradition. They strongly believe that their religion binds them together as separate group within the north and that it links them to the other Muslims in the county.

(C) ***Inter-ethnic Relations:*** The other important aspect of the Muslims of the north is that a very strong inter-ethnic link between the Tamil and the Muslims which had developed over the years was maintained until the forcible expulsion. The basis for this co-operative way of life between Muslim and the tamils of the north was their economic inter-dependence as well as a long tradition of mutual respect between the two communities.

Given the numerical, distributional, ethnic distinctiveness and harmonious inter-ethnic relations of this community in the north, we propose the following constitutional arrangement to safeguard the interests of the Northern Province Muslims:

(a) the right to live as a minority in the Tamil dominant province;

(b) the maximum fundamental and minority protection in the constitution;

(c) increased representation in the national and regional legislatures;

(d) the creation of new administrative units where Muslims form a majority for limited autonomy;

(e) special constitutional arrangements to form a "Muslim cultural council" to protect and develop their religio-cultural traditions.

The above mentioned minority safeguards, political representation and power-sharing together will satisfy the aspirations of the Muslim minority of the northern province. These minority protections are not unreasonable. They need not cause any conflict between majority and minority groups. Instead they will strengthen the links between them. This model may be applicable to minorities in the other areas as well.

## CONCLUSION

Special attention must be paid to the problems of the Muslim minority of the Northern Province in the peace negotiations. The reasons are the following.

1. No other community in the country has experienced mass expulsion.
2. No community has been kept for such a long time in welfare centres without any arrangements for re-settlement.
3. There is no immediate prospect of the re-settlement of the Muslims in the north. Thus, the situation demands the urgent attention of national and international communities to work out short and long term solutions to resolve the problems of the Muslims in the north.
4. The resolution of the problems of the Northern Muslims is dependent on constitutional reform as well as on negotiations between the parties concerned.
5. In many respects, the problems of Muslims of the north differ from the problems of the Muslims of the Eastern Province. Thus, different constitutional arrangements may be needed to safeguard the interests of the Muslim minority in the north.
6. The numerical smallness of the Muslim minority of the north should not be regarded as a reason to ignore the gravity of the problems of this community.



படிப்பகம்

padippakam

# 'வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு'
# NORTHERN MUSLIMS' RIGHTS ORGNIZATION" (N.M.R.O)

## பிரதான குறிக்கோள்

1. மீண்டும் பூர்வீகவிடத்தில் வாழும் உரிமை.
2. பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் ஏற்பட்ட அசையும், அசையாத ஆவண இழப்பீடுகளை மீளப்பெறும் உரிமை.
3. மீளக் குடியேறும் வரை இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் பொழுது சகல வசதிகளையும் பெற்றுக் கொள்ளும் உரிமை.
4. வட மாகாணத்தில் மீளக் குடியேறும் போது அச்சமின்றி தனித்துவத் தோடும் பூரண பாதுகாப்புடனும் வாழும் அரசியல் உரிமை.

**மேற்படி குறிக்கோள்களை அடைவதற்காக பின்வரும் செயல் திட்டங்களை இவ்வமைப்பானது நடைமுறைப்படுத்தும்.**

1. வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் புள்ளி விபரங்களைத் திரட்டுவது.
2. அவர்கள் மத்தியில் எதிர் காலத்தைப் பற்றிச் சிந்திக்கும் மனோநிலையை ஏற்படுத்துதல்.
3. இலங்கையில் வாழும் ஏனைய மக்கள் மத்தியிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் வடமாகாண முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியம் பற்றியும், அகதிகள் தொடர்பாகவும் அறிவை வழங்குதல்.
4. இந்நோக்கத்தை அடையும் பொருட்டு கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பத்திரிகையாளர் மாநாடுகள் போன்றவற்றை நடத்துதல். இவ்வகையான முயற்சிகளின் பிரதிபலன்களை பிரசுரங்களாக வெளியிடுதல்.
5. அரசியல் தீர்வொன்றிற்கு வடமாகாண முஸ்லிம்களின் அபிப்பிராயங்களை ஒன்று திரட்டி அதற்காகத் தயார்படுத்தல்.
6. இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு தேசிய, சர்வதேச ரீதியில் பொது அபிப்பிராயத்தை ஏற்படுத்துதல் என்பனவாகும்.

இவ்வமைப்பில் அங்கம் வகித்து, தாயக மண்ணை மீட்பதற்கும், எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கும் தங்களது பங்களிப்பைச் செய்ய முன்வர விரும்புவோர் இதன் அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
செயலாளர்,
**வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு**
**15ஏ, ரோகினி வீதி, வெள்ளவத்தை,**
**கொழும்பு - 06**

படிப்பகம்

padippakam

# நரம்பிலா யாழில் பிறக்குமோ நாதம்

தம்பிகள் செல்கின்றார் - பிரிந்தே
தம்பிகள் செல்கின்றார்

நம்பிக்கை நலிந்ததோ
தோழமை மறந்ததோ

பனைவெளித் தென்றலில் பழகிய மூச்சை
பெற முடியாமல் பிரிந்தனர் அந்தோ

மேல்வான் இளம் பிறையை
ஏனோ காணவில்லை
இருள்மயம் ஆட்சி செய்தால் - உலகில்
மானுடம் வாழ்ந்திடுமா

நரம்பிலா யாழில் பிறக்குமோ நாதம்
நதிக்கரை உடைந்தால் புனல் திசை மாறும்

பாங்கொலி தென்றலிலே
செவிகளைத் தேடிடுமே
பள்ளி மினராக்களே - வானை
பார்த்துளம் ஏங்கிடுமே

தென்றலில் தீயும் பிடித்திட வேண்டாம்
தேன்மலர் இதழ்கள் துவண்டிட வேண்டாம்
சீதள மழைத்துளியே
சிந்திட வேண்டுமம்மா
சாந்தியின் புவனமே - நிதமும்
பூத்திட வேண்டுமம்மா

எம்.எச்.எம். ஷம்ஸ்

அகதி இதழ் 15A, ரோஹினி வீதி, கொழும்பு 6 வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பினரால் ஏ.ஜே பிரின்டர்ஸ் இல. 18 பீ.சி.டி சில்வா மாவத்தை, தெஹிவளையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்